ஊழியன்

தேசீய சித்திர வாரப்பத்திரிகை

24—8—34.



தென்மலை சுரங்கத்தில் எஸ். ஐ. ஆர். வண்டி வருங் காட்சி. Pon.

ஊழியன்

ஆசிரியன்—ராய. சொக்கலிங்கன்.

மலர் கச. சென்னை, பவ௵ ஆவணி௴ 8௳ வெள்ளி (24-8-1934) இதழ் அ.

இந்தியத்தாய் முடிசூடி எழிற்சிங்கா
தனமேறி ஈடிலாது
சொந்தவா சேபுரியத் துயர்போக்கி
யாவருமே சுகவாழ் வெய்த
இந்நிலம் வந்தவருள் இலைபிறப்பில்
இழிவுயர்வென் இயற்கை ஓங்க
நந்தலிலா ஊழியமே நான் கொண்டேன்
நல்லனவெந் நாளும் வாழ்க!

தேர்தல் வேலை

இந்தியச் சட்டசபைத் தேர்தல் வேலை எங்கும் மும்முரமாக நடைபெறுகிறது. காங்கிரஸ் இதில் கலவாது ஒதுங்கி யிருந்தபோது, பட்ட வேட்டை யாடுவதும் பதவி மோகங் கொண்டதுமான தம் நலந் தவிர வேறு எதையும் அறியாத—தமக்கு ஏதும் கிடைக்குமானால் நாட்டைக் காட்டிக்கொடுக்கச் சிறிதும் அஞ்சாத ஒரு கூட்டம் சட்டசபைகளுள் எளிதாக நுழைந்து அலங்காரமாக வீற்றிருந்தது. இப்போது காங்கிரஸ் இந்தியச் சட்டசபைக்குள் நுழைய முடிவு கட்டியவுடன் தங்கள் பரம்பரை உரிமை பறிபோய் விட்டதாக இக்கூட்டம் ஆங்காங்கு பரிதபிக்கின்றது.

பொதுஜன நன்மையை நாடுவதில்—நாட்டின் நலன் ஒன்றையே நாடி உழைப்பதில் இணையற்ற அரசியல் ஸ்தாபனம் இந்தியாவில் காங்கிரஸ் ஒன்றே என்பதை எந்த உண்மையாளனும் மறுக்கலாற்றான். அத்தகைய காங்கிரஸ் இந்தியச் சட்டசபையைக் கைப்பற்ற விரும்புகிறது. காங்கிரஸ் அங்ஙனம் விரும்புவது சட்டசபைப் பீடங்களில்கொண்ட மோகங் காரணமாகவா? அன்று! அன்று!! இன்று இந்தியச் சட்டசபைக்குக் காங்கிரஸ் சார்பா[illegible] அபேட்சராக நிற்போரில் பல்லே[illegible]டன் விடுதலை ஒன்றையே [illegible]தங்கள் பெரு வாழ்வைத் து[illegible]து—கொடுப்பதைத் தின்று—பூட்டப்பட்ட கம்பிக் கதவு அறைகட்குள்ளே கிடந்தோர் என்ற சமீப கால நிகழ்ச்சியையும் அன்னார் இன்றைக்கும் சட்டசபைப் பீடங்களை விடுத்துச் சிறைக்கூடங்களை அலங்கரிக்கும்படி காங்கிரஸ் கட்டளை யிடுமானால் அதனை வரவேற்கக் காத்துக்கொண் டிருக்கின்றனர் என்பதையும் நாடு நன்கு அறியும்.

காங்கிரஸ்காரர் சிறையை நோக்கி எந்த நோக்கோடு புறப்பட்டனரோ அந்த நோக்கத்தோடுதான் சட்டசபைக்கும் நிற்கின்றனர். அன்னார் சிறை சென்றது நாட்டின் நலன் ஒன்றையே நாடி என்பதை யாரும் மறுக்க முடியாது. இப்போது அவர்கள் இந்தியச் சட்டசபையை நாடுவதும் அதே பரந்த நோக்கம் கொண்டுதான். அரசினரின் போக்கைத் தடுக்கும் ஒரே நோக்கங்கொண்டு காங்கிரஸ் சட்டசபைக்குச் செல்ல முயலும்போது அதைத் தடுக்க எந்தக் காரணங் கொண்டு எவர் முயன்றபோதினும் அது தேசத் துரோகச் செயல் என்பது உறுதி! உறுதி!! முக்காலும் உறுதி!!!

பலர், காங்கிரஸ் தலையிடாததால் சட்டசபைகளில் இதுகாறும் ஒட்டிக்கொண் டிருந்தனர். இன்றும் அவர்களுக்கு அப்பீடங்களை விட்டுவிலக மனமில்லை. நாட்டின் சரியான பிரதிநிதித்வ சபையாகிய காங்கிரஸ் இந்தியச் சட்டசபையைக் கைப்பற்ற முன்னிற்கும்போது இதுவரை எந்த நலனும் ஆற்றாது அங்குத் தலையாட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தோர் வாயை மூடிக்கொண்டு ஒதுங்கி விடுதலன்றோ ஒழுங்கு? என்ன செய்வது! பதவியாசைதான் விடமாட்டேன் என்கிறது. அவர்களைச் சொல்ல என்ன இருக்கிறது? அவர்கட்கும் இன்னும் நாட்டில் ஏதோ ஆதரவிருக்கிறது என எண்ணத்தக்க நிலையும் நாட்டில் ஓரளவு இருப்பதனாற்றான் அவர்களும் பார்க்கலாம் என நினைக்கின்றனர். என்றாலும் காங்கிரசோடு போட்டி போடுவார் வெற்றி பெறுவார் என நாம் நினைக்கவில்லை. அப்படியும் நிகழுமானால் தியாகத்தின் பெருமையை—ஏன்? தனது நன்மையைக்கூட இந்


தியா உணரவில்லையென்பதைத் தவிர வேறென் கூறுவது?

தேர்தல் வேலையைக் காங்கிரசும் தொடங்கி விட்டது. அதன் எதிரிகளும் ஆரம்பித்து விட்டனர். எங்கு பார்த்தாலும் பிரசங்கங்கள்; பிரசாரங்கள். பத்திரிகைகளிலெல்லாம் பெரும் பகுதி தேர்தற் கட்டுரைகளே. சில தினசரிப் பத்திரிகைகளில் தேர்தலுக்கு நிற்போரின் வீரதீரப் பிரதாபங்கள் பக்கம் பக்கமாக வெளி வருகின்றன. 'தேர்தல்' என்றாலே 'புரட்டு' என்று பொருள் கொள்ளலாம். உலக முழுமையும் தேர்தலின் நிலை அப்படியிருக்கும்போது அது இந்தியாவை மட்டும் எப்படி விடும்? இவ்விதியில் காங்கிரஸ்காரரை நாம் விலக்கி விட்டோம் என்று எவரும் கருதவேண்டாம். எங்கும் இருக்கலாம். ஆனால்,

பொது ஜனங்கள் ஒன்றையும் உணர முடியாத சாம்பிராணிகள் என நாம் கருதவில்லை. தேர்தலில் எத்தனை புரட்டுக்களை எவர் செய்தபோதினும் பொதுவான உண்மையைப் பொது மக்கள் உணர்வரென்றே நம்புகிறோம். தேர்தலுக்கு நிற்போர்க்கு வேண்டிய தகுதி என்ன என்பது மக்கட்குத் தெரியாதா? பொதுவாகப் பார்க்கும்போது காங்கிரஸ்காரன் என்ற முறையில் நிற்கின்ற ஒன்றைவிட வேறு தகுதி வேண்டாம். அன்றிச் சிறப்பாக வேண்டுமானாலும் ஒவ்வொருவரையும் சீர்தூக்கிப் பார்க்கலாம். அப்பொழுதும் காங்கிரஸ் அபேட்சகர் தகுதியில் பின்னடைவார் என்று இயம்புதற்கில்லை.

தேர்தலில் சிலரால் வீணாகப் பொருளேயில்லாமல் பிராமணர்—அல்லாதார் போன்ற வீண் சண்டைகளைக் கிளப்பப் பெருமுயற்சி செய்யப்படுகிறது. இச்சூழ்ச்சி பலிக்காது என்பதை இக்கிளர்ச்சிக்காரர்கட்கு உணர்த்த வேண்டுவது பொது மக்கள் கடன். காங்கிரஸ்காரர் இந்தியச் சட்டசபையில் பெருவாரியான இடங்களைப் பிடித்துக் கொண்டு அரசாங்கத்தாரை எதிர்க்கும் ஒரே நோக்கத்தைக் கொண்டிருக்கின்றனர். காங்கிரசுக்குப் புறம்பே நிற்கும் எந்த அபேட்சகரையும்எதிர்த்துத்திரல் அவர்கள் கடன். எனவே, காங்கிரசைத் தவிர வேறு எவரை ஆதரிப்பதும் மறைமுகமாக அரசாங்கத்தாரை ஆதரித்ததாகவே ஆகும் எனச் சொல்லவும் வேண்டுமோ?

அன்பர்களே! தேர்தல் வேலை ஜகசாலப் புரட்டாகவே இருக்கும். ஒருவர் "நான் நன்றாகப் பேசுவேன்; என்னை ஆதரியுங்கள்! இதில் கட்சிகளெல்லாம் பார்க்கக்கூடாது; எந்தக் கட்சியாக இருந்தாலும் யார் திறமைசாலியோ, அவர்களை அனுப்புங்கள்" என்று அழகாகப் பேசுவார். இன்னொருவர் "நான் மகாப் பெரியவன்; தலைமை வகிக்கக்கூட நான் பழகியிருக்கிறேன்; என்னையே ஆதரியுங்கள்." என்று உரைப்பார். மற்றொருவர் "நான் பழைய தேச பக்தன்! பழைய காலத்திலேயே சிறைக்குச் சென்றிருக்கிறேன்! எனது சிறை வாழ்வு இப்போது காலாவதிகூட ஆகிவிட்டது! பிராமணரல்லாதார் தனிப்பெருந் தலைவன் நான் ஒருவனே! காங்கிரசைவிட நான் பெரியவன்! நான் மட்டும் சட்டசபைக்குள் நுழைந்து விட்டால் எல்லாம் செய்து விடுவேன்" என்பார். எல்லாவற்றையும் ஆராய்ந்து எவர் உண்மையில் நாட்டின் நன்மையை நாடும் கட்டுப்பாடுள்ள ஸ்தாபனத்தின் சார்பாக நிற்கிறாரோ அவரையே ஆதரியுங்கள்!



உலகத்தின் பெரிய அணைக்கட்டுகளில் ஒன்றான மேட்டூர் அணையை மாட்சிமை தங்கிய சென்னைக்கவர்னர் திறந்துவைக்கிறார். படத்தின் வலப்பக்கத்திலிருந்து; ராவ்பகதூர் நரசிம்ம அய்யங்கார், சீப் எஞ்ஜினியர், ஸர் ஜார்ஜ் ஸ்டான்லி, லேடி ஸ்டான்லி, ஹான், காம்பெல், மேட்டூர் அணை சூப்பிரண்டு திரு. கார்டன் பார்பர் நிற்கிறார்கள். —P.P.B.

இடி முழக்கம்

சென்னை ஜில்லா அரசியல் மகாநாடு


சென்னை காங்கிரஸ் மண்டபத்தில் சென்னை ஜில்லா அரசியல் மகாநாடு கூடியது. அதன் தீர்மானங்களையும் முக்கிய பிரசங்கங்களையும் வேறு பக்கங்களில் காணலாம். வரவேற்புத் தலைவரின் பிரசங்கமும், அன்று தலைமை வகித்த திரு. அவினாசிலிங்கம் அவர்களின் உரையும், திறப்பாளர் சொற்பெருக்கும் காங்கிரஸின் இலக்ஷியத்தை எடுத்துக் காட்டுகின்றன. அன்னிய ஆட்சியிருக்கும் எந்தத் தேசத்திலும் ஆளுவோர், ஆளப்படுவோர் என்ற இரண்டு கட்சிகள்தான் இருப்பது இயற்கை. குழப்ப சமயத்தில் தன்னலங்கருதி வெளிவரும் போலி அரசியல் வாதிகளுக்கு நெருக்கடியான சமயங்கள்தான் சரியான காலம். அரசியலும், அம்மாதிரி அரசியல் வாதிகளைக் கொண்டு சில காரியங்களைச் சாதித்துக் கொண்டு, பொதுஜன சம்மதத்தில் ஆளுவதுபோல் ஒரு பிரமையை உண்டு பண்ணச் சாத்தியமாகிறது. இதைத் தடுப்பது நாட்டின் சுதந்திர வளர்ச்சியில் ஒரு முக்கிய அம்சம். காங்கிரஸ் அந்த இலக்ஷியத்தை வைத்துக் கொண்டே சட்டசபைப் பிரவேசத்தை மேற்கொண்டது என்பதைத் தலைவர் சொற்பெருக்கு நன்கு காட்டுகிறது.

கல்கத்தா தேசிய மகாநாடு

பண்டித மாளவியாவின் தேசியக் கட்சியை ஸ்தாபிக்கக் கல்கத்தாவில் ஒரு மகாநாடு கூடிற்று. அதில் காங்கிரஸ் வாதிகள்தாம் அங்கத்தினர்கள். எப்படியிருந்தாலும் கட்சிப்பிளவுகள் ஏற்படுவது ஒரு பெரிய சமுதாயப் போரில் எப்பொழுதும் நல்லதல்ல. பெரிய பிரச்னைகளை மறந்து, சிறிய விஷயங்களுக்காக மாறுபடுவது எதிரிகளின் பலத்தை பதிகப்படுத்துமே யொழிய வேறு இல்லை.

ஹிட்லரின் வெற்றி

ஹிட்லருடைய சான்ஸிலர் பதவியுடன் அவருக்குத் தலைமைப் பதவியும் கிடைத்து விட்டது. வோட்டுப் போட்ட தொகை 43438, 373. அதில் மூன்று கோடியை எண்பத்திரண்டு லட்சத்து எழுபத்தொன்பதினாயிரத்து ஐந்நூற்றுப்பதினான்கு பேர் ஹிட்லருக்குச் சாதகமாக வாக்களித்திருக்கின்றனர். எனவே ஹிட்லர் பெருவாரியான ஓட்டுக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். ஹிட்லர் தேர்தல் முறைகளில் அனுவசியமான கட்டாய முறைகளைக் கையாண்டு இருக்கலாம். ஹிட்லர் ஆதிக்கம் தறிகெட்ட அடக்கு முறைகளைக் கையாளும் ஏதேச்சாதிகாரமாக இருக்கலாம்; ஆனால் ஐரோப்பிய சரித்திரத்தின் சமீப காலப் போக்கையும் உலக சரித்திரத்தின் வளர்ச்சியில் இதுவரைக்கையாளப்பட்ட முறைகளையும் கவனித்தால் இது புதிதல்ல என்று நன்கு விளங்கும். பொது ஜனங்களுக்குச் சாதகமாக, அவர்கள் நன்மையைக் கோரியே செய்பவன் நேர்மையுள்ள சர்வாதிகாரி. அவனுடைய வழி இரத்த வழியாக ஹிம்சை முறையைக் கையாண்டதாக இருக்கலாம். அவன் பொது ஜனங்களுக்குச் செய்யும் நன்மைகள்தாம் அவனை அந்தப் பதவியில் வைத்திருக்கும். ஹிட்லரின் வெற்றி இதற்கு உதாரணமா? அல்லது அது நாட்டின் குழப்பத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு முன்னணிக்கு வந்த ஒரு அரசியல் கொள்ளைக்காரனின் வெற்றியா?



19-8-34-ல் திருச்சியில் நடந்த சமூகச் சீர்திருத்த மகாநாட்டில், 'தமிழ்நாடு' ஆசிரியர் திரு. வரதராஜுலு நாயுடு தலைமை வகித்தார். அப்பொழுது எடுத்த படம்.

சார்ஜென்ட்:—புதிதாகப் படையில் சேர்ந்தவன் முன்பு குமாஸ்தாவாக இருந்திருக்க வேண்டும்.

கமிஷனர்:—ஏன்?

சார்ஜென்ட்:—ஒவ்வொரு தடவை டிரில் முடிந்ததும் துப்பாக்கியைக் காதில் வைத்துக்கொள்ள முயலுகிறான்.

எல்லோரும் ஓர் குலம்!

செய்தித் திரட்டு

சீனாவில் வெள்ளி ஏற்றுமதித் தடை

சீனாவிலிருந்து அதிகமாக வெள்ளி ஏற்றுமதி செய்யப்படுவதாலும், அமெரிக்காவில் ரூஸ்வெல்ட் திட்டத்தினால் வெள்ளிக்கு மதிப்பு ஏற்பட்டு விட்டதினாலும் சீன அரசாங்கம் அதைத் தடுக்க உத்தேசித்திருப்பதாக வதந்தி யுலாவுகிறது. 60,000,000 டாலர் பெறுமான வெள்ளி வெளியேறி யிருக்கிறது. அதில் 50,000,000 பெருமானம் லண்டனுக்கும் மீதி நியூயார்க்கிற்கும் சென்றது. இதற்குமேல் 30,000,000 டாலர் பெறுமானமுள்ள வெள்ளி ஷாங்ஹேயிலுள்ள அன்னியநாட்டு பங்கிகளின் வசம் இருக்கிறது. அதுவும் ஆகஸ்ட் முடிவிற்குள் வெளிச்சென்றுவிடும்.

இந்த வதந்திக்கு ஆதாரமாகச்சென்ட்ரல் பாங்கியின் தலைவரும் பிறநாட்டு இலாகாவின் ஆலோசனை யாளரும், ஆகாய விமானத்தில் குல்லிங்கிற்குச் சென்று ஷியாங்கெய்செக்கையும், பொக்கிஷ மந்திரி திரு. எச். எச். குங்கையும் சந்தித்தார்கள்.

* * *

அமேரிக்க லேபர் பெடரேஷன்

நெசவுத் தொழிலைச் சேர்ந்த பல கிளைகளிலும் இப்பொழுது வாவிருக்கும் வேலை நிறுத்தத்திற்கு, அமெரிக்க லேபர் பெடரேஷன் உதவி செய்கிறது. இதில் 825,000 தொழிலாளிகள் சம்பந்தப்படுவார்கள். செப்டம்பர் முதல் தேதியிலேயே பஞ்சுத் தொழிலாளிகள் வேலை நிறுத்தத்திற்குச் சாதகமாக வோட்டுக் கொடுத்தார்கள். சம்பளம் உயரவேண்டும் என்றும், வேலை நேரங்களைத் திட்டப்படுத்த வேண்டும் என்றும், யூனியன் அங்கத்தினருக்கு இருக்கும் எதிர்ப்பு மனப்பான்மை விலகவேண்டும் என்றும் சொல்லி இதற்காக வேலை நிறுத்தத்தை யாரம்பித்தார்கள்.

* * *

அமேரிக்காவில் மழைத்தட்டில்லாமல் இருக்க

அமெரிக்காவின் மேற்குப் பகுதியின் மத்தியில் தண்ணீர்த் தட்டினால் பஞ்சம் வாராமலிருக்கும்படி பிரஸிடென்ட் ரூஸ்வெல்ட் ஒரு புதிய முறையைக் கையாளுகிறார்.

வட மேற்காகக் கானடா எல்லையிலிருந்து டெக்ஸாஸ் பிரதேசம் வரை நூற்றுக் கணக்கான மைல்களை ஒரு காட்டுப் பிரதேச மாக்கி விட முயலுகிறார். அந்தக் காடுகள் நூறு மைல் அகலமாக இருக்காது. ஆனால்ஒவ்வொரு மைல் இடை வெளி விட்ட நூறு பிரிவுகளாக இருக்கும். இந்த நிலங்களைக் கவர்மென்ட் விவசாயிகளிடமிருந்து விலைக்கோ குத்தகையாகவோ வாங்கி விடும். ஆனால் எத்தனையோ விவசாயிகள் இதனால் ஏற்படும் நன்மையைக் குறித்துச் சும்மா கொடுத்துக் கவர்மென்ட்டுடன் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறார்கள். இம்மாதிரி காடாக்கப்படும் நிலம் 2,000,000 ஏக்கர்கள். இதனால் நன்மை யடையும் நிலம் 20,000,000 ஏக்கர்கள். இதற்கு மொத்தமாக 75,000,000 டாலர்கள் செலவாகும் என்று நினைக்கிறார்கள். இதில் 10,000,000 டாலர்கள் இப்பொழுதே செலவு செய்ய வேண்டியிருக்கும்.

* * *

ஜப்பான் பூகம்பம்

நோகியோ பிரதேசத்தை யடுத்து ஒரு பயங்கரமான பூகம்பம் நிகழ்ந்தது என்று தெரிகிறது. இதுவரை ஏற்பட்ட சேதங்களைப்பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை. அதன் அதிர்ச்சி கியோட்டோ பிரதேசம் வரை வீடுகளைக் குலுக்கிற்று. ஒஸாகாவில் பூமி சிறிது ஆட ஆரம்பித்தவுடனே ஜனங்கள் பயந்து வெளியே ஓடி வந்ததாகத் தெரிகிறது.

* * *

அனடோலியாவில் வெள்ளச் சேதம்

துருக்கியைச் சேர்ந்த வடக்கு அனடோலியாவில் தோகாட், ஜில்க் என்ற பிரதேசத்தில் வந்த பெரு வாரியான வெள்ளத்தினால் 1500 பேர்களுக்கு வீடுகள் அழிந்து போயின. 13 விவசாயிகள் இறந்து போனார்கள். தோகாட் பிரதேசத்தில் சில பாலங்கள் இடிந்து போயின. ஒரு முகமதிய மஸூதியும் இடிந்துவிட்டது.

குற்றவாளிகளைத் தண்டிக்க

மாஸ்கோவின் முக்கியமான பார்க்கில் அநாகரிகமான வெறுக்கத்தக்க நடத்தைகளுடன் இருப்பவர்களைத் தண்டிக்க ரஷ்யா ஒரு புதிய முறையைக் கையாளுகிறது. குடித்துவிட்டுக் கூச்சல் போடுவது, அங்கு இருக்கும் புஷ்பச் செடிகளை நாசம் செய்வது, அங்கு வெறுக்கத் தக்கபடி நடந்துகொள்வது இவை எல்லாம் குற்றங்கள். இதற்குத் தண்டனையாகக் குற்றவாளிகள் அப்பொழுது இருந்த நிலைமையைக் காட்டும்படி ஒரு சிலை செய்து, இவர் இந்தக் குற்றத்திற்காக என்ற இவ்வளவு விபரங்களுடன் அந்தப் பார்க்கில் முக்கியமான இடங்களில் வைத்து விடுகிறார்கள். இப்படிப் பொதுஜன அவமதிப்பிற்குக் கொண்டு வந்து விடுவதால் அந்தக் குற்றங்கள் குறைந்துவிடும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

கையாடல் கேஸ்

காரைக்குடியில் தற்பொழுது சுதேசமித்திரன் பத்திரிகை ஏஜண்டாகவுள்ள ஆர். எம். செல்லமய்யர் ஷெடியூர் எம். சிதம்பர தேசிகர் பேரில், எதிரி சிதம்பர தேசிகர் வாதியிடமிருந்து சுதேசமித்திரன் பத்திரிகை ஆலயத்திற்குச் சேர வேண்டிய வசூல் பணத்தை ஷெ பத்திரி காலயத்திற்கு அனுப்பாமல் தன் சொந்தத்திற்கு உபயோகப்படுத்தி ஷெ தொகையைச் சுதேசமித்திரன் மானேஜருக்குஅனுப்பி அதற்கு அவர் தொகை பெற்றுக் கொண்டதாகக் கடிதமெழுதியது போல் மானேஜர் பெயரை வைத்து ஒரு பொய்க் கடிதம் தயார் செய்ததாகவும், இவ்வூர் ஜாயிண்டு மாஜிஸ்ட்ரேட்டு கோர்ட்டில் போடப்பட்டுள்ள வழக்கில் ஜாயிண்டு மாஜிஸ்ட்ரேட்டு உயர் திரு. டி. எஸ். ஸ்வாமிநாதன் ஐ. சி. எஸ். அவர்கள் 15—8—34ல் எதிரி இ. பி. கோ. 477 (ஏ), 468 வது பிரிவுகளின் படி மேற் கூறப்பட்ட குற்றங்களுக்கு விசாரிக்கப்பட வேண்டுமென எதிரி மீது குற்றப் பத்திரிகை வாசித்தார். எதிரி ஸ்டேட்மெண்டு தாக்கல் செய்வதற்கு மறு வாயிதா ஏற்பட்டிருக்கிறது.

அன்பே சிவம்!

: : காந்தி புகழ் பாடுமின்! : :

ராய. சொ.

ஆங்கீரச ஆவணி ௨௨௳ வேலூர்ச் சிறையில் பாடப்பட்டது.

வஞ்சித் தாழிசை.

(௧)

காந்தியிக் காசினி
வாழ்ந்திட வந்தனன்;
சாந்தனைச் சார்ந்திட
மாந்தர்காள் வம்மினே!

(௨)

மோகனன் மொய்ம்பினன்!
ஏகனிவ் இரும்புவிக்
காகலான் அடைந்திட
வாகுடன் வம்மினே!

(௩)

அன்னைநோய் அகற்றுசீர்
வன்பெரும் மகாத்மனின்
பொன்னடி பொருந்திட
மன்னுவீர் வம்மினே!

(௪)

தாயவள் களைகொல
மேயவன்! மேலவன்!
நாயகன்! நற்றவத்
தூயனைத் துதிசெய்மின்!

(௫)

வேதனை வீழ்த்திட
மேதினி மேவினேன்!
காதலன் காந்திசீர்ப்
பாதமே பாடுமின்!

(௬)

தன்னிகர் தானவன்!
நன்னயன்! நலிவிலான்!
அன்னவன் அணிதிகழ்
பொன்னடி போற்றுமின்!

(௭)

புத்திரி புத்திரன்!
வித்தகன்! மெய்யறம்
இத்தரை எங்கணும்
மெத்துவீர் வீரர்காள்!

(௮)

அறிவுடை அந்தணன்!
செறிதரு சீரறம்
தறையெலாம் தங்கிட
நிறைசெய்வீர் நேயர்காள்!

(௯)

செய்தவன்! சீர்த்தியன்!
கய்தவக் கருத்திலான்!
அய்யனல் லறந்தனைச்
செய்குவீர் தீரர்காள்!

(௧௦)

கருணைகொள் காந்தியின்
பெருமைகொள் பேரறம்
அருமைகொள் அவனியில்
உரிமையா உணர்த்துவீர்!

(௧௧)

எள்ளலில் எம்முடை
வள்ளலின் மன்னறம்
அள்ளியே அவனிசீர்
கொள்ளுமா கொளுத்துவீர்!

(௧௨)

காந்தியின் கருத்துடைச்
சாந்தமார் தண்ணறம்
வாய்ந்தஇம் மாநிலம்
மாந்துமா வழுத்துவீர்!

ஹிட்லரின் வாழ்க்கைக் குறிப்புகள்

ஹிட்லர் ஒரு ஆஸ்திரிய சுங்கச் சாவடி ஆபீசருடைய மகன். அவர் தாயார் பொஹீமிய தேசத்துப் பெண். இவர் 1889-வருஷம் ஏப்ரல் 20 தேதியில் பிறந்தார்.

1912ல் ஆஸ்திரியத் தலை நகரான வியன்னாவை விட்டு மியூனிக்கிற்கு வந்தார் (Munich). உலக மகா யுத்தத்தில் பவேரிய காலாட் படையில் சேர்ந்து கொண்டதால் ஆஸ்திரிய பிரஜைத்துவத்தை இழந்தார். இரண்டு தடவை இவருக்கு யுத்தத்தில் காயம் பட்டது.

1920 பிப்ரவரி 4 தேதியில் ஜெர்மன் தேசிய பொது உடைமைத் தொழிலாளர் கட்சி ஒன்றை ஸ்தாபித்தார். அதில் ஹிட்லரைச் சேர்த்து ஏழு அங்கத்தினர்கள்தாம்.

‘பீர் புஷி’ற்காக 1923 நவம்பர் 8 தேதி சிறை சென்றார்.

கூட்டுக் கட்சி அதிகாரத்திற்கு வந்த பொழுது பிரஸிடண்ட் ஹின்டன்பர்க்கால் 1933 ஜனவரி 30 தேதி சான்ஸலர் ஆக்கப்பட்டார்.

1933 மார்ச் 23 தேதியில் ஆக்ஞையினால் ஆள ஹிட்லர் காபினட்டிற்கு ரீஷ்டாக் வோட்டுக் கொடுத்தது.

அதே வருஷம் நவம்பர் 12-ல் ஹிட்லரின் பிற நாட்டு அரசியல் சம்பந்தத்தைப் பற்றிய கொள்கைகளைப் பிளிபிஸைட் ஒப்புக்கொண்டு வோட்டுக் கொடுத்தது.

1934 ஜூன் 14-ல் ஜெர்மனி அன்னியக் கடனைக் கொடுப்பதை நிறுத்துவதாக அறிக்கை வெளியிட்டது. ஜூலை முதல் தேதி அது அமுலுக்கு வந்தது.

இந்த வருஷம் ஜூன் 17-ல் வைஸ் சான்ஸலர் வான் பேப்பன் நாஜிக் கொள்கைகளை எதிர்த்தார்.

ஜூன் 30-ல் ஹிட்லரின் ரத்த வெறியும் ஸ்டார்ம் படைகளை சீர்திருத்தியதும்.

ஆகஸ்ட் 2-ல் ஹின்டன்பர்க் காலமானார். ஹிட்லர் “ஜெர்மன் மக்களின் தலைவர்” என்று பட்டம் சூட்டிக் கொண்டார்.

ஆகஸ்ட் 19 தேதி ஜெர்மன் ரிபப்ளிக்கிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஸ்ரீமதி லட்சுமி அம்மாள் சொற்பெருக்கு

சென்னை ஜில்லா அரசியல் மகாநாட்டைத் திறந்து வைத்தபோது கல்லிடைக் குறிச்சி ஸ்ரீமதி லெட்சுமி அம்மாள் அவர்கள் பேசியதன் சுருக்கம்:—

புத்திசாலித்தனம் போதுமா?

"சென்னை மாகாணத்தார் புத்திசாலிகளென்று இந்தியா வெங்கும் பெயரெடுத்திருக்கிறார்கள். அவர்கள் புத்திசாலிகளா யிருப்பதால் தீவிர தேசபக்தியோ வீரமோ இல்லையென்று பிற மாகாணத்தார் கேலி செய்கிறார்கள். பம்பாயையும், கல்கத்தாவையும் சென்னையுடன் ஒப்பிட்டு இழிவாய் பேசுகிறார்கள். இதைக் கேட்கும்போது நாம் தலை குனிய வேண்டியிருக்கிறது. கல்கத்தாவிலும், பம்பாயிலும் நடந்த காங்கிரஸ் வேலைகள் சென்னையில் நடக்க வில்லை யென்பதும், அங்குள்ள தேசிய உணர்ச்சி இங்கில்லை யென்பதும் உண்மையே. இந்தப் பழிச் சொல்லை நாம் கேட்டுக் கொண்டிருப்பதா? இந்தியாவில் அடிமை ராஜ்யம் ஏற்படுவற்குச் சென்னைதான் முதலில் இடங் கொடுத்தது என்ற பெரிய பழி ஒன்று போதாதா? இதை நீங்க நாம் முயற்சிக்க வேண்டும். நீங்க வேண்டுமானால், சென்னையால் இந்தியா சுயராஜ்யம் பெற்றது என்ற பெருமையை நாம் தேட வேண்டும். மூளையை மட்டும் கூர்மைப் படுத்தினால் போதாது. இருதயமும் வேண்டும். சுயராஜ்யத்தை எட்டிய தூரம் வரையில் காண முடியவில்லை. ஆனால் அழகாகத் தர்க்க நியாயங்களுடன் சிறந்த ராஜீய வியாசம் எழுத மட்டும் கற்றுக் கொண்டால் என்ன பிரயோசனம்? அமெரிக்க சுதந்திர யுத்தத்தைப் பற்றியும், அதன் காரணங்களைப் பற்றியும் அழகாகக் கட்டுரைகள் எழுதி மாணவர்கள் மெடல் வாங்குகிறார்கள். ஆனால் அவர்கள் மனதில் சுதந்திர உணர்ச்சியைக் காணவில்லை. பிரெஞ்சுப் புரட்சியைப் பற்றிச் சிறந்த வியாசம் எழுதி மேல் நாடுகளில் புகழ் பெறுகிறார்கள். ஆனால் எழுதுகிறவர்கள் மனதில் சாத்துவச்சுடரைத் தேடித் தேடிப் பார்த்தாலும் காணவில்லை. சர்வ தேச சங்கத்தின் சட்ட திட்டங்களை இவ்வு பகலும் படித்தறிந்து, அதற்கு எப்படி மனுத் தயாரிப்பது என்று சிலர் கண்டு பிடிக்கிறார்கள். ஆனால் வலிமையற்ற நாடுகள், முன்னால் கொடுத்த மனுக்கள் எல்லாம் என்ன கதியை அடைந்தன என்ற ரோஷம் ஏற்படுவதில்லை. இம்மாதிரி புத்திசாலித் தனத்தால் நமக்கு என்ன பலன் ஏற்படப் போகிறது? ஒன்றுமேகிடையாது. சுயராஜ்யம்பெற்ற பின்பு இந்தப் புத்திசாலித்தனம் நமக்கு உபயோகமாயிருக்கலாம். அதாவது சுவர் கட்டிய பின்பு சித்திரம் அழகாயிருக்கலாம். சித்திரத்திற்கு ஆதாரமாய் இருக்கும் சுவர் எங்கே? ஆகவே நாம் வெறும் புத்திசாலிகள் என்ற பெயர் எடுப்பது போதாது. தேசத்திற்குச் சுயராஜ்யம் சம்பாதிக்கும் தீரமும் நம்மிடம் உண்டு என்பதைக் காட்ட வேண்டும். அதைக் காட்டாத வரையில் நம்முடைய வெறும் புத்திசாலித்தனம் நமக்குப் புகழ்ச்சி யல்ல; இகழ்ச்சியே யாகும். ஆகவே இனி நடக்கப்போகும் காங்கிரஸ் வேலைகளில் முன்னைவிட ஆயிரம் மடங்கு அதிகமாக நாம் ஊக்கங் காட்டி, நமக்கு ஏற்பட்டிருக்கும் பழிச் சொல்லை நீக்குவோமாக.



பம்பாய் காங்கிரஸ் வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்கள் ஓர்லி கடற்கரையைக் காங்கிரஸ் கூடுவதற்கு இடம் தேர்ந்தெடுப்பதற்காகப் பார்வையிட்டார்கள். முனிசிபல் ஆபீஸர், திரு. நாரிமனுக்கும் மற்ற அங்கத்தினர்களுக்கும் இடத்தைக் காண்பிக்கிறார். —S. P. B.

காங்கிரஸ் தோற்றதா?

சர். மைக்கேல் கீன் சொல்லியதை உங்களுக்கு ஞாபக மூட்டுகிறேன். அதாவது, சட்டமறுப்பை நிறுத்தினதால் "யாருக்கும் வெற்றியோ, தோல்வியோ ஏற்பட்டு விடவில்லை" என்று சொன்னார். இதுவே உண்மை. ராஜீய ஞானம் உள்ள யாரும் இப்படியே அபிப்பிராயப் படுவார்கள். இந்தியாவிலுள்ள எந்தக் கவர்னரோ அல்லது வைசிராயோ காங்கிரஸ் தோற்றுப் போனதாகவோ, அல்லது அதை நசுக்கிவிட்டதாகவோ கூறவில்லை. ஏனெனில் அப்படி எந்த விதமான விபத்தும் காங்கிரசுக்கு வரவில்லை யென்பதையும், வர முடியாது என்பதையும், அவர்கள் அறிவார்கள். சில வெள்ளைப் பத்திரிகைகள் தாம் காங்கிரஸ் தோற்றுப் போனதாகவும், செத்துப் போனதாகவும் கூறிவருகின்றன. 1921-ல் மகாத்மா ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்ததிலிருந்து இந்தக் கூட்டத்தார் காங்கிரஸ் செத்துப் போனதாகத் தினசரி சொல்லிவருகிறார்கள். அவர்கள் இப்பொழுதும் சொல்லி வருவதால், காங்கிரஸ் சாகவில்லையென்பதை அவர்களே மறைமுகமாக ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஏனெனில் எந்த ஜடப்பொருளும் ஒருதடவைக்கு மேல் சாகமுடியாது. காங்கிரஸ் ஜடப் பொருளுமல்ல. இந்தியாவின் தேசிய

அபிலாஷையே காங்கிரஸ். லட்சியத்திற்கு என்றுமே அழிவு கிடையாது. சிரஞ்சீவியாய் உலக முள்ளவரையிலும் இருக்கும். ஆகவே காங்கிரஸ் இந்திய தேசிய அபிலாஷையின் உருவமாயிருக்கிறவரையில் அது அழியாது. அதை யாராலும் அழிக்கவும் முடியாது. காங்கிரசின் வேலை முறைகள் இன்று ஒரு விதமாயிருக்கலாம். நாளை வேறு விதமாக மாறலாம். ஒரு வேலை முறையை மாற்றிவிட்டதால் காங்கிரஸ் தோற்றுப்போனதாகவோ, செத்துப்போனதாகவோ கூறுவது வெறும் அறியாமை. அதனால்தான் காங்கிரஸ் சட்டமறுப்பை நிறுத்தியவுடன், "தோல்வியுமில்லை, வெற்றியுமில்லை" என்று அசாம் கவர்னர் கூறினார்.

லட்சியமும் வழியும்

நமது லட்சியம் சுயாராஜ்யம். அதை அடைய நாம் பல முறைகளைக் கையாள வேண்டியிருக்கும். சட்டமறுப்பு நமது லட்சியமல்ல. சட்ட சபையும் நமது லட்சியமல்ல. இவையெல்லாம் லட்சியத்தை எந்தெந்த சமயத்தில் எப்படியெப்படி நாம் உபயோகிக்க வேண்டுமோ, அம்மாதிரி உபயோகிக்க வேண்டியதுதான்.

தேசத்தின் மானம்

"அடுத்த விஷயம் வெள்ளைக் கடுதாசி. வெள்ளைக் கடுதாசியை ஏன் தொலைக்கவேண்டும்? நமது லட்சியத்தை அது பூர்த்தி செய்வதாயில்லை. அதனால் அதை ஒழிக்கவேண்டும். அதில் சில சீர்திருத்தங்கள் செய்தால் சரியாய் போகுமென்று சிலர் கூறுகிறார்கள். அதில் எவ்வளவு சீர்திருத்தம் செய்தாலும், நமது லட்சியத்தை அது பூர்த்தி செய்யாது. நமக்கு வேண்டியது சில்லறைச் சீர்திருத்தங்கள் அல்ல; நாமே நம்முடைய நாட்டிற்குப் பொருத்தமான அரசியலை நிர்ணயிக்கும் சுய நிர்ணய சுதந்திரமே நமக்கு வேண்டும்."

யார் யாருக்குப் பொறுப்பு?

"இந்தியாவிலுள்ள சர்க்கார் யாருக்குப் பொறுப்பு? இந்தியருக்கல்ல; பிரிட்டிஷ் மந்திரி சபைக்குப் பொறுப்பு; மந்திரி சபை பார்லிமெண்டுக்குப் பொறுப்பு; பார்லிமெண்ட் பிரிட்டிஷ் வோட்டர்களுக்குப் பொறுப்பு. முடிவாக அந்த வோட்டர்கள் எப்படி? அவர்களுக்கு இந்தியாவைப் பற்றிப் சிரத்தையே கிடையாது. இம்மாதிரிப் பொறுப்பையே வெள்ளைக் கடுதாசி நமக்குக் காட்டுகிறது."

காங்கிரஸ் தேசத்தின் சைன்னியம்

ஒன்று சர்க்கார் கட்சி. மற்றொன்று ஜனங்கள் கட்சி. சுதந்திரம் பெற வேண்டுமானால், இடைவிடாமல் சர்க்காரோடு போராட்டம் செய்யவேண்டும். சலாம் செய்வதால் எதுவும் கிடைக்காது. காங்கிரசைத் தவிர மற்றக் கட்சிகளுக்குப் போராடத் தைரியமோ சக்தியோ இல்லையென்பது நிரூபணமாய் விட்டது. அவர்கள் சலாம் தொழிலால் எதுவும் பலிக்காது என்பதும் நிரூபணமாய்விட்டது. ஆகவே போராடச் சக்தியுள்ள காங்கிரசுக்கு வழிவிட்டு அவை விலகிக் கொள்ளுவதே நேர்மையாயிருக்கும். சண்டைபோடச் சக்தியில்லாதவர்களுக்கு சைன்யத்தில் என்ன வேலை? காங்கிரஸ் தேசத்தின் சைன்னியம். சுயராஜ்யம்பெற அது சண்டை போடுகிறது.

பிரதிநிதித்துவ சபை

"எம்மாதிரி அரசியலை நிர்ணயிப்பது என்பதைக் காங்கிரஸ் தன் தலையில் பூராவாகப் போட்டுக்கொள்ள விரும்பவில்லை. வோட்டர்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதித்துவ சபையைக் (கான்ஸ்டிடுயென்ட் அஸெம்ப்ளி) கொண்டே அந்த வேலையைச் செய்யப் போவதாகத் தெளிவாகச் சொல்லுகிறது. ஆகவே அச்சமயம் மற்றக் கட்சிகளையும் கலந்து கொண்டே அரசியல் அமைப்பு இந்நாட்டில் ஏற்படும். அந்தக்காலம் வரும்வரை மற்றக் கட்சிகள் விலகி யிருப்பார்களாக."

உயிர் இருக்கிறதா?

"இந்தியர் உடம்பில் உயிர் இருக்கிறது, உள்ளத்தில் சுயராஜ்ய ஒளி இருக்கிறது என்பதை இந்தத் தேர்தல் மூலம் நாம் உலகிற்குக் காட்டவேண்டும். சென்னை வாசிகள் இவ்விஷயத்தில் செய்யும் வேலை வெளி ஜில்லாக்களுக்கு, ஊக்க மூட்டுவதாயிருக்குமாக. இந்த மகாநாட்டின் ஆரம்பம், சென்னையில் நடைபெறப் போகும் தீவிர வேலைக்கு ஆரம்பமாயிருக்குமென்ற நம்பிக்கையுடன், இந்த மகாநாட்டை ஆரம்பித்து வைக்கிறேன்."



ராயப்பேட்டைக் காங்கிரஸ் மண்டபத்தில், சென்னை ஜில்லா அரசியல் மகாநாடு திரு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் தலைமையில் கூடியது. படத்தில் திரு. செட்டியார், திவான்பகதூர் வி. பாஷ்யம் அய்யங்கார், திரு. ராஜகோபாலாச்சாரியார், திரு. கே. பாஷ்யம், திரு. முத்துரங்க முதலியார், ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி, ஸ்ரீமதி லக்ஷ்மி சங்கரய்யர், திரு. சி. ஸ்ரீனிவாசன் முதலியோர் காணப்படுகின்றனர். —P. P. B.

ரயில் போக்கு வரவு

மதராஸ்-எழும்பூர்

மெயின் லைன்.

வண்டிப் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
இண்டோ ஸிலோன் எக்ஸ்பிரஸ்	மாலை 9 0	காலை 6 40
செங்கோட்டை பாஸஞ்சர்	காலை 6 55	மாலை 7 25
கூடலூர் பாஸஞ்சர்....	மாலை 4 0	காலை 11 55
திருவனந்தபுரம் பாஸ்டு பாஸஞ்சர்....	மாலை 9 30	காலை 6 5
திருச்சி பார்சல்	மாலை 10 20	காலை 5 35
கார்டு லைன்.		
தனுஷ்கோடி பாஸ்டு பாசஞ்சர்	காலை 11 15	மாலை 2 55
திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்	மாலை 7 30	காலை 7 15

மதராஸ்—ஸெண்ட்ரல்

வண்டிப் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
கல்கத்தா மெயில்	மாலை 8 30	காலை 8 35
ரோண்டு டிரங்க் எக்ஸ்பிரஸ்	காலை 8 40	மாலை 4 35
பம்பாய் மெயில்	மாலை 8 40	காலை 5 55
பம்பாய் எக்ஸ்பிரஸ்	காலை 8 30	மாலை 5 0
பங்களூர் மெயில்	மாலை 9 30	காலை 6 15
,, எக்ஸ்பிரஸ் ...	மாலை 1 0	மாலை 2 10
,, பாஸஞ்சர்	காலை 6 15	மாலை 7 40
,, ,, ...	மாலை 9 40	காலை 5 30
ஜோலார்ப்பேட்டை பாஸஞ்சர்	மாலை 12 45	மாலை 2 0
அரக்கோணம் பாஸஞ்சர்	மாலை 5 30	—
,, ...	6 30	—
மலபார் எக்ஸ்பிரஸ்	8 5	காலை 7 15
ப்ளுமௌண்டன் எக்ஸ்பிரஸ்	9 15	6 35

நமது ஏஜெண்டுகள்.

1.	காரைக்குடி	S. மெய்யப்ப செட்டியார்.
2.	தேவகோட்டை	கொலம்பியா ஹவுஸ், ஆர்ச்சு ரோடு.
3.	கோனபட்டு	கோநகர் தனலெக்ஷுமி ஸ்டோர்ஸ்.
4.	மதுரை	K. R. முனியாண்டியா பிள்ளை திண்டுக்கல் துளிர் வெற்றிலை வியாபாரம், வடக்குச் சித்திரைவீதி.
5.	விருதுநகர்	P. பழனிக்குமாரு பிள்ளை, நியூஸ் ஏஜண்டு.
6.	மாயவரம்	M. K. சுந்தரம், கதர் ஸ்டோர்ஸ்.
7.	கோயம்புத்தூர்	L. ராஜகோபால், நியூஸ் ஏஜண்டு, பனங்காட் [ரோட்
8.	ஒலவக்கோடு	மலபார் நியூஸ் ஏஜன்ஸி, நியூஸ் ஏஜண்டு.
9.	திருப்பூர்	P. R. துரைசாமி அய்யர், ஸவுத் இந்தியன் [நியூஸ் ஏஜண்டு.
10.	ராணிப்பேட்டை	S. மோகன முதலியார்.
11.	கோட்டாறு	C. K. கணேசன், நேஷனல் நியூஸ் ஏஜண்டு,
12.	ரேங்கூன்	V. B. சாஸ்திரி, ஜெனரல் நியூஸ் ஏஜன்ஸி, [244, phayre st.
13.	கொழும்பு	K. N. S. பிள்ளை, No 281, 2-வது டிவிஷன் மருதானை. (Maradana.)
14.	திருச்சினப்பள்ளி	S. மாசிலாமணிப் பிள்ளை, தெப்பகுளம்.
15.	திருவனந்தபுரம்	T. V. ரெங்கநாதன் டயம்ஸ் ஆப் இந்தியா ஏஜன்ஸி, Pazhavangady, மெயின் ரோடு.
16.	தூத்துக்குடி	மு. தி. நல்லசிவன், நியூஸ் ஏஜண்டு.
17.	சிவகங்கை	S. K. சோமசுந்தரம், கௌரி மோட்டார் ஸ்டோர்ஸ்.
18.	திருப்பத்தூர்	அ. பொ. வீர. வீரபத்திரஞ் சேர்வை, Correspondent.
19.	கோயில்பட்டி	N. சோமயாஜுலு.

மேற்கண்ட ஊர்கள் தவிர மற்ற எல்லாப் பெரிய ஊர்களுக்கும் நமது "ஊழியன்" பத்திரிகையை விற்பனை செய்ய

ஏஜண்டுகள் தேவை.

நிபந்தனைகட்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுக. டிபாஸிடில்லாமல் ஏஜன்ஸி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

காரியஸ்தர்,
"ஊழியன்" காரியாலயம்,
56. தம்பு செட்டித் தெரு, சென்னை.

நூர்ஜகான்

அல்லது

நூதனப் படுகொலை

(திரு. கே. வீ. எஸ். வாஸ்)

"நண்பரே! தாங்கள் தானே துப்பறியும் துளஸிதாஸ் என்பவர்?" என்று அப்பொழுது தான் கும்பகோணம் இரயில்வே ஸ்டேஷனில் வந்து நின்ற போட் மெயிலினின்றிறங்கிய கம்பீரமான ஒருவரைப் பார்த்துவினவினார் அட்வகேட் வாஸுதேவ்.

"ஓ! குட்மார்னிங்! நீங்கள்தான் எனக்குத் தந்திகொடுத்த அட்வகேட் வாஸுதேவ் என்றெண்ணுகின்றேன்!" என்றார் துளஸிதாஸ்.

"ஆம்! நீங்கள் சிரமத்தைப் பாராமல் மறுவண்டியிலேயே புறப்பட்டு வந்ததற்குச் சந்தோஷப்படுகிறேன். நீங்கள் நிச்சயம் வராமலிருக்க மாட்டீர்களென்றெண்ணியே ஸ்டேஷனுக்கு வந்தேன். தங்கள் புகைப்படத்தைப் பன்முறை பத்திரிகைகளிற் பார்த்திருப்பதால்தான் உடனே உங்களை அடையாளம் கண்டுபிடித்தேன்!" என்றார் அட்வகேட் வாஸுதேவ்.

"சரி, ஏன் நாம் தங்கள் வீட்டிற்குப் போய்ப் பேசிக்கொள்ளலாமே? நான் இங்கு வந்திருப்பது எதற்காக எல்லோருக்கும் தெரியவேண்டும்" எனத் துளசிதாஸ் கூறலும் இருவரும் ஓர் வாடகை மோட்டாரிலேறி வாஸுதேவின் விடுதியை யடைந்தனர்.

"நண்பரே! இன்றைக் காலைப்பத்திரிகையைப் பார்த்திருந்தால் தாங்கள் எதற்காக வரவழைக்கப்பட்டீர்கள் என்று தெரிந்து கொண்டிருப்பீர்கள். நூர்ஜகான் கொலை சம்பந்தமாக என் சகோதரன் இராகவன் குற்றம் சாட்டப்பட்டுக் கைதி செய்யப்பட்டிருக்கிறான். இன்று மாலை மூன்று மணிக்குத்தான் பிரேத விசாரணை நடக்கப்போகின்றது!" என்றார் அட்வகேட் வாஸுதேவ்.

"ஓ, பார்த்தேன். ஆனால் கைதியாக்கப்பட்டிருப்பது யார் எனப் பத்திரிகைகள் குறிப்பிடாததால் அது உங்கள் சகோதரன் எனத் தெரிந்துகொள்ளவில்லை. என் உதவி தங்களுக்கு வேண்டுமாயின் தயவு செய்து நீங்கள் ஒன்றையும் ஒளிக்காமல் உள்ளது உள்ளபடி கூறவேண்டும்!" என்றார் துளசிதாஸ்.

நூர்ஜகான் கொலை சம்பந்தமாகப் பத்திரிகைகளில் அன்று காலை பிரசுரமாகியிருந்த விஷயம் பின்வருமாறு:—

"வெள்ளிக்கிழமை இரவு ஒன்பதரை மணிக்கு ராமேச்வரம் எக்ஸ்பிரஸ், திருநாகேஸ்வரத்தினின்று கும்பகோணத்திற்கு வந்து கொண்டிருக்கையில், நடுவில் முதல் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந்த நூர்ஜகான் என்னும் சீமாட்டி கொலை செய்யப்பட்டாள். கும்பகோணம் ஸ்டேஷனில் டிக்கட் கலெக்டர் முதல் வகுப்பு வண்டியில் ஏறி டிக்கட்டுகளைச் 'செக்' செய்கையில் நூர்ஜகானின் சவம் கண்டுபிடிக்கப்பட்டுப் போலீசாருக்கு அறிவிக்கப்பட்டது. மேற்படி சீமாட்டியின் தலையில் காதுக்குச் சற்று உயரத்தில் கூர்மையான ஏதோ ஆயுதத்தைக் கொண்டு இரண்டு அங்குல ஆழம் செய்யப்பட்ட காயமும், கன்னத்தில் மூன்றங்குல நீளம் கீறலும் காணப்பட்டது. கொலையாளி சீமாட்டியைக் களவாடவேண்டுமென்ற எண்ணத்துடன் கொலை செய்ததாகத் தெரியவில்லை. ஏனெனில், மேற்படி சீமாட்டி அணிந்திருந்த விலையுயர்ந்த ஆபரணங்களும் நகைப் பெட்டியும் அப்படியே யிருந்தன. போலீசார் யாரோ ஒருவரைச் சந்தேகத்தின்மீது கைது செய்திருக்கின்றனரென்று நமது சொந்த நிருபர் அறிவிக்கின்றார்."

அட்வகேட் வாசுதேவ் கொலையின் விபரங்களைக் கூற வாரம்பித்து, "என் சகோதரன் ஒருக்காலும் கொலை செய்யக்கூடியவனல்ல. அவனைப்பற்றி நீங்களும் கேள்விப்பட்டிருக்கலாம். அவன் தொழிலில் ஓர் போட்டோகிராபர். அநேகமாய் அவன் எடுத்த புகைப்படங்கள் பல பத்திரிகைகளிலும் பிரசுரமாகி யிருக்கின்றன!"

"ஓ! மிஸ்டர் கே. எஸ். இராகவனா தங்கள் சகோதரர்! ஹும்! அப்படிச் சொல்லுங்கள்! அவர்மீதா கொலைக் குற்றம் சாட்டிக் கைதி செய்திருக்கின்றனர்? அடடா! அவர் மிகவும் தங்கமான மனிதராயிற்றே? நான் அவரை நேரில் சந்தித்திராவிடினும், அவருடைய படங்களைப் பற்றி மேல் நாட்டுப் பத்திரிகைகளும், நம் தேசப் பத்திரிகைகளும் மிகவும் புகழ்ந்து வரைந்திருப்பதைப் பார்த்திருக்கிறேன்?" என்றார் துளசிதாஸ்.

"ஆம்! அதே மனிதனைத்தான் நான் கூறுவது. இப்பொழுது அவனுக்கு 30 வயதாகிறது. பத்து வருடங்களாய் இதே தொழிலில் உழைத்து மிகவும் தேர்ச்சி பெற்றிருக்கிறான். இந்த நூர்ஜகான் என்னும் பெண் மாயவரத்திற்கு அடுத்தாற்போலுள்ள விளநகர் என்னும் கிராமத்தில் வசிப்பவள். இராகவன் இயற்கை வினோதங்களைப் படம் பிடிக்க அடிக்கடி விளநகர் செல்வதுண்டாதலின் படங்களில் அதிக விருப்பமுள்ள நூர்ஜகானின் நட்பு அவனுக்குக் கிடைத்தது. நூர்ஜகானும் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவதுண்டு. அவள் அழகிலும், குணத்திலும், பத்தரைமாத்துத் தங்கம் போன்றவள். ஒரு சமயம் நூர்ஜகானின் விருப்பத்திற் கிணங்கி அவளைப் படமெடுத்து அதனடியில் "நூர்ஜகானுக்கு இராகவன் அன்புடனளித்தது" என்றெழுதிக் கொடுத்திருந்தான். ஷை படம் நூர்ஜகானை அசங்கியமான ஓர் நிலையில் எடுக்கப்பட்டிருந்ததாதலின் நான்கூட இராகவனைக் கோபித்துக் கொண்டேன்...........!

"நூர்ஜகானுக்கும் இராக்வனுக்கும் ஏனும் சம்பந்தங்களிருக்குமென்றெண்ணுகிறீர்களா" என்று இறுதியில் வினவினார் துளஸிதாஸ்.

"இல்லை! இராகவன் அப்படிப்பட்ட மனிதனில்லை. நூர்ஜகானும் கள்ளத்தனமாக இராகவனுடன் சீர சம்பந்தம் வைத்துக் கொண்டிருப்பாளோ வென நினைப்பதற்கும் இடமில்லை. ஏனெனில் அவளுக்கு வயது இருபத்து மூன்றாகியும் சிற்றின்பத்தில் ஓர்வகை வெறுப்புடன் கன்னியாகவே தன் வாழ்நாளைப் பழைய புத்தகங்களைச் சேகரம் செய்வதிலும், அவைகளைப் படித்து மகிழ்

வதிலுமே கழித்து வருகின்ருள். ஹூம்! மேலே சொல்கிறேன் கேளுங்கள். ஷி. போட்டோவைப் பற்றி நான் என் சகோதரனை மிகவும் கடிந்து கொண்டதின்பேரில் வேறு போட்டோவொன்று நன்ருக எடுத்துக் கொடுப்பதாயும், எடுத்துக் கொடுத்த படத்தைத் திருப்பிக் கொடுத்து விடு என்றும் இராகவன் நூர்ஜகானைப் பன்முறை வேண்டிக் கொண்டும் ஒரு சிறிது ஆசையுடன் மட்டும் எடுக்கப்பட்ட தன் போட்டோ இயற்கைப் பொலிவுடனிருப்பதால் அதைத் திருப்பியளிக்க முடியாதென்று கூறி விட்டாள். வெள்ளிக்கிழமை இரவு திருநாகேஸ்வரத்தில் நிகழ்ந்த இரதோற்சவத்தைப் புகைப்படமெடுக்கச் சென்றவன் ஸ்டேஷனில் $9\frac{1}{2}$ மணிக்கு நூர்ஜகான் முதல் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்வதைக் கண்டு மறுபடியும் நயமாகவும் பயமாகவும் பிளாட் பாரத்தில் நின்று கொண்டு கேட்டிருக்கிருன். நூர்ஜகான் ஒரே பிடிவாதமாக மறுக்கவும் இருவருக்கும் சச்சரவு உண்டாகியிருக்கிறது. இதற்குள் இவர்களுடைய உரைத்த குரலைக் கேட்டு ஸ்டேஷன் மாஸ்டர், கார்டு, இரண்டு போலீஸ் உத்தியோகஸ்தர்களும் அங்கு வர நூர்ஜகான் "உங்கள் படத்தை நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று கூறி அவன் எடுத்துக் கொடுத்த புகைப்படத்தைப்பிளாட் பாரத்தில் வீசியெறிந்திருக்கிருள். ஸ்டேஷன் மாஸ்டர், கார்டு, கான்ஸ்டேபிள்கள் முதலியோர் இராகவனைச் சந்தித்த சமயம் அவனிடம் போட்டோப் பிடிக்கும் கருவிகளும் கூர்மையான ஓர் இரும்புத் தடியும் இருந்தன. ஷி இரும்புத்தடியாலேயே, நூர்ஜகான், எக்ஸ்ப்ரஸ் திருநாகேசுவரத்தை விட்டுக் கும்பகோணத்திற்குப் பிரயாணம் செய்கையில் கொலை செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது. இராகவனுக்கு விரோதமாகப் பல சாட்சியங்களிருக்கின்றன. முதலாவதாக நூர்ஜகானை உயிருடன் கடைசியாகச் சந்திக்கையில் இருவருக்கும் கடுமையான வாக்கு வாதம் நடந்ததை ஸ்டேஷன் மாஸ்டர் முதலானேர் நேரில் பார்த்திருக்கின்றனர். இரண்டாவதாக நூர்ஜகானின் தலையில் காணப்பட்ட காயத்தை யுண்டாக்கக் கூடிய கூர்மையான இரும்பு ஆயுதம் அப்பொழுது இராகவனிட மிருந்ததையும் ஸ்டேஷன் மாஸ்டர் முதலானேர் கவனித்திருக்கின்றனர். கடைசியாக முதல் வகுப்பு வண்டியில் நூர்ஜகானைத் தவிர வேறு பிரயாணிகள் ஒருவரு மில்லையாதலின் வேறெருவர் கொலை செய்திருக்க முடியாது. ஆகவே எல்லாம் இராகவனுக்கு விரோதமாகவே யிருப்பதால் நேற்று மாலை இராகவன் குடந்தை சாரங்கராஜர் கோயிலைப் படமெடுத்துக் கொண்டிருக்கையில் போலீசார் அவனைக் கைது செய்தனர்!" என்ருர்.

"சரி! போலீசார் சவத்தை எந்த நிலையில் பார்த்தனர்?" என்ருர் துளசிதாஸ்.

"முதல் வகுப்பு வண்டியின் வாசற்படிக்கு அருகில் வண்டியின் இடது புறத்தில் சவம் கீழே கிடந்தது. ஆனல் வண்டியின் கதவு தாளிடப்பட்டுத் தானிருந்தது!" என்ருர் அட்வகேட்.

"கதவிலுள்ள சாளரம் போலீசார் பார்க்கையில் எப்படி யிருந்தது?" என்ருர் துளசிதாஸ்.

"ஏன், திறந்துதானிருந்தது. போலீசார் சவம் எந்த நிலையிலிருந்ததோ அதே நிலையில் உங்களுடைய பார்வைக்காக வைத்திருக்கின்றனர். நான் உங்களைத் தருவித்து என் சகோதாருக்காக உளவு விசாரிக்கச் சொல்லப் போவதாகக் கூறியிருந்தேன். ஹூம்! நூர்ஜகான் திருநாகேஸ்வரத்திற்கும் கும்பகோணத்திற்கும் இடையில் கொலை செய்யப்பட்டிருப்பினும் போலீசார் கண்டுபிடித்த சில நிமிடங்கள் பின்னரே அவள் உயிர் விலகியது. அதுவரையில் அவள் உயிருடனிருந்த போதிலும் பிரக்ஞை யற்றிருந்தாள்."

"சரி, காயம் வலது காதிற்கு மேலா அல்லது இடது காதிற்கு மேலா உண்டாக்கப் பட்டிருக்கிறது?" என்ருர் துளஸிதாஸ்.

"வலது காதிற்கு இரண்டங்குலம் மேல் தலையில் இரண்டு அங்குல ஆழம் கூர்மையான ஆயுதத்தால் குத்தப்பட்டிருக்கிறது. அதற்குப் பின் வலது கன்னத்தி லிருந்து முகவாய்க்கட்டை வரையில் மூன்றங்குல நீளம் அதே ஆயுதத்தால் கீறப்பட்டிருக்கிறது. அதாவது தலையில் குத்திய ஆயுதத்தைப் பிடுங்குகையில் கன்னத்தில் காயம்பட்டிருக்க வேண்டுமென்று டாக்டர் அபிப்பிராயப்படுகிருர்!" என்ருர் அட்வகேட்.

"காயம் வலது கன்னத்தில்! சரி, வண்டி வடக்குத் திக்கினின்று தெற்கில் போய்க்கொண்டிருந்ததோ?" என்ருர் துளஸிதாஸ்.

"ஆம்!"

"சரி, இது போதுமானது. நாம் சற்று ஸ்டேஷன் மாஸ்டருடன் பேசிவிட்டுச் சவத்தையும் பார்த்துவிட்டு வரலாம் வாருங்கள்!" என்று கூறி அட்வகேட் வாஸுதேவையும் இட்டுக்கொண்டு துளஸிதாஸ் கும்பகோணம் இரயில்வே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டார்.

* * *

ஆமாம்! மிஸ்டர் வாஸுதேவ்! உங்கள் சகோதாரிடம் கூரிய ஆயுதமிருந்தாகக் கூறினீர்களே; அதையவர் ஏன் வைத்துக் கொண்டிருக்க வேண்டும்? என்று ஸ்டேஷனை நோக்கிப் போய்க் கொண்டிருக்கையில் வினவினர் துளஸிதாஸ்.

"என் சகோதரன் மிகவும் சிக்கனமானவன். போட்டோ பிடிக்கையில் மிஷினின் மீது கருப்புத் துணியைப் போர்த்துப் பூதக் கண்ணுடியின் மூலம் பின்புறத்தில் விழும் நிழலைச் சரிப்படுத்துவதுண்டல்லவா? அப்பொழுது துணி பறந்துவிடாம லிருக்கும் வண்ணம் அதன்மீது வைக்க இந்த இரும்புத் தடி உபயோகமானதென்று வெகு நாட்களாக வீட்டிலிருந்த ஒன்றை வைத்துக்கொண்டிருக்கிருன்!" என்ருர் அட்வகேட்.

இதற்குள் வண்டியும் ஸ்டேஷனையடைந்துவிடவே இருவரும் மோட்டாரினின் றிறங்கி ஸ்டேஷன் மாஸ்டரின் அறையினுள் நுழைந்தனர். துளஸிதாஸின் சாமர்த்தியத்தைப் பற்றி மிகவும் புகழ்ச்சியாகக் கேள்விப்பட்டிருக்கும் ஸ்டேஷன் மாஸ்டர் அவரை நேரில் கண்டது தன் பாக்யமே யென்றெண்ணி அவரையும் அட்வகேட் வாஸுதேவையும் அன்புடன் வரவேற்று ஆசனங்களிலமரச் செய்து தாமும் ஓர் நாற்காலியிலமர்ந்தார்.

"மிஸ்டர் ஸ்டேஷன் மாஸ்டர்! கொலை விஷயமாகத் தங்களுக்குத் தெரிந்ததைக் கூறுமாறு வேண்டுகின்றேன்!" எனத் துளஸிதாஸ் வினவலும்

ஸ்டேஷன் மாஸ்டர் பின் வருமாறு கூறலானார்:—

"வெள்ளிக்கிழமை இரவு 9½ மணிக்கு ராமேச்வரம் எக்ஸ்பிரஸ் ஸ்டேஷனை யடைந்தது. அப்பொழுது டிக்கெட் கலெக்டர் டீ. கே. ஸ்ரீனிவாசன் முதல் வகுப்பு வண்டியிலேறி (டிகெட் பரிசோதிக்க) கதவைத் திறந்ததும் நூர்ஜஹானின் சவம் ரத்த வெள்ளத்தில் மிதந்து கிடப்பதை உடனே எங்களுக்கு அறிவித்தார். நாங்கள் போலீஸாருடன் அங்கு சென்று பரிசோதித்தோம். முதல் வகுப்பு வண்டியில் நூர்ஜகானைத் தவிர வேறு பிரயாணிகளில்லை. அவளிடமிருந்த சாமான்களொன்றும் களவாடப்படவில்லை. அந்த வண்டியைத் தொடரிலிருந்து விலக்கி அப்படியே வைத்திருக்கிறோம்!" என்றார்.

"வண்டி திருநாகேஸ்வரத்திற்கும் கும்பகோணத்திற்கும் நடுவில் வெகு வேகமாக ஓடுமோ? வழியில் எவரேனும் முதல் வகுப்பு வண்டியில் ஓட்டத்திலேறிக் கொலை செய்துவிட்டு வண்டி ஓடிக்கொண்டிருக்கையிலேயே இறங்கிவிடக் கூடுமா?" என்றார் துளஸிதாஸ்.

"இல்லை! வண்டி நேற்றிரவு வரையில் மூன்று நாட்களாக இரண்டு ஸ்டேஷன்களுக்கு மிடையே மெதுவாகத்தான் சென்றது. ஏனெனில் மத்தியில் தண்டவாளத்தில் வேலை நடந்துகொண்டிருந்தது!" என்றார் ஸ்டேஷன் மாஸ்டர்.

"ஆகையால் நடுவில் எவரேனும் வண்டியில் ஏறி இறங்கியிருக்கக் கூடுமல்லவா?"

"முடியாது! வண்டி அவ்வளவு மெதுவாக வந்திராது!"

"அவர்கள் ஸ்டேஷனுக்கு அரை மைல் தூரத்திற் கப்பாலுள்ள குடிசைகளில்தான் தங்குகிறார்கள். அவர்களைச் சந்தேகிக்கவிடமில்லை. அவர்கள் நூர்ஜஹானை முன்பின் அறியாதவர்கள். மேலும் அவளிடமிருந்து ஒன்றும் களவாடப்படவில்லை யாதலின் அவர்கள் கொலை செய்திருப்பார்களோ என்றும் நினைக்க விடமில்லை. மேலும் அரை மைல் தூரத்திற்கப்பால் கொலை நடந்ததாகத் தெரியவில்லை. அதற்குள் கொலை செய்துவிட்டு ஒருவனும் கீழிறங்கி யிருக்க முடியாது! வண்டி ஸ்டேஷனுக்கு வருகையில் அவர்களெல்லாம் மத்தியில் வேலையை முடித்துவிட்டுக் குடிசைக்குத் திரும்பி விட்டனர்!"

"அது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றார் துளஸிதாஸ்.

"கொலை நடந்த இரவு அங்கு வெளிச்சம் தெரிந்தது. அவர்களெல்லாம் பெரிய தீ மூட்டிக் குளிர் காய்ந்துகொண்டிருந்தனர். அங்கு பாஸஞ்சர் வரும் தண்டவாளத்தை யொட்டி மற்றோர் தண்டவாளத்தில் கூட்ஸ் வண்டிகளிருந்தன. அதில் மறுநாட் காலை அனுப்பப்பட வேண்டிய மிருகங்களிருந்தமையாலும், கூட்ஸ் வண்டி நாற்புறமும் மூடப்படாத வண்டி யாதலாலும் ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் வண்டி வருகையில் அதன் சப்தத்தைக் கேட்டும், வேலையாட்கள் மூட்டிய தீயைப் பார்த்தும் மிருகங்கள் மிரளுமென்றும், அதைக் கண்டு வண்டியில் வருபவர்கள் பயப்படக் கூடுமென்று மெண்ணித் தீயை யணைக்கும்படி போர்ட்டரை யனுப்பினேன். அப்பொழுது அங்கு எல்லோரு மிருந்திருக்கின்றனர்!"

"சரி, கூட்ஸ் வண்டி எக்ஸ்பிரஸ் வண்டி வரும் தண்டவாளத்திற்குக் கீழ்புறமாகத்தானே யிருந்தது?" என்றார் துளஸிதாஸ்.

"ஆம்!" என்று பதிலளித்தார் ஸ்டேஷன் மாஸ்டர்.

"சரி, அந்த வண்டியில் என்னென்ன மிருகங்களிருந்தன?" என்றார் துளஸிதாஸ்.

"அதில் ஆடுகளும், மாடுகளும்தானிருந்தன. இன்னும் அந்த கூட்ஸ் வண்டி போகவில்லை. சில விஷயங்களை முன்னிட்டுக் காலதாமதமாகி விட்டது. இன்று மாலைதான் கிளம்பப் போகிறது!" என்றார் ஸ்டேஷன் மாஸ்டர்.

"சரி, தயவு செய்து நீங்கள் இங்கேயே சற்றிருங்கள். நான் வண்டித் தொடர்கள் நிற்குமிடத்திற்குச் சென்று நூர்ஜகான் சவத்தையும் கூட்ஸ்வண்டியையும் பார்வையிட்டு விட்டு வருகிறேன்?" எனக் கூறி நூர்ஜகான் சவமிருக்கும் முதல் வகுப்பு வண்டியின் சாவியைப் பெற்றுக்கொண்டு கிளம்பினார்.

* * *

அன்று மாலை நூர்ஜகான் சவப் பரிசோதனை நடந்தது. டாக்டர் வாஸுதேவின் சகோதரன் இராகவன் குற்றமற்றவனெனத் துளசிதாஸின் ஆச்சர்யமான உளவுகளின் மீது விடுதலை செய்யப்பட்டார். "அஜாக்கிரதையால் ஏற்பட்ட மரணம்!" என்று ஜுரர்கள் தீர்ப்புக் கூறினர். அன்று குடந்தை நகர் முழுதும் துப்பறியும் நிபுணர் துளஸிதாஸின் நுட்ப புத்தியையும், நூதன உளவுகளையும் பற்றியே பேச்சாக விருந்தது. துளஸிதாஸ் சவப் பரிசோதனையின் சமயம் நூர்ஜகானின் கொலை சம்பந்தமாகக் கூறிய விஷயங்களின் கருத்துச் சுருக்கமாகப் பின் வருமாறு:—

"நூர்ஜகானும் இராகவனும் திருநாகேஸ்வரம் ஸ்டேஷனில் சண்டையிட்

டுக்கொண்டதும், நார்ஜகான் தலையில் காணப்பட்ட காயத்தை விளைவிக்கக்கூடிய கூரிய இரும்பு ஆயுதம் அச்சமயம் இராகவனின் கையிலிருந்ததும் உண்மையே. மறுநாட் காலை இராகவன் சாரங்கராஜன் கோவிலைப் படம் பிடிக்கையில் கைதியாக்கப்பட்டிருக்கிறார். அவர் அப்பொழுது எடுத்த படத்தை அலம்பிப் பார்த்ததில் இராகவன் முதன் னாளிரவு நார்ஜகானை யுண்மையில் கொலை செய்திருப்பின் மனோ நிம்மதியுடன் அவ்வளவு அழகாக பூதக் கண்ணாடியைச் சரிசெய்து படமெடுத்திருக்க முடியாது.

நார்ஜகானின் சவம் வண்டி வடக்கிலிருந்து தெற்குத் திக்கில் ஓடிக்கொண்டிருந்திருக்கிறது. சவமோ வண்டியினுள் கீழ்புறக் கதவின் ஓரமாய்க் கிடந்திருக்கிறது. ஆகவே நார்ஜகான் கதவின் ஓரமாக நிற்கையில் வண்டியின் கீழ் புறத்தினின்று கொலை செய்யப்பட்டிருக்கிறாள். வண்டி ஓடுகையில் வண்டியின் கீழ்ப்புறமாக விருந்து ஒருவன் நார்ஜகானின் வலது கன்னத்திற்கு நேராகத் தலையில் காயம் செய்திருக்க வேண்டுமாயின் அவன் ஆயுதத்தை இடது கரத்தால் உபயோகித்திருந்தாலன்றிக் கூர்மையான ஆயுதம் இரண்டங்குலம் தலையினுட் சென்றிருக்க முடியாது. அநேகமாய் கொலை செய்ய வந்தவன் ஆயுதத்தை வலது கரத்தால் உபயோகிப்பானே யன்றி இடது கரத்தால் உபயோகியானாதலின் இது மனிதனால் செய்யப்பட்ட கொலையா வென்பதே சந்தேகத்திற்கிடமானது. வண்டியின் படியிலும், அந்தக் கதவிலுள்ள சாளரத்தின் வடபுறத்திலும் உதிரக் கறைகளிருப்பதால் கொலை செய்யப்பட்ட சமயம் நார்ஜகான் சாளரத்தின் வழியே தலையை வெளியில் நோக்கிக் கொண்டிருக்க வேண்டும். இதற்கு அத்தாட்சியாக சவமும் கதவினருகிலேயே காணப்பட்டிருக்கிறது. கூர்மையான இராகவனின் ஆயுதத்தினால் கொலை நடந்திருக்குமாயின் தலையில் குத்தப்பட்ட அந்த ஆயுதம் வண்டி தெற்கில் ஓடுகையில் வலது கன்னத்திலும் நீண்ட காயத்தை யுண்டுபண்ணிக்கொண்டு சாளரத்தின் இடது புறத்திற் காணப்படும் ரத்தக் கறையிருந்த விடத்தைத் தாக்கியிருந்தால் சாளரத்திலும் வெட்டுப் பள்ள மிருக்க வேண்டும். உதிரக் கறை சாளரத்திலிருப்பதால், மேற்படி ஆயுதம் அவசியம் வண்டியின் ஓட்டத்தில் சாளரத்தின் மீது கூர்மையான பாகம் பட்டிருக்கவேண்டும். சாளரத்தில் உதிரக் கறை யிருக்கிறதே யன்றி, வெட்டுப் பள்ளமொன்றும் ஆழமாகக் காணாததால் நார்ஜகான் இராகவனுடைய இரும்பு ஆயுதத்தாலோ, அல்லது வேறெவருடைய இரும்பு ஆயுதத்தாலோ கொலை செய்யப்படவில்லையென்பது நிச்சயம். ஆகவே கூர்மையான ஓர் ஆயுதத்தால், மரத்தில் அதிகப் பள்ளம் செய்யவியலாத வஸ்துவால் செய்யப்பட்டதோர் ஆயுதத்தால்தான் கொலை நடந்திருக்கவேண்டும் என நன்கு விளங்குகின்றது.

நார்ஜகானின் வண்டி வந்துகொண்டிருக்கையில் ஸ்டேஷனுக்கு அரை மைலுக்கப்பால் குட்ஸ் வண்டிகளில் ஆடுகளும் மாடுகளும் நின்றுகொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. அதுவுமன்றி தண்டவாளத்தில் வேலை செய்துகொண்டிருந்த ஆட்கள் தீமூட்டிக் குளிர்காய்ந்துகொண்டிருந்திருக்கின்றனர். வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந்த நார்ஜகான் திடீரென வெளியில் வெளிச்சமேற்படவும் கதவின் சாளரம் வழியாக வெளியே பார்த்திருக்கிறாள். அப்பொழுது தீயின் வெளிச்சத்தைக் கண்டும், எக்ஸ்பிரஸ் வண்டியின் சப்தத்தைக் கேட்டும் மிரண்ட குட்ஸ் வண்டியிலிருந்த ஓர் மாடு சட்டென்று வடபுறமாகத் திரும்பவும் அதன் இடது கொம்பு நார்ஜகானின் வலது தலையில் குத்திக் கன்னத்தில் காயம் செய்துகொண்டு சாளரத்திலும் பட்டிருக்கிறது. மாட்டின் கொம்பு தலையைக் காயம் பண்ணக்கூடியதா யிருப்பினும் சாளரத்தையும் ஓட்டை செய்யும்படி அவ்வளவு கனமானதல்ல. இவ்வகைத் தீர்மானத்துடன் நார்ஜகான் கொலை நடந்த இரவு அங்கு நின்ற குட்ஸ் வண்டிகளிலுள்ள மாடுகளின் கொம்புகளைப் பரிசோதித்ததில் ஓர் மாட்டின் இடது கொம்பில் உதிரக் கறை காணப்பட்டதுடன் நார்ஜகானின் தலைமயிரும் சிறிது உதிரத்தில் உலர்ந்து கொம்பில் காணப்பட்டது. மேற்படி மயிரையும், நார்ஜகான் தலையினின்று எடுத்த ஓர் மயிரையும் பருமனளக்கும் நுண்ணிய கருவியின் மூலம் அளந்து பார்த்ததில் இரண்டும் ஒரே அளவுள்ளதாக விருக்கின்றது. நார்ஜகான் சாளரத்தினின்று வெளியில் பார்க்கையில் வாயில் கோல்டு ஸ்டார் பெப்பர்மென்டைத் தின்றுகொண்டிருந்த வண்ணமாக விருந்திருக்கிறாளென்பதற்கு அத்தாட்சியாக அவள் வண்டியில் இரண்டு மூன்று கோல்டு ஸ்டார் பெப்பர்மெண்டு பாக்கெட்டுகளின் கடிதங்கள் காணப்பட்டன. சாளரத்தில் நிற்கையில் அவள் வாயில் பெப்பெர்மிண்டுக ளிருந்ததால் மாடு முட்டிய அதிர்ச்சியில் அவைகள் கீழே விழுந்திருக்கின்றன. அப்படி விழுந்த பெப்பெர்மிண்டுகள் இரண்டு கூட்ஸ் வண்டியினருகில் கிடந்தன. ஆகவே நார்ஜகான் தனது சொந்த அஜாக்கிரதையால் மாடு முட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கிறாளே யன்றி இராகவனால் கொலை செய்யப்படவில்லை"

குருகுல மாணவர் சங்கம்

காரைக்குடி முத்துப்பட்டணம் திரு. சா. சு. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் குருகுல மாணவர்கள் சங்கத்தின் முதற்கூட்டம் ஆடிமீ 25உ அமாவாசை யன்று பகல் 3 மணிக்கு மாணவர் திருவாளர் வெ. சுப்பையா அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. அது சமயம் குருகுலமாணவர்கள் ப. திலகர், சி. முருகேசன் திரு. சொக்கலிங்கம் மு. சா. சுப்பையா என்போர் சுகாதாரம், மாணிக்கவாசகர் சரிதம் என்பவை பற்றி அழகாகப் பேசினார்கள். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது நிறைவேறியது என்று காரியதரிசி எழுதுகிறார்.

அயர்லாந்தும் ஜனநாயகமும்

ஐரிஷ் டெயிலில் (Dail) முக்கிய அங்கத்தினரான பிராங்க் மாக் டேர் மாட் லண்டன் டயம்ஸ் பத்திரிகைக்கு எழுதியது.

ஐயர்லாந்தில் ஆங்கிலோ — ஐரிஷ் உடன்படிக்கை ஒன்றுமற்ற வெறும் வார்த்தைத் தொகுதியாகப் போய்விட்டது. பிரிட்டிஷ் அரசியலின் சினேகம் வேண்டும் என்று நினைப்பவர்களுக்கும், அதை அறவே ஒழிக்கவேண்டும் என்று எண்ணுகிறவர்களுக்கும் இது ஒரு பெரிய முட்டுக்கட்டையாக இருக்கிறது.

ஐரிஷ் பிரிஸ்டேட்டில் வசிப்பவர்கள் காமன் வெல்திற்காக ஓட்டுக் கொடுப்பார்களா என்றால், அதை யொத்த மற்ற பிரச்னைகளை விட்டுத் தனியாகக் கவனித்தாலும், அவர்களிடம் அந்தக் கேள்வி எப்படிப் போடப்படுகிறது என்பதைப் பொருத்துத்தான் இருக்கிறது. ஜன நாயக தத்துவம் ஐரிஷ் தேசியத்திற்குப் புதிது. இருந்தாலும் அது பதினெட்டு வருஷங்கள் நிலைத்துவிட்டது. இதன் சரித்திரத்தையும் அதன் வீரர்களையும் ஜெனரல் ஓடப்பியும், காஸ்கிரேவும், டிவாலராவும்கூட வானமளவும் ஓயாது புகழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அயர்லாந்து விலகிவிட வேண்டுமென்று பாடுபடுகிறவர்கள் சொல்லும் காரணங்களில் எல்லாம் முக்கியமானதும் நியாயமானதும் ஒன்று இருக்கிறது. அது வெளியிருந்து ஏற்படும் கட்டாயத்தினால் எதைச் செய்தாலும் பிரயோஜனமில்லை என்பதுதான்.

இம்மாதிரி கட்டாயத்திற்கு இந்த உடன்படிக்கை ஓர் உதாரணம். அதனால் இப்பொழுது இருக்கும் அரசியல் அதைத் தனக்கு வேண்டியபடி எல்லாம் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறது. 32பகுதிகளாகப்(ஜில்லாக்களாக)பிரிக்கக்கூடிய ஒரு ஜன நாயகத்தை அதனால் உண்டு பண்ண முடியவில்லை. ஆனால் இப்பொழுது இருக்கும் 26 பகுதிகளில் நிலை பெறக் கூடிய ஒரு ஜன நாயத்தை ஸ்தாபிக்கப் பயப்பட்டு பொது ஜன மனதைச் சாந்தி செய்யும் சுதந்திரத் தீர்மானங்களை நிறைவேற்றி இங்கிலாந்திலிருந்து தனியாகிவிட முயற்சிக்கிறது.


4

இந்தத் தளைகள் எல்லாம் அரசியல் ஸ்தாபனங்களில் காமன் வெல்த்தைப்பற்றி சங்கேதமாக வைத்துக் கொள்ளப்பட்டவைகள்தான். அதைத் தளைகள் என்று சொல்லுவதற்கில்லை. அரசாங்கமும், சமயத்திற் கேற்றது போல் பிரிட்டிஷ் ராஜிய வாதிகள் செய்யும் கிளர்ச்சிகளினால், இந்தத் தளைகளைப் போக்கிவிடுவது நல்லதென்று அதைச் செய்துவருகிறது. உடன்படிக்கையை ஒரேயடியாக நீக்காமல் வைத்துக்கொண்டே. அதன் அம்சங்களைச் சிறிது சிறிதாகப் போக்கி வருவது பார்ப்பதற்கு வேடிக்கையாகத்தான் இருக்கிறது. இந்தச் சமயத்தில் அரசியல் ஆராய்ச்சிக்காரர்கள், ஐரிஷ் பிரிஸ்டேட் இப்பொழுது சுதந்திர மடைந்துவிட்டதே என்று சொல்லிவிடுகிறார்கள். அதற்குத் தேசியவாதிகள் உடனே அந்த உடன்படிக்கை இருக்கும் வரை சுதந்திரம் இருக்கிறது என்று எப்படிக் கூறமுடியும் என்று கேட்கிறார்கள்.

அமெரிக்கா யுத்தக்கடனைக் கேட்காமல் வஜா செய்யவேண்டியதைப் போல் பிரிட்டனும் இந்த உடன்படிக்கையை ரத்து செய்துவிட வேண்டும். நான் ஆங்கிலேயனாக இருந்தால் பிரிஸ்டேட் தானே காமன்வெல்தாக மாறும் என்ற நம்பிக்கையுடன் பேசாமல் இருப்பேன். பகையுணர்ச்சியுள்ள ஐரிஷ் ஜனநாயகம் எவ்வளவு அபாயகரமானதோ, அவ்வளவு அபாயகரமானதுதான் ஒரு பகையுணர்ச்சியுள்ள ஒரு ஐரிஷ் பிரிஸ்டேட்டும். உண்மையில் ஐரிஸ் பிரிஸ்டேட்டில்தான் அதிக அபாயமிருக்கிறது.

காமன்வெல்தை விட்டு விலகுவது நல்லதல்ல என்று ஒரு உண்மையான அயர்லாந்து வாசி என்ற ஹோதாவில் நான் கூறுகிறேன். அதற்கும் பல காரணங்கள் உள—முக்கியமாக அயர்லாந்தின் ஒற்றுமை காமன்வெல்த் மூலமாகத்தான் அடைய முடியும் என்று நான் திட்டமாக எண்ணுகிறேன்.

தற்பொழுது இருக்கும் அயர்லாந்தின் அரசியல் அடுத்த பொதுத் தேர்தலில் ஜனநாயகப் பிரச்னையில் வென்று அதை நிறைவேற்றிவிடும். வேறு புதிய நிலைமை ஏற்பட்டாலொழிய இந்தப்படி நடந்தே தீரும். எப்பொழுதும் தளைகளை வெட்டிக்கொண்டு இருக்கமுடியாது. தீவிர ஜனநாயக வாதிகள் என்று சொல்லிக்கொண்டு அதற்கு ஒன்றும் செய்யாமலிருப்பதைப் பார்த்துப் பொதுஜனங்கள் சும்மா



கோடைக்கானலில் சூரியனைப் பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சிக்கு ஏற்பட்ட கட்டடம். டாக்டர் ராய்ட்ஸ் என்பவர் அதில் ஆராய்ச்சி செய்து வருகிறார். —P.P.B.

இருக்க மாட்டார்கள். விஷயங்களை நன்ருக அறிந்தவர்கள் ஜனநாயகத்தினுல் தீமையே விளையும் என்று நன்ருக அறிந்திருக்கிருர்கள்.

ஏழு மாதத்திற்கு முன் டிவாலரா தாமஸிற்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் அயர்லாந்து ஜனநாயகத்தை நிலைநாட்டி விட்டால் இங்கிலாந்து பொருளாதாரத் தடைகள் ஏற்படுத்திச் சண்டை செய்ய முயற்சிக்குமா என்று கேட்டிருந்தார். தாமஸ் இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க முடியாது என்று விட்டார். இந்தமாதிரிக் கேள்வி அயர்லாந்தின் கௌரவத்திற்குக் குறைந்தது. அதற்குத் தக்கபடி டிவாலராவைப் பொது ஜனங்கள் கண்டித்தார்கள்

நான் இதுவரைத் தர்க்கித்துக்கொண்டு வந்ததின் நோக்கம் வேறு. விலகுவதற்கு உரிமையுண்டா என்பதைப் பற்றித்தான். இதற்கு 'ஆம்' என்று பதில் சொன்னுல் அதனுல் பல நீடிய நன்மைகள் விளையும். இந்த உடன்படிக்கையைப் பிரிட்டிஷ் அரசாங்கம் கூடிய சீக்கிரத்தில் ரத்துசெய்து, நான் எண்ணியபடி பதில் சொல்லும் என்று எதிர் பார்க்கிறேன்.

ஜன நாயகத்தை ஸ்தாபிப்பதால் உண்டாகும் கஷ்டங்களை மறைக்காமல் கூறினேன். இன்னும் நிலைமை அவ்வளவு மோசமாகிவிடவில்லை. ஐந்து வாரங்களுக்கு முன் இந்தமாதிரி "தளைகளை நீக்குகிருேம்" என்று சொல்லிக் கொண்டு இருப்பதைக் கண்டித்து பிரிட்டனுடன் சிநேகப் பான்மையுடன் இருக்கவேண்டும் என்று கூறினேன். அரசியல் அதிகார வர்க்கத்தில் மிகுந்த கோபத்தை உண்டுபண்ணிற்று.

ஜூலை மாதம் 18-ந் தேதி ஸர் ஜான் கின் என்ற ஸெனட்டர் இம்மாதிரி ஒரு அறிக்கை விட்டார். அதற்குப் பொக்கிஷ மந்திரி விட்ட பதில் பின் வருமாறு:—

ஆஸ்திரேலியா, கானடா தென் ஆப்பிரிக்காவைப் போல் பிரிட்டனுடன் சிநேகப்பான்மையுடன் இருப்பது நல்லதுதான். ஆனல் அயர்லாந்து அந்த தேசத்தினருக்கு உரிமை யில்லாமல் பிரித்து வைப்பதை நான் வெறுக்கிறேன். ஐரிஷ்பிரிஸ்டேட்டுடன் ஏற்படும் சம்மந்தம், தேசிய உணர்ச்சியையும், சுதந்திர உணர்ச்சியையும், தனிப்பட்ட சுதந்திர அரசியல் உணர்ச்சியையும், தடை செய்யாது இருந்தால் யாருடனும் சம்பந்தம்வைத்துக்கொள்ளலாம்.

இப்பொழுது இருக்கும் சம்பந்தம் அப்படிப்பட்டதென்று தெரிவிக்க ஒரு சாசனமும் இல்லை. தென் ஆப்பிரிக்காவிற்கும் அப்படிப்பட்ட சாசனம் கிடையாது என்று நினைக்கிறேன். அது ஏற்படுகிற வரை நாம் போராட வேண்டியதுதான்."

இது பையானுபெயில் தலைவர்களுடைய அரசியல் பயிர்ச்சியின் அளவிற்கு எவ்வளவோ மேற்பட்டு இருக்கிறது. பிரிட்டனில் இருந்து இதற்கேற்ற பதில் வாாவிட்டால் மறுபடியும் ஜன நாயகப் படுகுழியில் விழ வேண்டியதுதான்.

இறைவன் திருவருள்

மகாத்மா எழுதியது

நல்லகாலமாக இப்பொழுது முடிந்த உபவாசம் சரியா என்பதைக் குறித்து ஒருவரும் தர்க்கம் செய்யவில்லை. இதற்கு மாருக இதைப்பற்றி எழுதியவர்கள் இதன் அவசியத்தைக் குறித்தே எழுதியிருக்கிருர்கள். எனக்கு இதனல் வரும் பாரமார்த்திக உபயோகத்திற்கு எல்லை இல்லை. தாயின் துணையை எதிர்நோக்கும் குழந்தையைப்போல் இன்னல்கள் தன்னைச் சூழ்ந்து வருத்தும் சமயத்தில் மனிதன் இறைவன் திருவடிகளைத்தான் பற்றிக்கொள்கிருன். ஏன் என்று எனக்குத் தெரியாது; ஆனல் இது உண்மை என்று எனக்குத் தெரியும். நான் அதிக சந்தோஷத்துடன் இருந்தாலும், உபவாஸத்தை யொட்டி வரும் தேக சம்பந்தமான தொந்திரவுகள் எனக்கு இருக்கத்தான் செய்தது.

தீண்டாமையை யொழிக்க முன்வருபவர்கள் பரிசுத்தமுள்ளவர் களாகவும் களங்கமற்ற குணசீலர்களாகவும் இருக்க வேண்டுமென்று எத்தனையோ மேடைகளில் நான் பேசியதின் எல்லா அம்சங்களும், எனக்கு இந்த எழுநாள் விரதத்தில் தான் நன்ருகத் தெரிந்தது. ஆகையால், என்னைப் பொருத்தமட்டில் அந்த உபவாஸம் தனது காரியத்தைச் செய்தது. எனது மனக் கண்ணினல் நான் கண்ட இலக்ஷியத்தை நான் அடையத் தவறி யிருக்கலாம். ஆனல் உபவாஸந்தான் மனிதனின் பலவீனத்தைத் தடுக்கும். தவறுகள் தான் வெற்றியின் வழி.

ஸ்வாமி லால் நாத்தும் அவருடைய நண்பர்களும், ஆஜ்மீரில் தீண்டாமையை யொழிக்க முன்வந்தவர்களிடம் பட்ட தொந்திரவுகளுக்காகத்தான் முக்கியமாக இந்த உபவாஸம் எடுத்துக்கொள்ளப் பட்டது. உண்மையில் இது தீண்டாமையை யொழிக்க முன் வருபவர்கள் தங்கள் எதிரிகளிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதைக் காண்பிக்கும் பொருட்டே இதை எடுத்துக் கொண்டேன். அவர்களிடம நாம் காட்டும் அன்பும் மரியாதையுமே நமது இயக்கத்திற்குச் சரியான பிரசாரம். எதிரியை அன்புதான் வெல்லும் என்பதைச் சத்தியத்திற்கு உழைக்கும் ஒவ்வொருவருக்கும் நன்ருக எடுத்துக் காட்டும்படியே இந்த உபவாசம் மேற்கொள்ளப்பட்டது. வெறுப்பு, கோபம் இவைகள் இரத்த வழியின் சூக்ஷ்மமான அம்சங்கள். வெளி விஷயங்களில் அஹிம்சை முறையைக் கையாண்டு கொண்டிருக்கலாம்; அத்துடன் பகை யுணர்ச்சியும் இருக்கலாம். கோடிக்கணக்கான ஜாதி ஹிந்துக்களை ஹிம்சை முறையினல் ஒரு நாளும் இது வரை ஹிந்து தர்மத்தின் முக்கியமான அம்சம் என்று கருதிவந்த இத் தீண்டாமைப் படுகுழியிலிருந்து கரையேற்ற முடியாது.

இதுவரைக் கவனித்ததில் இந்த உபவாஸம் நமது நண்பர்களின் மனத்தைப் பண்படுத்தி விட்டது என்று நினைப்பதற்குப் போதிய ஆதாரம் இருக்கிறது. காலந்தான் இதன் சக்தியைச் கணிக்க முடியும். உபவாஸத்தின் மகிமையை, அதன் சக்தியை, அளப்பதற்கு நான் யார்? கடமை என்று பட்டதைப் பணிவுடன் செய்ய வேண்டியது எனது தர்மம். இந்த உபவாசத்தின் பொழுது எனது கடமையைச்செய்து முடிக்கப் போதிய சக்தி கொடுத்த இறைவன் திருவருள் ஓங்குக. இப்பொழுது எனக்கு இறைவன் கொடுத்த பொறுப்பைப் போதிய வலிமையுடன் செய்து முடிக்க ஆற்றலை எனக்கு அருளுமாறு வாசகரும் என்னுடன் சேர்ந்து பிரார்த்திப்பாளாக.

—'ஹரிஜன்' பத்திரிகை,




சென்னைக் காங்கிரஸ் மண்டபத்தில் சர்தார் சார்துல்சிங் பிரசங்கம் செய்யு முன் எடுத்த படம்.

—P. P. B.

நிதிபதி :—முதலில் குற்றவாளி என்று ஒப்புக்கொண்டுவிட்டு, கேஸைக் கேட்ட பிறகு அதை மாற்றக்கூடாது.

குற்றவாளி :—கோர்ட்டாரவர்களே எனது வக்கில் வாதித்த பிறகு நான் குற்றவாளியல்ல என்று படுகிறதே!

ஜயமுண்டு
பயமில்லை மனமே!



விகடத்திரள்

ஆசிரியர் :—நீ எப்போதும் வகுப்பில் கடைசியி லுட்கார்ந்திருக்கிறாயே. வெட்கமில்லையா?

மாணவன் :—என்ன வெட்கம் சார். மற்றக் கடைசியிலிருந்து நம்பர் போடத் தொடங்கி விட்டால் நான் முதலாவதாக வந்து விடுவேனல்லவா?

* * *

எஜமான் :—அடே கருப்பா போ வெளியே. அன்று குடியாமல் வந்தாய்; சரி யென்றேன். இன்று எவ்வளவு எரிச்சல் வருகிறது தெரியுமா?

கருப்பன் :—ஆமாங்க. போன தடவை உங்களுக்கு சந்தோஷம்; எனக்கு சங்கடம். இன்றைக்கு எனக்கு சந்தோஷம்; உங்களுக்கு சங்கடம்—இப்போ என்முறை வந்திரிச்சு.

* * *

காரியதரிசி :—ஐயா நான் புத்தகமெழுதியனுப்பி எவ்வளவு நாளாயிற்று; இன்னும் பிரசுரம் செய்யவில்லையே.

பிரசுரகர்த்தர் :—நாங்கள் பேர்போன ஆசாமிகளுடைய புத்தகங்களைத்தான் அச்சிட்டு வெளியிடுவோம்.

காரியதரிசி :—நானும் பேர்போன ஆசாமிதானைய்யா. (இரகசியமாக) என் பெயர் கனகசுந்தரம். இரண்டு வருடங்கட்கு முன்பு ஒரு கிருமினல் வழக்கில் சேர்ந்து விட்டதால் சென்னையைவிட்டு இங்கு ஓடிவந்து கந்தசாமி என்று சொல்லிக்கொண்டு அஞ்ஞாத இருந்து வருகிறேன். இதைவிட என்ன பெயர் போகவேண்டும்?

* * *

வக்கில் ஒருவர் தம் கட்சிக்காரனைப் பார்த்து "ஜட்ஜ் கேட்கும் கேள்விகட்கெல்லாம் திட்டமாகப் பதில் கூறுதே. சுமாராகச் சொல்லு" என்று கூறியிருந்தார். அந்த கக்ஷிக்காரனிடம்,

ஜட்ஜ் :—அடே உனக்கென்ன வயது?

கட்சி :—சுமார் 33.

ஜட்ஜ் :—உன் பெயர்.

கட்சி :—சுமார் கோவிந்தசாமி.

* * *



தனக்குப் பணம் தாராமலிருக்கின்றதைக்கூறி அவமானப்படுத்தி விட வேண்டுமென்று நினைத்த ஒருவர் :—சுப்பையா நேற்றிரவு ஒரு கனவு கண்டேன். நீ அதில் தோன்றி 100 ரூபாயையும் தந்தாய். நான் மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டேன். (புன்னகை புரிந்தார்.)

கடன்காரன் :—சரி; அப்படியானல் ரசிதைத் தந்துவிடு.

* * *

சிறுவன்— அம்மா அடுத்தாத்துக் கோபாலனுடன் விளையாடட்டுமா?

தாய்—அவாளோட சண்டையில்லையாடா?

சிறுவன்—அம்மா அப்பொ நான் 'ழ' போடட்டுமா?

கிராமத்தான்—உங்களூரில் மாட்டு வண்டிகள் உண்டா?

நகரவாசி—அது கிடையாது. ஆள் இழுக்கும் வண்டிகள் இருக்கின்றன.

கிராமத்தான்— (ஆச்சரியத்துடன்) நீங்கள் வண்டிகளை இழுக்கத் தொடங்கி மாடுகளின் சிரமத்தைக் குறைக்கப் பார்க்கிறீர்களா, அல்லது அவைகளுக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டு பண்ண நினைத்திருக்கிறீர்களா?

* * *

சாமிநாதையர் : தங்கள் புதல்வி கல்யாணத்தின் பொழுது காணவில்லையே? எங்கு சென்றிருந்தீர்கள்.

கோபாலையர் : மாப்பிள்ளைக்கு வேலை தேடப் போயிருந்தேன்.

* * *

வியாதியஸ்தன்—என்னை எப்படியாவது குணப்படுத்தி விட்டால் உங்களுக்கு மிகுந்த உபகாரம் செய்வேன்.

வைத்தியர்—(ஆசையுடன்) என்ன உபகாரம்?

வியாதியஸ்தன்—மீண்டும் உங்களிடம் வந்து தொந்திரவு கொடுக்க மாட்டேன்.

* * *

இரண்டு நாகரிகப் பெண்மணிகள் பொதுவுடைமைக் கட்சியைப் பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.

ராதா—அடியே அரசாங்கம் இன்னும் கொஞ்ச காலத்தில் பொதுவுடைமையாக்கி எல்லாப் பொருப்பையும் ஏற்றுக் கொள்ளுமாமே!

ஸீதா—அப்பொழுது பங்கஜத்தின் பாடு கொண்டாட்டந்தான். அவள் குழந்தையை அரசாங்கம் தூங்க வைக்கிற வேடிக்கையைப் பார்க்கலாம்.

* * *

கலியாணம் முடிந்த மறுநாள் வேலைக்காரி முற்றத்தைப் பெருக்கிக்கொண்டு இருக்கும் பொழுது ஒரு வெள்ளிக் கரண்டியைக் கண்டெடுத்தாள்.

"நேற்று வந்தவர்கள் யாருக்கோ பையில் துவாரம் இருந்திருக்கிறது" என்றாள்.



மயில் விடு தூது.


ராய. சொ.

(உரிமை ஆக்கியோனுடையது)

செல்வனை; என்னுளம் சேர்தரு
செம்மலைச்; சீர்வடிவு
மல்கும் அழகனை; மன்னி
வழுத்துவிர் ! மாமயில்காள் !
பல்கிய காதலுன் பாலடைந்
தாள்!காந்தி பாதமுறை
எல்வளை ! எங்களை வென்றாள்,
இயலினில் ! என்றெடுத்தே.

" காந்தி கலித்துறை யந்தாதி "

ஓர் அணங்கு தன்னுடைக் காதலனுக்கு மயில்களைத் தூதாக அனுப்புகின்றாள். ஏ ! மயில்காள் ! என்னுள்ளத்தே குடி புகுந்த அழகிய சீராளனை நெருங்கி "உன்மீது அப்பெண்கொடி நிறை காதலுற்றாள்; அவள் காந்தியின் திருவடி மறவாதவள்; சாயலில் எங்களை வென்றவள்." என்று எடுத்தோதுங்கள் எனக் காதலி கூறுவதாக இச் செய்யுள் ஆக்கப்பட்டது.



புராண விநோதம்

(வைசம்பாயனன்)

ஒரு அசுரன் இவ்வுலகத்தை ஒரு பாய் போல் சுருட்டிக் கையிலெடுத்துக் கொண்டு பூமிக்குள் போய்விட்டான். காப்புக் கடவுள் திருமால் அவ் உலகத்தை மீட்பதற்குப் பன்றியாகப் பிறந்தருளினர். கடவுள் வராக மூர்த்தியாகிப் பூமியை நோண்டி உலகத்தைத் தனது மூக்கிலே கோத்து வெளிக்குக் கொணர்ந்துவிட்டார். இது ஒரு புராணக் கதை. பன்றியின் மூக்கில் பூகோளத்தோடு ஒரு படம் இருப்பதைப் பலர் பார்த்திருக்கலாம். உலகம் என்பது என்ன! பூமி யென்பது எது; பூமிக்குள் உலகம் என்பது திணிக்கப்படுவது; திரும்பக் கொணரப்படுவதென்பதற்குப் பொருள் என்ன? இவ்விஷயத்தில் தர்க்க சாஸ்திரிகள் புகுந்து மூளையை ராவி மண்டையை உடைத்துக் கொள்வார்களாக!

* * *

ஏறக்குறைய இதுபோலவே இன்னொரு புராணக் கதை. வேதம் நான்கையும் வாரிச் சுருட்டிக்கொண்டு கடலுக்குள் புகுந்து விட்டான் ஒரு பொல்லாதவன். உலகத்தைக் காப்பதற்றென்றே உட்கார்ந்திருக்கும் கடவுள் சும்மா விடுவாரா? வேதம் போய்விட்டால் உலகத்தை எப்படிக் காப்பது? உடனே மீனாய்ப் பிறந்தார் கடவுள். கடலுக்குள் புகுந்து அந்தத் திருடன் கையில் ஒளித்து வைத்திருந்த நான்கு வேதங்களையும் நான்கு குழந்தைகளாக்கி எடுத்துக்கொண்டு ஓடிவந்துவிட்டார். திரும்ப அக்குழந்தைகளை வேதமாக்கினாரோ என்னவோ; அது நமக்குத் தெரியாது. "வேதம் என்றவற்றில் ஒரு பிரதியை ஒருவன் கொண்டு போனால் என்ன முழுகிப்போய் விட்டது; வேறு பிரதி இல்லையா? இதற்கு ஏன் விஷ்ணுமூர்த்தி வேறு வேலையை விடுத்து இவ்வளவு சிரமப்படவேண்டும்" என்று ஒரு ஒலி கேட்கின்றது. ஏன் அந்தப் பயலைத் தூக்கிக்கொண்டு போக விடவேண்டும்? திருடனைப் பிடித்துச் சொத்தைப் பெறுவது நியாயந்தானே?

* * *

இராமன், பரதன், கிருஷ்ணன், அர்ச்சுனன் ஆகியவரெல்லாம் பச்சை நிறம் என்று நூல்கள் கூறுகின்றன. இப்போது அத்தகைய நிறமுள்ள மனிதர் எவரையும் எங்கும் காண்கின்றோமில்லை. அவர்களெல்லாம் பண்டைக்காலத்தாராகலின் இருந்திருக்கலாம்! இப்போது இல்லையென்பதற்காக அவர்களைப் பொய் என்றால் பெரியோர் சாபம் வரும்! ஆனால் ஒன்று! பழய நாளில் பச்சை, நீலம், கறுப்பு ஆகிய எல்லாம் ஒரே நிறம் எனக் கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. "மையோ! மரகதமோ! மழைமுகிலோ! மறிகடலோ!" என்பது போல் பல இடங்களில் இராமன் அலங்கரிக்கப்படுகின்றான். "நீலநெடுங் கிரியும் மழைமுகிலும் பவ்வ நெடு நீரும் காயாவும் நிகர்க்குமிந்தக் கோலமும்" என்பன வாதி சொற்றொடரால் கிருட்டினன் வர்ணிக்கப்படுகிறான். பச்சையும் கறுப்பும் நீலமும் வெவ்வேறு என அறியும் இக்காலத்தார் கொஞ்சம் இவ்விஷயத்தில் பழயவரைக் குறைவாகவே மதிப்பர். இதுகொண்டு கம்பனையும் வான்மீகியையும் வில்லியையும் வியாசனையும் மற்றைப் புலவோரையும் காப்பதற்காகத் தற்காலத்தில் அவதரித்திருப்போர் கோபித்துக் கொள்ளாதீர்கள். கொஞ்சம் யோஜித்துப்பாருங்கள்.

* * *

இரண்டு கால்; நான்கு கை; ஒரு யானைக் கை; யானை முகம்; பெரிய—முரட்டு—பேழை வயிறு. இப்படி ஒரு கடவுள். இவரையும் இவர் பெரிய வயிற்றையும் கூடச் சுமப்பது ஒரு பெருச்சாளி! "பேழை வயிற்றோனே! பெருச்சாளி வாகனனே!" ஆ! ஹா! எவ்வளவு அழகு! கடவுளர்கள் விஷயத்தில் மட்டும் அதிகமாகக் கை வைக்கக்கூடாதாகலின் நிறுத்திவிடுகிறேன். பிள்ளையார் சும்மா மோதகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாலும் பக்தர்கள் விடுவார்களா? அவர்கள் சாபத்திற்கு நான் ஏன் ஆளாக வேண்டும்? வேடிக்கைப் பொருள்களும் உலகத்திற்குத் தேவைதாமே!

* * *

மநு தர்ம சாஸ்திரத்தில் சிரார்த்தம் செய்யும் போது கிழட்டு ஆட்டுக் கறியைக் கொண்டு செய்தால் பல வருடங்கள் சிரார்த்தம் செய்த பலன் கிடைக்கும் எனக் கூறப்படுகிறது. சிரார்த்தத்தில் சிரத்தை கொண்ட வைதிக நண்பர்கள் ஏனோ இதனைப் பின்பற்றிப் பல வருடப் பலனை ஒரேயடியாகச் சம்பாதிக்க முயலவில்லை?

ஜவஹரின் விடுதலை

அலஹாபாத் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் இன்னும் ஒருநாள் வரை விடுதலையடைந்திருக்கலாம் என்று பண்டித ஜவஹர்லாலிடம் 17-ந் தேதி யறிவித்தார்.

கல்கத்தா, லாகூர் பத்திரிகைகள் பண்டிதருடைய பார்வைக்கு வந்தவுடன் அவை எல்லாம் தவறு என்று கூறினர். தனது அபிப்பிராயத்தைக் கூறாது இருக்கும்பொழுது இப்படிப் பிரசுரிப்பதன் அர்த்தம் என்ன என்று கேட்டார்.

ஸ்ரீமதி கமலா நேருவிற்கு நேற்றையவிட இன்று சற்று குணப்பட்டு வருகிறது. ஆனல் இருமல் அதிகமாக இருந்தது. இருதயத்தில் வந்த பிடிப்பு அரைமணி நேரம் இருந்தது.

நாகரிக மாதர் மகாநாடு

அந்தரபுரியில் கூடியது

கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

ஆகாச நிருபர் அறைவது.

(1) சாட்சாத் சிவபெருமான் நமது பெண் இனத்தைச் சேர்ந்த பார்வதியைத் தமது மனைவியாக்கிக் கொண்டு தமது திருமேனியில் எப்போதும் சுமந்து கொண்டிருப்பது நம்மினத்திற்கே பெருமையாகலின் அதன் பொருட்டுச் சிவனார்க்கு இம்மகாநாடு மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறது. ஆனால் மேற்படி அானர் மற்றொரு பெண்ணைத் தலையிலே தூக்கிக்கொண்டிருக்கிறார்; நம்மினத்திற் பிறந்த ஒருவரை எப்போதும் தலையிலே சுமந்து கொண்டிருப்பது நமக்குப் பெருமைதானெனினும் பெண்ணைத் தலையில் தாங்கிய அளவுக்கு நன்றி பாராட்டலாம்; எனினும இரண்டு பெண்களை அவர் பிடித்துக் கொண்டது வெறுக்கத் தக்கது; ஆதலின் அச்செயலை இம்மகாநாடு பலமாகக் கண்டிக்கிறது.

(2) திருமகளை மார்பின்மீது வைத்துக்கொண்டிருக்கும் நாராயணனையும் கலைமகளை நாவில் இருத்திக்கொண்ட பிரமாவையும் இம்மகாநாடு பாராட்டுகிறது; என்றாலும் விஷ்ணு மூர்த்தியும் இரண்டு மனைவியைக் கொண்டார் என்ற கதையைக் கேட்கும்போது அவரையும் கண்டிக்கா திருக்கமுடியவில்லை. பிரமதேவனைத்தான் இம்மகாநாடு சாலவும் போற்றுகிறது.

(3) முருகன் ஜாதிவித்தியாசங்கூடப் பாராது அந்நாளிலேயே வள்ளியென்ற குறப்பெண்ணை மணம் செய்துகொண்டு மயில்மீது மடியில் வைத்துக்கொண்டு ஆட்டம் போட்டதை இம்மகாநாடு மகிழ்ச்சியாகக் கொண்டாடுகின்றதெனினும் அவனும் இம்மகாநாட்டின் கண்டனத்துக்கு ஆளாகியே தீர்கின்றான் என்பதை வருத்தத்துடன் அறிவியாதிருக்க முடிவில்லை. இவனும் தகப்பனையும் மாமனையும் பின்பற்றி இரண்டு பெண்களை மணந்தது அக்கிரமம் என்றே இம்மகாநாடு கருதுகின்றது.

(4) ஒரு பெண் பல ஆண்களையோ ஒரு ஆண் பல பெண்களையோ ஒரே சமயத்தில் மணப்பதை இம்மகாநாடு ஆதரிக்கவில்லையானாலும் பல பெண்களை மணந்து பெண்ணுலகத்தை அவமானப்படுத்திய ஆடவர் வெட்கும்படி ஐந்து ஆண்களை மணந்து ஆண்டு, ஆடவரோடு போட்டிபோட்ட துரோபதையை இம்மகாநாடு ஒருவகையில் பாராட்டுகிறது. தவிர, ஐவருக்கு மனைவியாக இருந்தும் கற்பரசியெனப் பெயர் வாங்கிய பாஞ்சாலியின் சாமர்த்தியத்தை இம்மகாநாடு வியக்கிறது.

(5) பெண்ணுலகத்தை அநியாயமாக இழிவுபடுத்தி அவதூறு பேசிய பழய—புதிய புலவர் கூட்டத்தை இம்மகாநாடு ஆணித்தரமாகக் கண்டிக்கிறது.

(6) திருவள்ளுவர்கூட நம்மினத்தவரைச் சிற்சில இடங்களில் குறைத்துப் பேசுவது அவர் பெருமைக்கு இழுக்காகும்; "மகளிர் மனம்போல வேறுபடும்" என்றும் 'பெண்வழிச் சேறல்' அதிகாரத்தில் நம் வழி யொழுகல் ஆகாது எனவும் நாம் சொல்வதைக் கேட்டல் தகாதெனவும் இப்படி வேறு சில இடத்திலும் உயர்ந்த பெண்மையை இழிவுபடுத்தும் வள்ளுவர் செயலை இம்மகாநாடு கண்டிக்கிறது. அவர் உண்மை கடைப் பிடிப்பவராகலின் இப்போது இருப்பாரானல் அவர் கொள்கையை உண்மையை உணர்த்தித் திருத்த முடியும் என இம்மகாநாடு நம்புகிறது.

(7) பெண் என்றவுடன் பித்துப் பிடித்தவர்போல் ஏங்கி வாயில் வந்தபடி வர்ணித்துப் பல ஆயிரம் பாட்டுக்கள் பாடி மயங்கிய 'சீவக சிந்தாமணி'யின் ஆசிரியரான முற்றத் துறந்தவரெனக் கூறப்படும் திருத்தக்க தேவரென்பார் "பெண்ணெனப்படுவ கேண்மோ பீடில பிறப்பு நோக்கா, உண்ணிறை யுடைய வல்ல ஓராயிரம் மனத்தவாகும், எண்ணிப்பத் தங்கை யிட்டால் இந்திரன் மகளும் ஆங்கே, வெண்ணெய்க்குன் றுருகுமாப்போல் மெலிந்துபின் னிற்கு மன்றே" என்பதுபோன்ற பாட்டுக்களால் பெண்ணுலகை மிகவும் இழிவுப்படுத்திப் பேசியது அவரது இழிதகைமையையே காட்டுகிறதென இம்மகா



பம்பாய் காங்கிரஸ் வரவேற்புக் கமிட்டியார் காங்கிரசுக்கு வரும் டெலிகேட்டுகள் தங்கப்போகும் ஒர்லிச்சாலையைப் பார்வையிட்டார்கள். S. P. B.

சர்தார் சார்தூல் சிங்கின் வீர மொழிகள்.

வகுப்புவாதிகளைப் பற்றிக் கண்டனம்.

காங்கிரஸ் காரியக் கமிட்டியின் அங்கத்தினரான ஸர்தார் சார்தூல்சிங் சென்னைக்கு விஜயம் செய்திருந்தபொழுது சென்னைக் காங்கிரஸ் மண்டபத்தில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர்.

அவர் பேசியதின் சாரம் பின்வருமாறு.

பதின்மூன்று வருஷ அனுபவத்தின் பேரில்தான் சட்டசபைக்குச் செல்வதைப்பற்றி ஒரு முடிவிற்குக் காங்கிரஸ் வந்திருக்கிறது. இப்பொழுது சட்டமாக இருக்கும் அடக்குமுறைச் சட்டங்கள் எல்லாம் முதலில் எதேச்சாதிகாரமாகத்தான் வந்தன. அதைச் சட்டமாக அங்கிகரித்தவர்கள் சட்டசபை அங்கத்தினர்கள்தாம். இதனால் இவ்வளவும் இந்தியரின் சம்மதத்தின் பேரில்தான் நடத்தப்பட்டது என்று அரசாங்கம் சொல்லிக்கொள்ள வசதி ஏற்பட்டு விட்டது. இதைத் தடுப்பதற்காகத்தான் காங்கிரஸ் சட்டசபைப் பிரவேசத்தைப்பற்றி இந்தத் தீர்மானத்திற்கு வந்திருக்கிறது. மகாத்மா இதற்குச் சம்மதித்தது தனது கொள்கையை விட்டுக் கொடுத்ததல்ல. இது போரை எப்பொழுது நிறுத்தவேண்டும் என்று தெரிந்த அறிவாளியின் செயல்.

பொப்பிலியின் கூற்று

முதல் மந்திரி பொப்பிலி ராசா ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கையும் காங்கிரஸின் கொள்கையும் ஒன்றுதான் என்று வாய் கூசாமல் சொல்லுகிறார். காங்கிரஸ் பூரண சுயராஜ்யத்திற்குப் போராடியது. ஜஸ்டிஸ் கட்சியில் எந்த அங்கத்தினராவது அதை ஆதரித்தாரா? இதைவிடக் கழுதையும் குதிரையும் ஒன்று என்று கூறலாம்.

ஜஸ்டிஸ் கட்சி பிரிட்டிஷ் அதிகாரத்தின் நிழலிலே எப்பொழுதும் இருக்கிறது. வெள்ளை அறிக்கையைப் பொருத்தவரை அதிகமாக இன்னும் இரண்டொரு வேலைகள் ஏற்படலாம். வெள்ளை அறிக்கையானது குடியரசு அமைப்பில் ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தலாம். ஆனால் குடியரசின் நற்பயன் ஒன்றும் அதில் இருக்காது.

வகுப்புத் திட்டத்தின் பேரில் பண்டித மாளவியாவும் திரு. ஆனேயும் கொள்கை வித்தியாசத்தால் விலகிக்கொண்டு தேசியக் கட்சி ஒன்று ஸ்தாபித்திருப்பதைக் குறித்து வருந்துகிறேன். காங்கிரஸ் வகுப்புத் திட்டத்தின் அஸ்திவாரத்தையே தகர்த்துவிட யத்தனிக்கும்பொழுது இந்துக்களும் சீக்கியர்களும் பண்டிதருடனும் திரு. ஆனேயுடனும் சேர்ந்து எதிர்த்தால் அதிகமாக இரண்டொரு இடம் கிடைக்கலாம். ஒற்றுமையைக் குலைப்பதற்குச் செய்யப்பட்ட பிரிட்டிஷ் அரசியலின் சூழ்ச்சி வகுப்புவாதத்தில் அரசாங்கம் தலையிடுவதை காங்கிரஸ் விரும்பவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் முஸ்லீம், சீக்கிய அறிவாளிகளில் பலர், காங்கிரஸைத்தான் ஆதரிக்கிறார்கள் என்று நினைவில் வைக்க வேண்டும். தேசீய முஸ்லீம்களும், சீக்கியரும், ஹிந்துக்களும் ஒருமுகமான தீர்மானத்திற்கு வந்தால் வகுப்புத் திட்டம் ஒழிந்துவிடும்; வெள்ளையறிக்கைக்கும் வகுப்புத் திட்டத்தின் கதிதான். முஸ்லீம் அங்கத்தின் பிரதிநிதிகளும் ஜஸ்டிஸ் கட்சியினர் மாதிரிதான். பஞ்சாபில் அவர்களுக்கு மதிப்பு இல்லை. சென்ற பத்து வருஷங்களாக ஒரு பொது ஜனக்கூட்டத்திலாவது அவர்கள் பேசியதில்லை.

முடிவுரையாக சார்தூல் சிங் காங்கிரஸ் அபேட்சகர்களை ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டார்.



பிரஞ்சு இந்தியாவிற்கு மாட்சிமைதங்கிய திரு. ஸோலமெய்க் கவர்னர் ஜெனரலாக வந்தபொழுது திரு. ஜோஸப் டேவிட் என்ற புதுச்சேரி மேயர் வரவேற்புப்பத்திரம் வாசித்தார். கவர்னர் ஜெனரலும், புதுவைக் கார்பொரேஷன் மேயரும் மற்ற அங்கத்தினர்களும், மாஜி ஸெனட்டர் திரு. ஹென்றி கபீலும் இருக்கிறார்கள். P. P. B.


நாடு கருதி அஞ்ஞானியின் பொருட்டு இரங்குகிறது.

(8) பெண்ணுலகத்தின் பெரிய எதிரி பட்டினத்தார் என்பவர். பெண்ணினத்தார் சம்பந்தப்பட்டவரை அவர் பெரும் பாவி என்றே கூறவேண்டும். அவருடைய பாட்டுக்களைப் படிப்பது நாவுக்கே இழுக்கு என்று இயம்பலாம். பெண்களைப்பற்றி அவர் பாடிய பாக்களையெல்லாம் நீக்கியவையாக்குதல் வேண்டும் என்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.



ஆஸ்திரேலியாக் காடுகளில் நெருப்புப் பற்றினால், உடன் அதை அறிந்து அதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தருக்குத் தகவல் கொடுக்கும் பொருட்டு விமானங்கள் அமர்த்தப்பட்டுள்ளன.

—N. I. A.




நியூஜிலாந்திலுள்ள நேப்பியர்த் துறைமுகத்தின் தோற்றம். —N. I. A.



விக்டோரியாவில் ஓடிக்கொண்டிருக்கும் ரயில் தொடரில், ஜெஸ்டர் பிரபு பிரயாணம் செய்யப்போகும் ஒரு வண்டியின் உள் தோற்றம். —N. I. A.



நியூஜிலாந்து மில்போர்டு டிராக்கிலுள்ள எய்தா ஏரியின் ஓர் அழகிய காட்சி. —N. I. A.



மெல்பேர்ன் நகரத்தில் நடைபெறப்போகும் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, ராணுவம் அணிவகுத்துப் பழக்கப்படுகிறது. —N. I. A.



மெல்பேர்ன் நகரத்தில் கடலில் நீந்துபவர்கட்கு ஏற்படும் அபாயத்தைத் தடை செய்வதற்காகப் பெண்கள் சங்கமொன்று ஏற்பட்டிருக்கிறது. படத்தில அச்சங்கத்தின் அங்கத்தினர் சிலர் காணப்படுகின்றனர். —N. I. A.



விக்டோரியா கவர்னரின் மாளிகை. கௌஸ்டர் பிரபு இங்குதான் தங்கியிருப்பார். —N. I. A.

அகல்யை.

சோ. விருத்தாசலம்.

வேதகாலம்.

சிந்து நதி தீரத்திலே.

இப்பொழுதுபோல் அல்ல. செழித்த காடுகள்; புல்வெளிகள்; இடையிடையே மனிதக்கூட்டங்கள், சிறு சிறு குடிசைகளில், அது திரண்ட ஒரு சிறு கிராமத்தில் வசிக்கிறார்கள். எங்கெங்கோ அதிக நெருக்கமாக, ஜாஸ்தியாக வசிக்கும் மனிதக்கூட்டங்கள்—நகரம் என்ற ஹோதாவில். இதில் அரசன் இருப்பான்—அதனால் தலை நகர்.

இவ்வளவும் தாண்டி ஜன சஞ்சாரமே இல்லாத பாகம். சிந்து நதி ஹிமயத்தின் மடியை விட்டுச் சமவெளிக்கு வர வாரம்பிக்கும் இடம். மரமும் கொடியும் மனிதனின் வெற்றியைக் காணாதவை, சிந்துவின் கன்னிப்பருவம்—களங்கமற்ற உள்ளத்தைப் போல் பாறைகளைத் தழுவிச் சுழித்துச் சிரித்துச்சென்றது.

அங்கே கௌதமனுடைய வாசஸ்தலம். சற்று காட்டின் உள்ளே தள்ளி. சிந்துவின் கரைக்கும் குடிசைக்கும் கூப்பிடுதூரம்.

குடிசைக்குப் பக்கத்தில் சற்றுத் தள்ளி வடக்குப் புறமாக செழித்த புல்வெளி. தூரத்திலே ஹிமவானின் பனிச்சிகரம், இவர்களை எப்பொழுதும் தீங்குவாரமல் கவனிப்பது போல்.

கௌதமன் அந்தணன், அதாவது வித்தைக்கும் கலைக்கும் தனது வாழ்க்கையை அற்பணம் செய்துவிட்டவன். அது ஒருகாலம். வாலிபர்களுக்கு, சிறுவர்களுக்கு வித்தையைப் போதிப்பதில் ஒரு பிரேமை. அதெல்லாம் பழையகதை.

இப்பொழுது இந்த அகண்ட உலகத்தில் உள்ள சராசரங்களின் அழகு, அதன் காரணம், அதன் மூலம் இவை யெல்லாவற்றையும் அறிய ஒரு ஆர்வம். அதனால்தான் இந்தத் தனியிடத்தில் வந்து நிம்மதியாகத் தனது ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளும் படி தனித்திருக்கிறான். அதாவது சமூகத்தைவிட்டு விலகி, தனது பத்தினியுடன் இங்கு வசித்து வருகிறான்,

இப்பொழுது கௌதமனுக்கு வயது முப்பது. கறுத்து அடர்ந்த தாடி, அகன்ற பிரகாசமான ஒளிவிடும் கண்கள், மெல்லிய உதடு, பரந்துவிரிந்து திரண்ட மார்பு, ஒடுங்கிய வயிறு, எல்லாவற்றிலும் இயற்கையின் கனிவு பொங்கியது. மிருக அழகல்ல. ஆளை மயக்காது, வசீகரிக்கும். அந்தக் கண்களில், அந்த உதடுகளில் ஒரு தெய்வீக ஒளி—தேஜஸ்—உள்ளத்தின் சாந்தியை எடுத்துக் காட்டின.

அவனது மனைவி, அவள்தான் அகல்யை. அவன் ஆணுக்கு இலக்ஷியம் என்றால் இவள் பெண் குலத்திற்கு வெற்றி. மருண்ட பார்வை, அவனைக் காணுந்தோறும் காதல் பொங்கும் கண்கள். அவனைத் தனது உள்ளத்தில் மட்டும் வைத்து விடவில்லை. அவளது ஒவ்வொரு செயலும் அவனது இன்பத்திற்காகவே. அதிலே அவளுக்கு ஒரு இன்பம்.

கௌதமனும் இவளைக் காதலிக்கிறான். ஆனால் அவன் காதல் காட்டாறு போன்றதல்ல. சாந்தியிலே பிறந்தது. அவனது மனம் இடியச் செய்ய ஒரு லேசான வழி, அவள் மேல் ஒரு துரும்பை எடுத்து வீசினாலும் போதும். அவனது காதலின் உயர்வை அவள் அறிந்திருந்தாள். அவள் கற்புள்ளவளாக இருந்ததில் ஆச்சரியமில்லை. அவன் அவளுடைய இலக்ஷியம். அவள் கற்புடன் இருப்பதில் என்ன அதிசயம்!

II

ஒரு நாள் சாயுங்காலம். சூரியன் இன்னும் அஸ்தமிக்க வில்லை. தூரத்திலிருக்கும் பனிமலைகள் செந்தழலாகக் கனிந்தன. அகல்யா குடிசைக்குள்ளிருந்து குடத்தை இடுப்பில் ஏந்திய வண்ணம் வெளிமுற்றத்திற்கு வருகிறாள். அந்த வெளி முற்றத்தில் கௌதமன் ஒரு கிரந்தத்தை வாசித்துக் கொண்டு இருக்கிறான். பக்கத்தில் வந்துநிற்கிறாள்.

கௌதமனுக்குச் சற்று நேரம் இவள் இருப்பது தெரியாது. கிரந்தத்தில் இருந்த லயிப்பு. பிறகு வந்திருக்கிறது தெரிந்தது. அன்பு கனிந்த பார்வையுடன் சிரித்துக்கொண்டு, "என்ன அகல்யா நேரமாகி விட்டதா? குளிக்கவா? நான் கொஞ்சம் கழித்து வருகிறேன். கிரந்தத்தில் கொஞ்சந்தான் பாக்கி இருக்கிறது" என்றான்.

குடத்தைக் கீழே வைத்து விட்டு அவன் தலையை மார்புடன் சேர்த்தணைக்கிறாள். நெற்றியில் அவள் அதரங்கள் படிந்து அப்படியே சற்று நேரம் இருக்கிறது.

"நான் வருகிறேன்" என்று குடத்தை எடுத்துக் கொண்டு நதிக்குச் செல்லுகிறாள். அவள் மனதில் ஒரு ஏமாற்றம். இத்தனை நேரம் எதிர்பார்த்திருந்தது நடக்காததினால். ஆனால் கணவன் மீது கோபம் இல்லை. அவருடன் சிரித்தும் குதூஹலமாக விளையாடிக் கொண்டும் நதிக்குச் செல்ல முடியாமையினால்.

அன்று அவள் வெகு வேகமாக நதியை யடைகிறாள். உடைகளைத் துவைப்பது, குடத்தைக் தேய்ப்பது, எல்லாம் வெகு துரிதமாக நடந்தன.

உடைகளை எல்லாம் களைந்து பாறையின் மீது வைத்து விட்டு நீரில் குதிக்கிறாள். அந்தக் குளிர்ந்த நீரில் நீந்தி விளையாடுவதில் என்ன இன்பமோ. ஆழமான சிந்துவில் முக்குளிப்பதும் மறுபடியும் பாறையில் ஏறிக் குதித்து நீந்துவதுமாக அதில் லயித்துப் போய் விட்டாள்.

அப்பொழுது எங்கிருந்தோ இந்திரன் எதிர்க்கரையில் வந்தான். அகல்யையின் கட்டழகு அவனைக் கல்லாகச் சமைத்தது; வைத்த கண் மாறாமல் பார்க்கும் படி செய்தது. அவளை எப்படி யேனும் அடைய வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு அவளை நெருங்க ஒரு பாறையில் இறங்கினான்.

இந்தச் சப்தம் அகல்யையின் காதில் விழுந்தது.

திரும்பிப் பார்க்கிறாள். ஒருஆடவன்! நேர்மை யற்ற மிருக உணர்ச்சி பொருந்திய முகம். அழகு தான்! நெருங்குவதின் அர்த்தம் அவளுக்குப்பட்டது. அப்படியே வெறித்து ஒரு கோபப் பார்வை பார்க்கிறாள்.

இந்திரன் நடு நடுங்கி அப்படியே நின்று விட்டான். இப்படி எதிர்பார்த்தது இல்லை அவன்,

அகல்யா ஒரு பாறையின் பக்கத்தில் மறைந்து உடைகளைச் சீக்கிரம் அணிந்து கொண்டு, குடத்துத் தண்ணீருடன் வெகு வேகமாகக் கரையேறிச் சென்று விடுகிறாள்.

இந்திரன் மனதில் அவளை யடைய வேண்டும் அடைய வேண்டும் என்ற ஒரே எண்ணந்தான். அவள் யார், என்ன செய்யப் போகிறோம் என்று எண்ண மனதில் இடமில்லை.

பைத்தியம் பிடித்தவன் போல் ஒரே வெறித்த பார்வையுடன் சென்றுக் கொண்டிருக்கும் அவன் எதிரே கௌதமன் வருகிறான். குடம் கையிலிருந்து நழுவுகிறது. ஒரே ஓட்டமாக ஓடி அவன் மார்பில் விழுந்து கோவென்று கதறுகிறாள்.

கௌதமன் அவளை யணைத்த வண்ணம் "என்ன? என்ன?" என்றான்.

தேம்பிக்கொண்டே நடந்ததைத் தெரிவிக்கிறாள். அவளைத் தேற்றிக் குடிசைக்குக் கொண்டுவிட வேண்டி இருந்தது. அவளது உயர்ந்த காதல், அதன் முடிவாக, அதன் சிகரமாக இருக்கும் அவள் கற்பு, அவனுக்கு ஒரு புதிய உண்மையைத் தெரிவிக்கின்றன; மற்ற ஆண்களிடம் மனதிலே ஏற்படும் அருவருப்பு.

III

இந்திரன் ஒரே தடவையில் தனது எண்ணம் ஈடேறச் சமயம் எதிர்பார்த்திருந்தான்.

இவ்வளவும் அகல்யைக்குத் தெரியாது. அவன் ஏதோ ஒரு பெருங் குற்றத்தை, மனத்திற்கு ஒப்பாத குற்றத்தைச் செய்ததுபோல் உள்ளம் கொதித்துக்கொண்டு இருந்தது.

கௌதமனது அன்பும் காதலும் அவளைத் தேற்றின. அன்று அவர்கள் தூங்க நெடுநேரம் சென்றது.

"உனக்காக எல்லோரும் குருடாக இருக்க முடியுமா!" என்றான் கௌதமன்.

"ஆனால் ஆந்தையாகவா விழிக்க வேண்டும்." என்றாள் அகல்யை.

இந்திரன் எப்பொழுது சமயம் கிடைக்கும், தனது பைசாச உணர்ச்சியைப் பூர்த்தி செய்துகொள்ள என்று சுற்றி வருகிறான்.

விடியற்காலை என்று கௌதமனை நினைக்கும்படி செய்து அவனை அப்புறப் படுத்தி விட்டால் ஆசை பூர்த்தியாகும்.

நடு நிசி. சந்திரன் அற்ற வானம். வெள்ளி மட்டும் கொஞ்சம் பிரகாசமாக, விடியற்காலம் என்று நினைக்கும்படி, மங்கிய வெளிச்சத்தைத் தருகிறது. இந்திரன் கோழிமாதிரி கூவுகிறான்.

குடிசையினுள் அகல்யாவைத் தழுவியும் தழுவாமலும் உறங்குகிறான் கௌதமன். அவனுக்கு எப்பொழுதும் பிசாசுத் தூக்கம் கிடையாது. கோழியின் குரல் கேட்டதும் காலைக்கடனைக் கழிக்க எழுந்து சிந்துக் கரைக்குச் செல்லுகிறான்.

அன்று நெடுநேரமாகத் தூங்காததினால் அகல்யைக்கு அயர்ந்த தூக்கம்.

பாதிக் கனவு, பாதித் தூக்கம். கணவனுடன் கொஞ்சித் தழுவி அவனுடன் இருப்பதுபோல் கனவு. இந்திரன் பூனைபோல மெதுவாக உள்ளே வருகிறான். ஆடைகள் சற்று நெகிழ்ந்து உறங்கும் அபலையைப் பார்க்கிறான்.

ஒரு மிருகத்தின் வேட்கை அன்று பூர்த்தியாயிற்று.

பாதிக் கனவு உலகத்திலிருந்த அகல்யை விழிக்கவில்லை. கணவன் என்று நினைத்துத் தழுவினாள். ஓரளவு இயற்கையின் வெற்றி.

கணவனை முத்தமிடக் கண்களை விழிக்கிறாள்.

ஐயோ! அந்தச் சண்டாளன்! எல்லாம் சுழலுகிறது. ஒன்றும் அர்த்தமாகவில்லை. சொந்த வீட்டிற்குள் இவன் எப்படி............?

பக்கத்திலிருந்த தடியால் அவன் மண்டையில் அடித்து உதறித் தள்ளிவிட்டு ஒருபுறம் கிடந்து புறண்டு துடிக்கிறாள்.

இந்திரனுக்குச் சுய அறிவு வருகிறது. தனது பைத்தியக்காரத்தனம், தனது மிருகத்தனமான கொடுமை............... அவன் உள்ளமும் வெடித்துவிடும் போல் இருக்கிறது.

நதிக்குச் சென்ற கௌதமன் இன்னும் விடியாததைக் கண்டு, ஏதோ சூது நடந்திருக்கிறதென்று விரைந்து வருகிறான்.

உள்ளே சரேலென்று நுழைந்ததும் அகல்யை கிடக்கும் கோலத்தில் காரியம் மிஞ்சிவிட்டது என்று அறிந்தார். உடனே தம் மனைவியை வாரி எடுக்கிறார். தீயில் பட்ட புழுப் போல் அவள் உடல் துடித்துப் பதறுகிறது.

குற்றத்தின் பாவமே உருவாக இந்திரன் நிற்கிறான். "அப்பா இந்திரா! உலகத்துப் பெண்களைச் சற்று சகோதரிகளாக நினைக்கக் கூடாதா?"

"கண்ணே அகல்யா அந்தச் சமயத்தில் உனது உடலுமா உணர்ச்சியற்ற கல்லாய்ச் சமைந்து விட்டது?" என்று அவள் தலையைத் தடவிக் கொடுக்கிறார்.

அவர் மனதில் ஒரு சாந்தி.

ஒரு புதிய உண்மை.

உணர்ச்சி தேவனையும் மிருகமாக்கி விடுகிறது. மனத் தூய்மையில் தான் கற்பு. சந்தர்ப்பத்தில் உடல் களங்கமானால் அபலை என்ன செய்ய முடியும்?

மௌனம்.

"இந்திரா! போய்வா!" என்றார் கௌதமர். அப்பொழுதும் மனதின் சாந்தி தெளிவாகத் தெரிந்தது.

அகல்யை?

அவள் உள்ளத்தில் ஊழியின் இறுதிக் கூத்து,—கணவனின் சாந்திக்குப் பகைப் புலமாக நின்றது.

பேர்னார்ட்ஷாவும் பிஷப்பும்

கிறிஸ்தவ மதக் குருக்களான டர்ஹாம் பிஷப், ஷாவின் புஸ்தகங்கள் வாசிப்பதற்கு நன்றாக இருக்கின்றன. ஆனால் பாரமார்த்திகமாகக் கவனிக்கும்பொழுது அவை உபயோகமில்லை என்று சொன்னார்.

அதற்கு பேர்னார்ட்ஷா விடுத்த பதில். "பிஷப் என் புஸ்தகங்களை வாசிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். பொது ஜனங்களுக்கு, அறிவிற்குப் பொருந்திய ஒரு புதிய மதத்தை சிருஷ்டிக்க ஆசைப்படும் எழுத்தாளன் நான். நான் முன்பு ஒரு தடவை சொல்லியபடி, இந்த உலகத்தில் நம்பத் தகுந்த மதம் ஒன்றுமே கிடையாது."

ஒரு சிறு கதை

போடு வோட்டு

(என். கே. சாமி)

"அப்பா! பிஸ்கோத்து வாங்கவேண்டும் வாரியா," என்றாள் சரஸு. ஆபீசிற்குச் செல்லும் அவசரத்தில் சொப்பனாவஸ்தை போலத் தன்னை மறந்திருந்த பாலசுந்தரம் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்க, சரஸு கோபமாகத் தன்னை நோக்கிக்கூறியதாக உணர்ந்தான். பாவம்! சின்னக் குழந்தை தானே! இரண்டு மூன்று நாளாய் ஏமாற்றிக் கொண்டு வந்தால் கோபம் வாராதா, என்ன? அவன் நெஞ்சு உலர்ந்தது; துக்கம் மேலிட்டது. சம்பளத்தை எதிர் நோக்கிய வாறிருக்கும் அவனுக்குக் கடன் கொடுப்பாரின்மையால் ஸரஸை சமாதானப்படுத்திச் சென்றான்.

* * *

பாலசுந்தரம், "திருச்சி, தேசீயக் கல்லூரியில்" இன்டர்மிடியேட் வகுப்பில், வாசித்து முதன்மையாகத் தேறியவன். கணக்கற்ற மக்கள் வேலையின்றித் தவிக்கும் இந்நாளில் இவனுக்கு வேலை கொடுப்பவர் யார்? வயிற்றுப்பாட்டுக்குத் தொழிலின்றித் தவிக்கும் இவனுக்குச் சுகமேது? "காற்றில்லா நெருப்புச் சாம்பல் தானே!" முன்னோர்கள் தேடிவைத்த பொருளும் படிப்புக்காகச் சிறிது சிறிதாகக் கரைந்து போய் விட்டது. போதாக்குறைக்கு ஏற்கனவே கலியாணமும் ஆகிவிட்டது. ஒரு குழந்தையுமுண்டு.

பெருத்த சிபார்சுகளின் பேரில் பாலசுந்தரத்திற்கு மாதம் ரூ 20 சம்பளத்தில் மதுரை மில்கள் ஒன்றில் குமாஸ்தா உத்தியோகம் கிடைத்தது. தான் பிறந்து வளர்ந்த இடத்தையும் பெற்ற தாயையும் விடுத்துக் கேவலம் ரூ 20 சம்பளத்துக்காக மதுரைக்குச் செல்லுவதா, என்று சிந்தித்தான். நாளை வரும் பலாக்காய்க்கு இன்று வரும் களாக்காய் மேலென்றெண்ணி ஒப்புக்கொண்டான்.

* * *

மதுரை மாநகரில் மேற்குப் புறத்திலுள்ளது ஆரப்பாளையம் என்ற இடம். உண்ண உணவின்றி உடுக்க ஆடையின்றித் தவிக்கும் எண்ணற்ற ஏழைத் தொழிலாளிகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் இந்த ஸ்தலமானது 'பஞ்சுப் பொதியிலே தீப்பொறிபோல' ஏழைத் தொழிலாளிகளின் அன்றாடம் பத்து மணி நேரம் வேலை செய்து பெற்ற கூலியின் பெரும் பாகத்தையும் உறிஞ்சிக் கொண்டிருக்கும் கள்ளுக்கடையையும் கொண்டிருப்பது ஒரு துரதிருஷ்டந்தான்.

ரஸ்தாவிற்கு மேற்குப்புறமாக அமைந்துள்ள சிறியதோரில்லமே பாலசுந்தரத்தின் வாசஸ்தலம். வீடோ சுகாதாரத்திற்குப் புறம்பான அமைப்பு; குடிக்கூலிக்கு இருப்பவர்களோ இரண்டு மூன்று குடும்பங்கள். ஆனால் வாடகையோ ஒவ்வொன்றிற்கும் ரூபாய் ஐந்து.

உயிரையே உறிஞ்சும் கள்ளுக்கடையை நோக்கிச் செல்லும் பேதை மக்களைப் பார்க்குந்தோறும் அவன் நெஞ்சு துடிக்கும்; உள்ளம் உருகும்; 'இவர்களை எல்லாம் சீர்திருத்த வழி இல்லையா?' என்று சிந்திப்பான். ஆயினும் என் செய்வான்? தன் நிலைமையை எண்ணி வாளா விருப்பான்.

* * *


"கடைசிக் காலத்தில், என்னை அன்போடு வளர்த்த அன்னையைப் பார்க்க அனுமதி தராத உன் நெஞ்சம் இரும்பினும் கடிதோ?" என்று கையில் பிடித்த தந்தியுடன் ஆத்திரத்துடன் பேசிவிட்டு, ஆபீஸை விட்டு வெளி வந்தான் பாலசுந்தரன்.

அவசர காலங்களில் தொழிலாளர்களுக்கு லீவு கொடுக்க மறுப்பதின் காரணம் என்னவோ? மேலதிகாரிகளின் அகம்பாவத்தைத் தவிர வேறில்லை.

மறுநாளே தாயார் இறந்ததாகத் தந்தி கிடைத்தது. அகம்பாவம் பிடித்த அதிகாரியினிடம் போய் மறுமுறையும் லீவு கேட்பதைவிட, அனுமதி பெறாமலே செல்வது மேலென்றெண்ணிப் புறப்பட்டு விட்டான்.

* * *

ஒருநாள் மாலை. சுமார் ஐந்தரை மணி சமயமிருக்கலாம். பாலசுந்தரம் திருச்சி ஜங்க்ஷனிலிருந்து தன் இல்லத்தை நோக்கியவாறு சென்று கொண்டிருந்தான். அனுமதி பெறாமல் சென்றதற்



திருவல்லிக்கேணி விக்டோரியா ஹாஸ்டலில் டாக்டர் ஸ்டேன்லி ஜோன்ஸ் பேசியபொழுது எடுத்த படம். —P.P.B.

காக அவனுக்கு மதுரையில் வேலை போய்விட்டது. உத்தியோக வேட்டைக்காக அவன் செல்லாத ஆபீசுகளில்லை. மனைவியினிடமிருந்த கடைசி ஆபரணத்தையும் விற்றாய் விட்டது. மறுநாளைய சமயலுக்கோ வழியில்லை. குழந்தைகளோ பசி! பசி! என்று பறக்கின்றன. என் செய்வான்.

அன்று எப்படியாவது வேலைக்குச் சென்று விடுவதென்ற தீவிர எண்ணத்துடன் புறப்பட்ட பாலசுந்தரம் 'ரயில்வே ஆபீசிற்குச்' சென்று முற்றுகையிட்டு விட்டு, திட சித்தமின்றி மனம் போன வாக்காக பல இடங்களிலும் அலைந்து திரிந்துவிட்டுக் களைத்துப்போய் உரையூர்ச் சாலையை அடைந்தான். கால்கள் தள்ளாடின. பசி காதை அடைத்தது. சாலையில் அமைந்துள்ள ஆசனத்தில் அமரச் செல்லு முன்னமேயே மயக்கமடைந்து விழுந்து விட்டான். அந்தோ! பரிதாபம்.


அப்பொழுது இரவு சுமார் பத்து மணி சமயமிருக்கலாம். நகரமே உறங்கப் போகும் சமயமாயிருந்தது. கடைக்காரர்களும் தத்தம் வியாபாரங்களை முடித்துக் கொண்டு சென்று கொண்டிருந்தனர். ஆங்காங்கு முனிசிபல் 'எலக்ட்ரிக்' விளக்குகள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. ரஸ்தாவிற்கே ஓர் பந்தல் போல மரங்கள் எங்கும் படர்ந்திருப்பது தன்னலங் கருதும் உள்ள முடையோர் பார்த்து வெட்கமுறும்படி யிருந்தது. வயல் வரப்புகளில் தவளைகளின் 'க்ரீச்' என்னும் சப்தத்தைத் தவிர, எங்கும் நிம்மதியாயிருந்தது.

உருவிய தாடியுடன், முதுகின் பேரில் பெரிய குடையொன்றைத் தாங்கியவாறு 'அல்லா'வைத் தியானித்துக் கொண்டு சென்று கொண்டிருந்த ஒரு முகமதியப் பெரியார் சட்டென்று நின்றார். குடையைப் பக்கத்தில் இறக்கி வைத்தார். பாலசுந்தரத்தண்டை நெருங்கினார். மூக்கிற்கருகில் விரலை வைத்துப் பார்க்கச் சந்தோஷமடைந்தார். அருகிலோடும் வாய்க்காலினின்று சிறிது நீர் கொண்டுவந்து முகத்தில் தெளிக்க மயக்கம் தெளிந்தது. பிறகு கொஞ்சம் ரொட்டித் துண்டு கொடுத்தார். அந்நிலைமையிலும் அந்த ரொட்டியைப் புசிக்க அவன் மனம் இடந்தரவில்லை. அதைக் குழந்தைகளுக்குக் கொண்டுபோய் கொடுக்கலாமென்ற கருத்துடன் வைத்துக் கொண்டான்.

அப்பெரியார் ஓர் வண்டியமர்த்தி அவனை அனுப்பி வைத்ததுடன் தன்னை மறுநாள் வந்து பார்க்கும்படி சொல்லியனுப்பினார். அவர் ஓர் ரொட்டி வியாபாரி என்று பாலசுந்தரம் அறிந்தான்.

* * *

“கிளாஸ்கோ” போன்ற அன்னிய நாட்டுப் பிஸ்கோத்துகளையும் பின்னடையச் செய்யும் உயர்தர பிஸ்கோத்துகள் தயார் செய்வோர் “பாலசுந்தரன்” கம்பெனியார்கள் தான் என்ற கியாதி பரவியது. யாதொரு பயனுமில்லா ஆங்கிலப் படிப்பைப் படித்துவிட்டு வேலையில்லாத் திண்டாட்



சூரியனைப் பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சிக்கு கோடைக்கானலில் இருக்கும் அனமோ மீட்டர் கோபுரம்.

—P. P. B.

டத்தால் வாடிய பாலசுந்தரம் அம்முகமதியப் பெரியாரிடம் வேலைக்கமர்ந்து பல முறைகளையும் கற்று இப்பொழுது ஓர் முதல்தர பிஸ்கோத்து கம்பெனியை ஏற்படுத்தி விட்டான். பானுவும் செழுங் கிளை தாங்கும் செல்வன் ஆனான். ஆனால் தேச பக்தியில் சிறிதும் பின்னடைந்தவனல்லன். இரு முறை சிறை சென்று தடியடி பட்டவன்.

காங்கிரஸ் சார்பாக சட்டசபைக்கு நிற்கப் போகிறார் பிஸ்கட் கம்பெனி பாலசுந்தரம். இப்பொழுது நடக்கப் போகும் தேர்தல், காங்கிரஸ் எந்த தேசீயத்திற்குப் பிரதிநிதியாக இருக்கிறதோ, அந்த தேசீயத்திற்கும் சர்க்காரின் அடக்குமுறைக் கொள்கைக்கும் நடக்கப்போகும் போட்டியாதலின், ஸ்ரீமான் வோட்டரே, தாங்கள் யாருக்கு வோட்டுப்போடப் போகிறீர்கள். எங்கே—பார்க்கலாம் உங்கள் சமர்த்து.

லெட்சுமிபுரத்தில் ‘சுகாதார விழா’

இந்நகர் உயர்திருவாளர் ந. சொ. அரு. அருணாசலன் செட்டியார் அவர்கள் ஸ்தாபித்திருக்கும் சொக்கலிங்க வித்தியாசாலையில் நாளது பவ வருஷம் ஆடித் திங்கள் 32-ம் நாள் பிற்பகல் 3 மணிக்கு “சுகாதார விழா,” பள்ளத்தூர் அருணாசலம் செட்டியார் உயர்தரக் கலாசாலைத் தலைமை ஆசிரியர் உயர்திருவாளர் A. M. S. ராகவன், B.A., L.T. அவர்களின் தலைமையில், பல தனவைசிய கனவான்கள் சீமாட்டிகள் குழுமியிருக்க இனிது கொண்டாடப் பெற்றது. சொ. வி. மாணவ மாணவிகள் கடவுள் வாழ்த்து இன்னிசையுடன் பாடினர். சொ. வி. மாணவர் மு. சுப்பிரமணியன், சுந்தரம், பொன்னையா, அருணாசலம், மாணவி மு. அன்னபூரணி, முதலியோர் முறையே “தொத்து வியாதி” “நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்” “பிளேக்” “வாந்திபேதி” “ஆகாரமும் ஜிரண சக்தியும்” என்னும் பொருள் பற்றிப் பிரசங்கங்கள் செய்தனர். இடையிடையே மாணவ மாணவிகள் சுகாதாரப் பாக்களால் சபையோரை மகிழ்வித்தனர். கும்மி கோலாட்டமும் நடிப்புப் பாக்களும் சபையோர் மகிழும்படி நிகழ்த்தினர். பிறகு தலைவர் அவர்கள் அரிய பிரசங்கம் செய்தனர். கடைசியாகத் தலைவருக்கு மலர்மாலை சூட்டப் பட்டு வந்தனம் கூறி, நாட்டு வாழ்த்துப் பாடப்பெற்று, சபையோர்க்குக் கற்கண்டு வழங்கியதும் விழா இனிது நிறைவெய்தியது என்று கரியதரிசி அறிவிக்கிறார்.

கம்பை தனவைசியர் கல்வி நிலையம்.

கம்பை தனவைசியர் கல்வி நிலையத்தின் ஐந்தாவது ஆண்டு விழா பவ-வருஷம் ஆடி-மாதம் 27-ந் தேதி (11-8-34) சனிக்கிழமை மாலை 3 மணிக்குத் திருவாளர் க. வீ. அழ. ராம. அழகப்ப செட்டியார், M. A., Bar-at-Law அவர்கள் தலைமையில் இனிது நடந்தேறியது.



சூர்ய பகவான் தற்கொலை செய்து கொள்வாராம்

சூரியன் பல யுகங்களாக எரிந்து பிறகு வரவர உஷ்ணங் குறைந்து அதைச் சுற்றிவரும் மற்ற கிரகங்களில் உள்ள ஜீவராசிகளை அழித்துவிடும் என்று இவ்வளவு காலம் விஞ்ஞானிகள் நினைத்திருந்தார்கள்.

இந்தக் கொள்கையை மறுத்து டாக்டர் பேட் (Dr. Baade) என்பாரும் டாக்டர் பிரிட்ஸ் ஸ்விக்கி (Dr. Fritz Zwicky) என்பாரும் ஒரு ஆராய்ச்சி வெளியிட்டிருக்கிறார்கள்.

சூரியன் திடீரென்று தற்கொலை செய்து (வெடித்து) பக்கத்திலுள்ள கிரகங்களை அழித்து தானும் அழிந்துவிடும் என்பது அவர்கள் ஆராய்ச்சியின் சாரம். இதற்குச் சான்றாக 'நோவே' (Novae) என்ற நட்சத்திரங்கள் இம்மாதிரி எரிந்து அவிவதைக் கவனித்து எழுதுகிறார்கள். 1900 வருஷத்திற்குப் பின் இதுவரை இம்மாதிரி நாற்பது தடவை நடந்திருக்கிறதாம்.

உலகத்தில் பெரிய ஆகாய விமானம்

இப்பொழுது ஜெர்மனியில் ஒரு ஆகாயக் கப்பல் தயாராகிக்கொண்டு இருக்கிறது. ஏறக்குறைய வேலை பூர்த்தியாகி விட்டது. அதற்கு L. Z. 129 என்று பெயர். இதுதான் உலகத்திலேயே பெரிய விமானமாக இருக்குமாம். தற்சமயம் அமெரிக்காவில் இருக்கும் L. Z. 29 தான் இதுவரை உலகத்திலே பெரியது. ஜெர்மெனி ஆகாய விமானம் ஐம்பது பிரயாணிகளுக்கும் முப்பத்தைந்து வேலைக்காரர்களுக்கும் பத்துடன் மூட்டைகளுக்கும் இருக்க வசதி பண்ணப்பட்டிருக்கிறது.

திடீரென்று மனிதன் சிவப்பாக மாறினான்

ஒருமனிதன் லண்டனில் திடீரென்று சிகப்பாக மாறிவிட்டானாம். அதற்கு சாதாரணமாக யாருக்கும் வராத க்ரோமிடோஸிஸ் (Chromidosis) என்ற வியாதி தான் காரணம்.

பிணியாளனும் ஒரு டாக்டர் தான் எகிப்து (Egypt) தேசத்தில் அவர் தமது தொழிலை நடத்திக்கொண்டு இருந்துவிட்டு பிரிட்டனுக்கு இப்பொழுதுதான் திரும்பி வந்திருக்கிறார்.

இந்த வியாதி வெயர்வையை உண்டு பண்ணும் தேக உறுப்பைப் பற்றியது. வியாதி வந்தவருக்கு வியர்வை நீலச் சிகப்பாகவோ, பச்சை, மஞ்சள், அல்லது கருப்பாகவோ வருவது இயற்கை. இப்பொழுது இந்தப் பிணியாளிக்கு சிகப்பாக வருகிறது.

ஒருநாள் க்ஷவரம் செய்துகொண்டிருக்கும்பொழுது, க்ஷவரம் செய்து துடைத்த காகிதம் சிவப்பாக இருப்பதைக் கவனித்தார் பிணியாளி. "உஷ்ணமாக இருக்கும்பொழுது எனது உடையெல்லாம் சிவப்பாக மாறிவிடுகிறது. நான் தேர்ந்தவர்களைக் கொண்டு எனது வியாதியைக் கவனிக்கும் பொருட்டு இங்கு வந்தேன். அவர்களுக்கும் காரணம் தெரியவில்லை" என்று சொல்லுகிறார்.

செயற்கை ரப்பர்

சாஸ்திர முறைப்படி செயற்கை ரப்பர் செய்ய முடியுமாம். சற்று விலை அதிகமாக இருந்தாலும் இயற்கை ரப்பரை விட நன்றாக உழைக்கிறது.

ஜூலியஸ் ஆர்தர் என்பவர் 1906-ல் அஸிடலினையும் உப்பையும் ஜலத்தையும் கலப்பதால் கிடைக்கிறதென்று தற்செயலாகக் கண்டு பிடித்தார்.

செய்வதற்கு ஏற்படும் செலவு குறைந்தால் ஒழிய இந்தச் செயற்கை ரப்பரினால் ஒரு பிரயோஜனமும் இல்லை.

ஐஸ் க்ரீமினால் பிழைத்தான்

முஸ்வெல் ஹில் என்ற பிரதேசத்தைச் சேர்ந்த பத்து வயதுப் பையனை ஜோஸப் உல்ஸியின் மீது ஒரு மரம் விழுந்து நெஞ்செலும்புகள் ஒடிந்து சுவாஸாசயத்திலும் ஒரு துவாரம் விழுந்து விட்டது. பையன் வீட்டிற்கு வந்தவுடன் ஐஸ் க்ரீம் கொஞ்சம் சாப்பிட்டு விட்டுப் படுத்துறங்கி விட்டானாம். அதிகாலையில் பெற்றோர்கள். கண்டு இவனை வைத்தியரிடம் தூக்கிச் சென்றார்கள். டாக்டர்கள் அவன் ஐஸ் க்ரீம் உண்டதினால்தான் பிழைத்தான், அதுதான் இரத்தப் போக்கைத் தடுத்து விட்டது, இல்லா விட்டால் பையன் பிழைத்திருக்க மாட்டான், என்றார்களாம்.

துப்பாக்கிக் குண்டு துளைக்க முடியாத தொப்பி

பிரிட்டிஷ் படை வீரர்கள் யுத்தத்தில் டின்னினால் செய்த தொப்பிகளை தலையில் அணிந்து கொண்டிருந்தார்கள். அதில் குண்டு துளைக்க முடியாதென்றாலும் ஆளை அடியின் வேகத்தினால் மூர்ச்சையடையும்படி செய்து வருவதைத் தடுக்க முடியவில்லை.

இப்பொழுது கார்க்கினால் ஒருவித தொப்பி செய்கிறார்கள். அதில் குண்டும் துளைக்காது அடியின் வேகத்தினால் உண்டாகும் அதிர்ச்சியும் இருக்காது.

ஐந்து பவுண்டிற்கு டெலிவிஷன் யந்திரம்

கம்பியில்லாத தந்தியின் உதவியால் படங்களை அனுப்பவும் பார்க்கவும் செய்

கிற யந்திரத்திற்கு டெலிவிஷன் யந்திரம் என்று பெயர். லங்கஷயரில் ஒரு என்ஜினீயர் 5 பவுண்டு விலைக்குள் ஒரு யந்திரத்தைச் செய்திருக்கிறார். சிறிய சினிமா யந்திரத்தில் வைத்தால் படம் நன்றாகத் தெரியும்.

நூதன துப்பாக்கி

போலீஸாருக்குக் குற்றவாளிகளைப் பிடிக்க உதவும்படியாக ஒரு புதுவிதமான துப்பாக்கி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் ஒரு புகைப்படம் பிடிக்கும் கமிராவும் இருப்பதால் துப்பாக்கி வெடிக்கும்பொழுது உடனே சுடப்பட்டவனைப்படமும் எடுத்து விடுகிறது. இது குற்றவாளிகளின் சாயலை அறிந்துகொள்ள மிகவும் நல்ல சாதனம்.

தேஜஸ்

இத்தாலிய ஆஸ்பத்திரி ஒன்றில் காசநோயால் பீடிக்கப்பட்ட ஒரு வியாதியஸ்தனின் மார்பில் தோன்றிய ஒளிக் கிரணங்களைப் பற்றி நன்றாக ஆராய்ந்து முடிவு கட்டிவிட்டார்கள். தேகத்திலிருக்கும் பரமாணுக்கள் மறுபடியும் அதிகமாக உற்பத்தியாகும் பொழுது இம்மாதிரி உண்டாகின்றது.

குர்விட்ஸ் (Gurwitsh) என்ற ரஷ்ய அறிஞர் பின் வருமாறு கூறுகிறார். உடலிலுள்ள பரமாணுக்களின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் கண்ணுக்குத் தெரியாத ஒரு ஒளி வருகிறதாம். அது பரமாணுக்கள் மாறிமாறிப் பிறக்கிறதால் வருகிறது. இதுதான் மனிதனுடைய தேஜஸ். மனிதன் உடலைச் சூழ்ந்து இம்மாதிரி ஒரு ஒளி பிரகாசிக்கிறது. ட்யூமர் வகையைச் சேர்ந்த வியாதிகளால் பீடிக்கப்படுகிறவர்களுக்கு இது அதிகமாக இருக்குமாம்.

இதை விஞ்ஞான சாஸ்திர முறைப்படி போதிய ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். சாதாரணக் கண்களுக்குப் புலப்படாவிட்டாலும் பிரகாசமான ஒளியை டைஸியாலின் என்ற திரவ பதார்த்தத்தின் வழியாகப் பார்த்துவிட்டு உடலை நோக்கினால் தெரியுமாம்.

அது தீப ஒளியைப்போல் எப்பொழுதும் அசைந்தாடிக்கொண்டு இருக்கும். தேக வலிமைக்கும் மனோ வலிமைக்கும் பொருத்தபடி அது அதிகமாகவோ குறைந்தோ இருக்கும்.

மீனாட்சி சங்கத்தின் ஆண்டு விழா

லெக்ஷ்மிபுரம் ஸ்ரீமீனாட்சி சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டு நான்காம் மாதக் கூட்டம் நாளது பவ-ஹு ஆடித் திங்கள் 30-ம் நாள் பிற்பகல் 3-30 மணிக்கு சொ. வி. தலைமை ஆசிரியர் திரு. சி. வேலாயுதம் அவர்கள் தலைமையில் இனிது நிறைவேறியது.

மனைவி :—நான் அழகாக இருக்கவில்லையா?

புருஷன் :—சந்தேகமா? அந்த மூக்குக் கொஞ்சம் சரியாக இருந்தால் உன்னைச் சினிமா ஆக்டராக் கொண்டு போய் விடுவார்களே!

பேனா வீரர்கள்

பத்திரிகையின் கௌரவம்

பொது ஜனங்கள் சந்தேகம்

பத்திரிகையாசிரியர்களுக்கு எத்தனையோ பிரச்னைகள் சிக்கலைத் தீர்க்கும்படி வந்துகொண்டே இருக்கின்றன. அவை எல்லாவற்றிலும் மிக முக்கியமானது பத்திரிகை யுலகத்தைப்பற்றியதே. உலகப் பொருளாதார நெருக்கடியினால் எத்தனையோ வெளியீடுகள் அழிக்கப்பட்டன. பணக் கஷ்டத்தினால் புத்தகம் வெளியிடும் கம்பெனிகள் கூட்டுறவு செய்து தங்களைக் காத்துக் கொள்ளவேண்டி யிருக்கிறது. அமெரிக்கா, இங்கிலாந்து, கானடா முதலிய பிரதேசங்களில் இம்மாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

தொழில் முறையைப் பொறுத்த கஷ்டங்களைவிட முக்கியமான, மூலாதாரமான, கஷ்ட சந்தர்ப்பங்கள் பத்திரிகை யுலகை எதிர்த்து நிற்கிறது. இத்தாலி, ஜெர்மனி, ஆஸ்திரியா, ரஷ்யா, மெக்ஸிகோ முதலிய நாடுகளில் பத்திரிகைகள் ஏதேச்சாதிகாரமான அரசாங்கங்களின் கீழ்ப்பட்டுக் கிடக்கின்றன. கொள்கைகள் மட்டுமல்ல, செய்திகளையும் அரசியலின் போக்கிற்கு ஒத்ததாக எழுதவேண்டும். அது அரசியலோடு சம்பந்தப்படாத வெறும் செய்தித் துண்டாக இருந்தாலும்கூட வெளியிட்டுவிட முடியாது. சில முக்கிய சமயங்களில் பொது ஜனங்களுக்கு மிகவும் அவசியமான செய்திகளை வெளியிடாமல் அப்படியே மறைத்துவிட வேண்டியிருக்கிறது. பிரான்ஸ், போலந்து, ஸ்பெயின் முதலிய தேசங்களில் பத்திரிகைகள் முக்கால் பாகம் அரசாங்க அதிகாரத்திற்கு உட்பட்டே இருக்கின்றன. அப்படி இல்லாவிட்டால் சமுதாய ஸ்தாபனங்கள் கையில் சிக்கிக்கொண்டு அவைகள் சொன்னபடி ஆடிக்கொண்டிருக்கின்றன. பத்திரிகை வாசிப்பவர்களுக்கு இதன் அந்தரங்க சூழ்ல்களைப்பற்றி எப்படித் தெரியும்.

அன்னிய நாட்டுச் செய்திகளை அமெரிக்காவில் பரப்பும் பத்திரிகை நிருபர்களுக்கு ஐரோப்பிய பத்திரிகைக்காரர்களைப்போல் தொந்திரவுகள் கிடையாது. இருந்தாலும் அதன் சக்தி இவர்களையும் சிறிதளவு பீடிக்கத்தான் செய்கிறது. அன்னிய நாட்டிலிருந்து செய்திகளை அனுப்பும் நிருபர்களுக்குச் சில சமயங்களில் செய்திகளைத் திட்டமாக அறியவே வசதி ஏற்படுவதில்லை. இத்துடன் சில மனச்சாட்சியற்ற நிருபர்கள் தங்கள் மனதிற்குத் தோன்றியவைகளையும் சேர்த்துப் பத்திரிகைக்கு அனுப்பித் தீங்கிழைக்கும் பிரசாரம் செய்து விடுகிறார்கள்.

இப்பொழுது பொது ஜனங்களிடையே பத்திரிகைகளுக்குமேல் இருந்த நம்பிக்கை குறைந்து வருகிறது. அமெரிக்காவில் இப்பொழுது எழும் சமூகப் பிரச்னைகளைப்பற்றி எழுதப்படும் பத்திரிகைகள் எல்லாம் பெரிய முதலாளிகளின் கையாள்களாக இருந்து வருகிறது என்று பொது ஜனங்கள் நினைக்க ஆரம்பித்து விட்டார்கள். இம்மாதிரிப் பத்திரிகைகள் தாங்கள் எதற்குப் பிரதிநிதியாக இருந்து எழுதுகிறார்கள் என்ற உண்மையைத் தைரியமாகக் கூறினால் பொது ஜனங்கள் அவைகளுக்குக்கௌரவம் கொடுக்கத்தான் செய்வார்கள். தலையங்கங்களில் கண்டனம் செய்யப்படும் விஷயங்கள் ஏன் நீண்ட விளம்பரங்களுடன் அதே பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டும் என்று பொது ஜனங்கள் ஆச்சரியப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

உதாரணமாக அமெரிக்கப் பத்திரிகையில், கத்தோலிக் மதத் தலைவர்கள் மற்ற மதத் தலைவர்களுடன் சேர்ந்து சலனப் படங்களைக் கண்டித்து ஒரு அறிக்கை விட்டிருந்தார்கள். அது சரிதான். இந்தச் சலனப்படங்கள் குடும்ப வாழ்க்கையை எவ்வளவு பாழாக்கி விடுகின்றன என்று பத்திரிகை ஆசிரியர்களுக்குத் தெரியும். பிறகு ஏன் அஸோஷியேட்டட் பத்திரிகைக்காரர்கள் நிர்வாண இயக்கத்தில் நடந்த திருமணத்தை விஸ்தாரமாகவும் ஹாஸ்யமாகவும் படங்களுடன் பிரசுரித்தார்கள். ஏன் கௌரவமுள்ள பத்திரிகைள் இந்த ஆபாசங்களைப் பிரசுரிக்கவேண்டும். ஒருவேளை படக்காட்சி முதலாளிகளின் வசம் பத்திரிகைகள் இருக்கிறதோ என்று சந்தேகிக்க இடமிருக்கிறது. கிரிஸ்தவ நாகரிகம் என்றும் தர்ம உணர்ச்சி என்றும் பேசிக்கொள்வதின் அர்த்தம் என்ன ?

இருந்தாலும், அமெரிக்காவில் தீமைகள் அவ்வளவாகப் பரவவில்லை. அமெரிக்கப் பத்திரிகைகளில் முக்கால் வாசி சரியாகத்தான் இருக்கின்றன. இவைகளும் பொதுஜன மதிப்பை இழக்காது வெகுநாள் தப்பமுடியாது. இப்படி ஒரேயடியாகப் பத்திரிகையின் கௌரவம் கவிழுமுன் இதற்கு எதிர்க்கிளர்ச்சி வரும் என்று எதிர்பார்க்கலாம். வாட்டிக்கனில் ரோமாபுரிப் பத்திரிகைக்காரர்கள் முன் கத்தோலிக் மதத்தலைவரான போப் பிரசங்கம் செய்தபொழுது புதிய விழிப்பை உண்டுபண்ணுவதற்காகப் பத்திரிகைகள் தொழிலாற்றி வருகின்றன என்று பாராட்டினார். முக்கால்வாசிப் பத்திரிகாசிரியர்கள் அதை மதப்பித்து என்று தள்ளிவிடலாம். ஆனால் தேசத்தில் உண்மையான மதப் பற்றுடையவர்கள் எத்தனையோ பெயர் இருக்கிறார்கள். அவர்கள் அப்படி நினைக்க வில்லை.

போப் பின் வருமாறு கூறினார். “உங்களுடைய தொழில் தர்மத்திற்கும் நியாயத்திற்கும் உலகத்தின் இலக்ஷியங்களுக்கும் அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது. உங்கள் வேலையால் உண்டாகக் கூடிய நன்மைகள் எவ்வளவு என்று கணக்கிட முடியாது……………உங்கள் உயர்ந்த இலக்ஷியங்களிலிருந்து தவறினால் உலகத்திற்கு ஏற்படும் தீமைகள் விஸ்தரிக்க முடியாது. எத்தனையோ கோடி ஜனங்கள் நசித்துவிடுவர். பத்திரிகைத் தொழிலின் மதத்தான பொறுப்பைப் பற்றி அலெக்சாண்டர் மன்ஜோனி என்பார் பின் வருமாறு சொன்னார். “புனிதமான உண்மை ஒரு நாளும் ஒருவரைத் துரோகம் செய்யாது. ஒருநாளும் தீமைக்குப் பரிந்து பேசி, தர்மத்தை நசுக்க முயலாது.”

போலி வைதிகம் ஒழிக!

சினிமாப் பகுதி

பேர்னார்ட் ஷாவின் நாடகம்

பெர்னார்ட்ஷா தமது 'ஸெயின் ஜோன்' என்ற நாடகத்தை இரண்டு சினிமாக் கம்பெனிகளுக்குப் படங்களாகத் தயாரிக்க உரிமை கொடுத்திருக்கிறார். ஒன்று பிரிட்டிஷ் கம்பெனி. இன்னொன்று ஐரிஷ் கம்பெனி.

மேலும் கம்பெனி முதலாளிகளுக்கும் படங்களுக்குத் தக்கவாறு நாடகத்தைக் குறைக்கவோ மாற்றவோ அனுமதியளித்திருக்கிறார். இதுவரை இவர் இம்மாதிரி அனுமதித்ததே இல்லை.

தமது நாடகங்கள் பொது ஜனங்களிடையே அதிகமாகப் பரவவேண்டும் என்ற நோக்கத்துடன் இவ்வாறு செய்திருப்பதாகத் தெரிகிறது.

மிக்கி என்ற கோமாளி எலிக்குப் போட்டி

குழந்தைகளை இன்புறுத்துவதற்காகத்தான் மிக்கி என்ற கோமாளி எலிப் படங்கள் தயாரிக்கப்பட்டன.

இப்பொழுது இதற்குப் போட்டியாக பிரான்ஸில் இரண்டு பிரஞ்சு பெண்களின் கதை இதே ரீதியில் தயாரிக்கப்படுகின்றது.

அவர்கள் தெரு வழியாக நடந்து வருவதும், அவர்களை ஸைக்கில் வண்டியில் ஒருவன் தொடர்ந்து வருவதும், அவர்கள் குளிக்கப் போவதும், எல்லாம், காமச் சுவையை ஊட்டக் கூடியனவாக இருக்கின்றன.

இவை மூன்று வருஷங்களாக மிகுந்த கஷ்டப்பட்டு தயாரிக்கப்பட்டன. இதற்கு 5000 பவுன்கள் செலவாகியிருக்கின்றன. இதற்காக 34000 தனிப்படங்கள் தயாரிக்க வேண்டியிருந்தது.

வேலையில்லாத் திண்டாட்டத்தினால் இந்தப்படங்களை இவர்கள் தயாரிக்க வேண்டியிருந்தது. ஆனால் இனி இத் தொழில் மிகுந்த லாபம் தரும் என்பதைக் கண்டு கொண்டார்கள்.

பேசும் படக்காட்சியில் ஆருடம்

இப்பொழுது பிரிட்டனில், சபையினின்று ஒருவர் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் பேசும் படங்கள் நூதனமாகத் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

இது 3000 அடி நீளமுள்ள ஒரு சிறு பிலிம். இதில் எந்தக் கேள்வியும் கேட்கலாம், பதிலளிக்கும்.

இது ஒரு வெறும் தந்திரந்தான். பேசும் நடிகனுடைய குரல் ஒரு தடவையும் மாறாது. ஆனால் ஒரே வரியை அவன் திருப்பி இரண்டு தடவை சொல்லுவதில்லை.

லண்டனில் இருக்கும் ஒரு ஸ்டுடியோவில் இது தயாரிக்கப்பட்டது. சினிமாப் படங்களைக் காண்பிக்கும்பொழுது அதன் துணையாகப் பக்கத்திலிருக்கும் யந்திர ஸாதனங்களைக் கொண்டு இதைச் செய்ய முடிகிறது.



சாரண சங்கத்தைச் சேர்ந்த திரு. என். வி. ராமநாத் என்பவர் உலகத்தைச் சுற்றிப் பிரயாணம் செய்து வருகிறார். திருவனந்தபுரத்தில் எடுத்த அவருடைய படம்.

—P.P.B.

கொலம்பஸின் ஜீவியம்

வெகு காலமாக ஆராய்ச்சி செய்த பின் பயனாக அமெரிக்காவைக் கண்டு பிடித்த கிரிஸ்தப்பர் கொலம்பஸ் என்பவருடைய ஜீவிய சரித்திரத்தைப் பேசும் படக்காட்சியாகத் தயாரிக்கப் போகிறார்கள்.

இதில் முக்கிய ஆராய்ச்சியாளரான ஜோஸப் ஸ்டில்ட்ராட் என்பவரே கொலம்பஸாக நடிப்பார்.

கார்போவின் ஜீவிய சரித்திரம்

சினிமா நடிகையான கிரெட்டா கார்போவின் ஜீவிய சரித்திரத்தை லியனார்டு கிளேர்மான்ட் என்பவர் படமாகத் தயாரித்து அதைக் காண்பிக்க முன் வந்திருக்கிறார்.

கார்போவிற்கு இது பிரியமில்லாததால் அதைத் தடுப்பதற்கு 2500 பவுன் கொடுப்பதாக வாக்களித்தாள். ஆனால் அதைக் காண்பிப்பதால் அதிக லாபம் வரும் என்று எதிர்பார்க்கிற கிளேர்மான்ட இதற்கு இசையவில்லை.

அந்தப் படத்தில் கார்போ அவள் இளவயதில் நாவித வேலைசெய்து வந்ததாகப் படத்தில் இருக்கிறது.

கீழ்த்தர காமச் சுவையை ஊட்டும் படங்களுக்கு எதிர்ப்பு.

மதத் தலைவர்கள், கீழ்த்தர காமச் சுவையை யூட்டும் படங்களைக் கண்டித்து அதற்கு எதிர்ப் பிரசாரம் செய்கிறார்கள். அத்துடன் பிரிட்டனும் கலந்து கொண்டது.

சிறு துண்டுப் பிரசுரங்கள் கோடிக் கணக்கில் இதைப் பார்க்கக் கூடாது என்று பிரசாரம் செய்ய வெளியிட்டிருக்கிறார்கள்.

எந்தப் படங்கள் பார்க்கக் கூடியவை எவை பார்க்கத் தகாதவை என்று ஒரு பட்டியல் தயாரிக்கிறார்கள்.

இதை ஒப்புக் கொண்டவர்கள் துண்டுப் பிரசுரத்தில் தங்கள் கையெழுத்திட்டுக் கத்தோலிக் பெட்ரேஷனுக்கு அனுப்பும்படி வேண்டிக் கொள்ளுகிறார்கள்.

தீண்டாமை ஒழிக!

தெருவிளக்கு

(சோ. வி.)

தெருக் கோடியிலே, அந்த மூலை திரும்பும் இடத்தில் ஒரு முனிசிபல் விளக்கு.

தனிமையாக, ஏகாங்கியாக தனது மங்கிய வெளிச்சத்தைப் பரப்பமுயன்று வாழ்ந்து வந்தது.

இளமை, மூப்பு, சாக்காடு என்பவை மனிதருக்கு மட்டும் உரிமையில்லை.

தெரு விளக்கிற்கு இப்பொழுது மூப்புப் பருவம்.

நிற்கும் கல் உடம்பு சற்று சாய்ந்து விட்டது. சிரத்தில் இருந்த கண்ணாடிச் சில் ஒரு பக்கம் உடைந்து விட்டது. அந்தச் சிறுவன் விளையாட்டாகக் கல்லை எறிந்தபொழுது விளக்கின் கஷ்டத்தை நினைத்தானா?

காற்று அடித்தால் உயிரை ஒரே யடியாகவாவது போக்கிவிடுகிறதா? குற்றுயிராய் துடிக்கத் துடிக்கவைத்து அதைக் கொல்லுகிறதே.

கொஞ்சமாவது மங்கிய வெளிச்சத்தைக் கொடுக்கிறதென்று இந்தக் காற்றிற்கு நன்றி இருக்கிறதா?

போய்விட்டது; பிறகு மழையில் அதன் குளிரை யார் கவனிக்கிறார்கள்?

அது காற்றிற்குத் தெரியுமா?

இனிமேல் விளக்கு அந்தப் பக்கத்திற்கு வேண்டாமாம்! அதை எடுத்து விட வேண்டுமாம்!

அதற்கு ஒரு தோழன்,—ஒரு கிழவன்.

ஒத்த வயதில்தானே நட்பு ஏற்படும். இதில் என்ன அதிசயம்.

விளக்கிற்குக் கிழவன்.

கிழவனுக்கு விளக்கு.

விளக்கை எடுத்துவிடப் போகிறார்கள் என்று கிழவனுக்குத் தெரியாது.

அவனுக்கு எப்படித் தெரியும்?

அவன் வயிற்றிற்குப் பிச்சை எடுக்க வேண்டாமா?

வயிற்றிற் கில்லாமல் உயிர்வாழ முடியுமா?

தெரு விளக்குத் தோழன்தான். அதன் வெளிச்சம் அவனுக்கு எவ்வளவு மன நிம்மதியை அளித்தது.

அன்று சாயங்காலம் வந்தான்.

வெறும் குழி ஒன்றுதான் இருந்தது.

இருள்! இருள்!!

பற்றுக்கோலை யாரோ தட்டிப் பிடுங்கிக் கொண்ட குருடனின் நிலை.

அன்று அவனுக்கு உலகம் சூன்யமாய்ப் பாழ் வெளியாய் அர்த்தமற்றதாய் இருந்தது.

சாந்தி?

அது எங்கிருந்து வரும்!

உடைந்த தெரு விளக்குத் தான்? கொஞ்சமாவது அவனைத் தேற்றியதே!

வெளிச்ச மில்லாவிட்டாலும் ஸ்பரிசித்துப் பார்த்து ஆறுதலடைய வெறுங் கல்லாவது இருந்ததே?

மறுநாள் காலை, அந்தக் கிழவனின் சவம் அங்கு கிடந்ததைக் கண்டார்கள்.

* * *

இப்பொழுது ஒரு புது விளக்கு. மின்சார விளக்கு.

அதன் கீழ் குழந்தைகள் உத்ஸாகமாக விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்குப் பழைய விளக்கையும் பழைய கிழவனையும் பற்றிக் கவலை என்ன?

ஒரு காலத்தில் இவர்களும் அப்படித்தான்.

அதற்கென்ன?

எங்கும் அப்படித்தான்.

பழையன கழியும், புதியன வரும்.

இது உலக இயற்கையாம்!

பொக்கிஷ மந்திரி:—இவ்வருடத்தில் பணமுடை ஏற்படாது.

பார்லிமெண்டு அங்கத்தினர்:—யாருக்கு?

* * *

வாலிபன்:—மிதவாதிகள் என்றால் யார்?

அரசியல் வாதி:—அதிகமாகப் பட்டங்கள், பதவிகள் முதலியவற்றைப் பெற்று மகிழ்பவர்கள்.

வாலிபன்:—அதில் ஏன் மிதமாக இருக்கக்கூடாது?

அரசியல் வாதி:—அதுதான் அவர்களிடம் காணப்படும் ஒரே குறை.

இந்தியாவிற்கு பிரதிநிதித்துவ சபை

(திரு. அஸப் அலி எழுதுகிறார்)

(ஸர். ஹாரி ஹெய்க்கிற்கும் ஹிந்துஸ்தான் பத்திரிகையில் எழுதிய "நியோ–ஸோஷியலிஸ்டிற்கும் பதில்.)

I

இந்தியாவிற்கு ஒரு பிரதிநிதித்வ சபை வேண்டும் என்ற காங்கிரஸ் காரியக் கமிட்டியின் திட்டத்திற்குச் சரியான பதில், அல்லது அதைப்பற்றி சரியான அபிப்பிராயம் இன்னும் வரவில்லை. இரண்டு பகுதிகளிலிருந்து அதைப் பற்றிய ஆராய்ச்சி வரலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. அம்மாதிரியே ஸர். ஹாரிஹெய்க்கும், 'ஹிந்துஸ்தான்' பத்திரிகையில் எழுதும் "நியோ ஸோஷியலிஸ்டும்" முன் வந்திருக்கிறார்கள்.

இந்தியப் பிரதிநிதித்வ சபை என்றால் கையில் பிடிக்க முடியாத வெறுங் கனவு என்று ஸர். ஹாரிஹெய்க் ஒரு விருந்திற்குப் பிறகு பேசும்பொழுது வெகு குத்தலாகப் பேசியிருக்கிறார். தங்கள் கதைகளில் சிக்கிக்கொண்டு வழிதெரியாமல்தவிக்கும்பொழுது கிரேக்கநாடகாசிரியர்கள் தெய்வங்களையும் மேடைக்கு இழுத்துவிடுகிறதை நினைவிற்குக்கொண்டு வருகிறதாம். தங்களுக்குச் சொந்தமாக ஒரு கொள்கையும் இல்லாதவர்களுக்கும், அமானுஷ்ய சக்தியில் இது ஒரு நல்ல மாதிரியான வழியாம். பிரிட்டிஷ்காரர்கள் எப்படியும் ஏமாற்றப் பார்ப்பார்கள், தனக்கு வேண்டியதைத்தானே செய்துகொள்ள அனுமதிக்க மாட்டார்கள் என்ற வார்த்தைகள் வந்தபொழுதே இம்மாதிரியாகக் குறித்த விஷயத்திற்கு வேண்டாத கிளைப் பிரச்னைகள் எழும் என்று எதிர் பார்த்ததுதான். ஸர். ஹாரி தமக்குப் பின்பாட்டுப் பாடும் குலாம் கோஷ்டியின்முன் பிரதிநிதித்துவ சபை என்ற ஒன்றுமற்ற கனவு என்று பேசிக்கொண்டிருக்கலாம். அதற்கு அவரும் மரியாதை கொடுக்கும் ஒருவரே பதில் சொல்லட்டும்.

மாண்ட் போர்ட் திட்டத்திற்குக் காரணகர்த்தாக இருந்த காலஞ்சென்ற திரு. எட்வின் மாண்டேகு, அவர்கள். ஸர். ஹாரிஹமண்ட்டுடைய புத்தகத்திற்கு (Indian Candidate and Returning Officer) எழுதிய முன்னுரையில் பின் வருமாறு எழுதுகிறார். "இந்தியாவிலிருக்கும் இந்தியர்கள் தங்களுக்கேற்ற, எப்பொழுதும் இருக்கக் கூடிய, அரசியல் ஸ்தாபனத்தை எம்மாதிரி சிருஷ்டிப்பார்கள் என்று அனுமானிப்பது தர்க்க முறைக்குப் பொருந்தியதல்ல. அது அவர்களுடைய குணவிசேஷங்களுக்கு ஒத்ததாகவும் அவர்கள் அறிவின் போக்கிற்குத் தகுந்ததாகவும் இருக்கும்." இந்தியப் பிரதிநிதித்துவ சபையைப் பற்றிய முக்கிய தத்துவமாகச் சொல்ல வேண்டியது இதுதான். ஸர்ஹாரி என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டு இருக்கட்டும். பிரிட்டனின் இரும்புத்திட்ட அரசியல் மனபான்மையில்லாத ஒரு பெரியார் ஒருவர் இந்த அரசியல் சிக்கலைத் தீர்க்க, இந்தியர்களின் வேண்டுகோள், அர்த்தமாகக் கூடாத அரசியல் திட்டம் என்று எண்ணவில்லை.

சர்வதேச சங்கத்தின் ஒப்பந்தத்தை இன்னும் ஒரு முறை கவனிப்போம். முதலில் கை எழுத்திட்டவைகளுள் இந்தியாவைப் போல்தான், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் கையெழுத்திட்டது. ஒப்பந்தத்தின் முதல் பகுதி பின் வருமாறு ஆரம்பிக்கிறது. "சங்கத்தின் முதல் மெம்பர்கள் என்றால், பின்வரும் அட்டவணையில் கையெழுத் திட்டவர்கள்" இந்தியா அந்த அட்டவணையில் பத்தாவதாக வருகிறது. இன்னும் அதே பகுதியில், "இந்த அட்டவணையின் வராத சுயஆட்சியுள்ள எந்தக்குடியேற்ற நாடும் இந்தச் சங்கத்தில் அங்கத்தினராகலாம்" என்று வருகிறது. இதிலிருந்தே முதலாகக் கையெழுத்திட்ட அங்கத்தினர்கள் எல்லாம் பூரணமாக சுய ஆட்சிபெற்றவை என்று ஆகிறதல்லவா?

சட்ட பூர்வமாகவும், அரசியல் ஸ்தாபன தோரணையின் வழியாகவும் கவனித்தால், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சார்பாகக் கை எழுத்திட்டிருப்பதிலிருந்து, இந்தியா சுய ஆட்சி பெற்ற நாடா என்ற பிரச்னையைக் கிளப்ப இங்கிலாந்திற்கு உரிமையே கிடையாது என்று விளங்கும். பொது ஜன அதிகாரத்தைப் பிடுங்கிக் கொள்ள முயலும் சிலருக்கு இடமில்லாத அரசியல் ஸ்தாபனம், பிரதிநிதித்வசபை பிறக்கும் பொழுதுதான் பிறக்கும்.

இதற்குமாறான இன்னொருவித மனப்பான்மையை விளக்கும் "நீயோ சோஷியலிஸ்ட்" என்பவர் சமதர்மக் கொள்கைகளை நன்றாக ஆராய்ந்து அறியாதவர் போல் தெரிகிறது. பிரதிநிதித்வசபை என்ற காங்கிரஸ் காரியக் கமிட்டியின் திட்டம் இவருக்குப் பிடிக்கவில்லை. ஏனென்றால் பிரிட்டிஷ ஏகாதிபத்தியத்துடன் நமது இலக்ஷியத்தை விட்டுக் கொடுத்தது விட்ட மாதிரி நினைக்கிறார். இதுதான் இவரது ஆராய்ச்சியின் முதலும் முடிவும். நினைத்தபடி எல்லாம் எண்ணும் புதிது புதிதான கொள்கைகளைக் காணும் கூட்டங்கள் பிறக்கும் இந்தக் காலத்தில், சமூக அரசியல் தத்துவக்காரர்களைப் பற்றி முழுவதும் பாகு படுத்திக் கூற இயலாததாகிறது இதனால் நமது நியோஸோஷியலிஸ்ட் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்லமுடியவில்லை.

ஆமாஸ், ஹோஸையா, தாமஸ் மூர் டால்ஸ்டாய், புரூதாம் ஏன் மகாத்மா காந்தி, இவர்கள் எல்லாரும் வெறுங் கனவு லோகத்தைச் சேர்ந்த பொதுவுடைமைக் கட்சியை ஆதரிப்பவர்கள். தற்கால ஸயன்ஸின் முறைப்படி இருக்கும் பொதுவுடைமைக் கட்சியை ஆதரிக்கும் சிலரும் இருக்கிறார்கள். அவர்கள் ஆதிக்கந்தான் இப்பொழுது செல்லுகிறது. புதியபொதுவுடைமை என்றகொள்கையின் தத்துவங்கள் எப்படிப்பட்டதோ! இந்தக் கட்சிக்காரர்கள் புரட்சியினால் அடைய எதிர்பார்க்கும், சுதந்திர அரசியல் ஸ்தாபனம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு விட்டுக் கொடுத்த ஒப்பந்தமாகத் தோன்றுகிறது. ஏன்? புரட்சி வழியைக் கைக் கொள்ளாததினாலோ? ஸோவியத் பொதுவுடைமையரசியல் சர்வதேச சங்கத்தில் சேர்ந்த பொழுது வடிகட்டிய ஏகாதிபத்தியக்காரர்களுடன் தான் கைகுலுக்கியது. அதற்கென்ன சொல்லுவாரோ? கண்டபடி எந்தக் கொள்கைகளையும் தீர ஆலோசியாமல் ஆதரிப்பது அன்னிய ஆட்சியில் இருப்பவர்களுடைய குணவிசேஷங்களில் ஒன்றோ என்னவோ?

ஏகாதிபத்தியத்திற்கு விட்டுக் கொடுத்து நமது இலக்ஷியத்தை அடைய

முடியுமானால் உடனே நாம் அந்த வழியைக் கடைப்பிடிப்போம். அன்னிய ஆட்சியிலிருக்கும் ஒரு தேசத்தில் வெறும் வார்த்தைகளில் மனதைச் செலுத்தி உழலுவதற்கு எல்லை இல்லை. ஏமாற்றுவதற்காக விட்டுக் கொடுக்கப் பட்டது! இதுதான் கூச்சல் நமது இலக்ஷியம் கைகூடுமானால் யாருடனும் தாராளமனத்துடன் விட்டுக் கொடுத்து ஒப்பந்தம் செய்யலாம். ஏகாதிபத்தியத்துடன் ஆனால் என்ன? முதலாளித்துவத்துடனாகில் என்ன? இதே மாதிரிதான் கூட்டுறவு என்ற வார்த்தையும். இந்தியா தனது அரசியல் ஸ்தாபனத்தைச் சமைக்க ஒரு பிரதிநிதித்வசபை கூட்டுவதற்கு ஒத்துக் கொண்டால், புரட்சிக்காரனோ, அல்லது வேறு எந்தக் கட்சியானோ, "இதை ஒத்துக்கொள்ள மாட்டோம். புரட்சியை உண்டுபண்ணித்தான் அரசியல் அதிகாரத்தைச் சமைப்போம்" என்று சொல்லலாமோ? இது வெறும் பைத்தியக்காரத்தனம்.

இந்தியா, முக்கியமான இடங்களில் அன்னியப் படைகளை நிறுத்தி வைக்கப் பட்ட, அன்னிய ஆட்சியில் அடங்கியிருக்கிறது. இதற்கு உதவியாக இந்தியப் படைகளும் இருக்கின்றன. இந்தியப் படைகள் ராஜபக்தி மிகுந்த வகுப்புக்களில் இருந்து திரட்டப்படுகின்றன. இப்படி இருந்தும் இந்தியப் படைகள் கலகம் செய்து இருக்கின்றன. இம்மாதிரி அவர்களும் புட்சிக்காரர்களுடன் சேர்ந்து கொள்வார்கள் என்று வைத்துக் கொண்டாலும் ஐயம் கிடைக்கும் என்று திட்டமாகக் கூற முடியாது.

இந்தமாதிரி நிலைமை ஏற்படுவதற்கு முன், நம்முள் இருக்கும் பல வகுப்புக்களுக் கிடையில் இருக்கும் வேற்றுமைகள் போகவேண்டும். மாகாணத்தின் பிரிவுகளால் உண்டாகும் மன வேற்றுமை ஒழிய வேண்டும். இதற்கு மேல் முக்கியமான வகுப்பு வாதப் பிணக்குகள் எல்லாம் தொலைய வேண்டும். அந்தப் பிரச்னை இன்னும் முடிந்தபாடில்லை.

நமது ஜனத் தொகையில் முக்கியப் பகுதியான விவசாயிகள் இருக்கிறார்கள். இத்தனை காலம் அரசியல் விஷயங்களில் சிரத்தை கொள்ளாத அவர்களைத் திடீரென்று தட்டி எழுப்பிவிட முடியாது.

தொழிலாளிகளின் தொகை மிகவும் சொற்பம். அவர்களும் சில சில நகரங்களில்தான் இருக்கிறார்கள். அவர்களினால் இந்தப் பெரிய தேசத்தில் புரட்சியை எழுப்பிவிட முடியாது.

பொதுவுடைமை ஸ்தாபனமாக ஒரு சமுகம் இருக்க வேண்டுமென்று இக்காலத்து வாலிபர்கள் எண்ணுகிறார்கள். இந்தக் கொள்கை படித்த வகுப்புக்களிலிருந்து கோடிக் கணக்கான பொது ஜனங்களிடையே பரவ வெகு நாட்களாகும்.

போலீஸ்காரர்களின் மனப்பான்மை தான் படை வீரர்களுக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. உள்நாட்டுப் புரட்சிகளில் காலத்துக்கு ஏற்றவாறுதான் நடந்து கொள்ளுவார்கள். இவைதான் இரத்தம் சிந்தும் புரட்சிக்கு எதிரில் தடையாக நிற்பது.

மேல் நாடுகளில் முக்கியமாக ரஷ்யாவில் நடந்த புரட்சிகளின் அற்புத சரித்திரத்தைப் படித்தவர்கள் உடனே அதில் இந்தியாவிற்கு இச்சமயத்தில் பொருந்தாத ஒற்றுமைகளைக் காணுகிறார்கள்.

ரஷ்யா ஒரு காலத்திலும் அன்னிய ஆட்சிக்கு உட்பட்டிருக்கவில்லை. அதனுடைய படை அன்னிய நாட்டுப் படை அல்ல. அவர்கள் சமூகத்திலிருந்தே திரட்டப்பட்டவை.

ரஷ்யா ஒரு நூற்றாண்டாக இந்தப் புரட்சியை ஆரம்பித்து நடத்தியது. சமூகப் புரட்சி ஒரு அரை நூற்றாண்டாகவாவது நடந்திருக்கும். அதனுடைய முதல் பகுதி 1905-த்தில் ரஷ்யா—ஜப்பானிய யுத்தத்தினால் முடிவடைந்தது.

1917 பிப்ரவரி மாதம் நடந்த புரட்சிக்கு காரணங்கள் ருஷ்யப் படை போர் முனையில் அனியாயமாக இறந்து பட்டதும், அரசியல் ஸ்தாபனத்தின் நசுக்கும் மனப்பான்மையும். இதனால் படை வீரனை புரட்சிக்காரனுக்கி விட்டது. தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்த ஐந்தாவது நாள் படை வீரர்கள் புரட்சி செய்தார்கள்.

அப்பொழுது இருந்த சமய சந்தர்ப்பங்கள் சாதாரணமானதல்ல. (1) அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்படுத்திய அன்னியநாட்டுடன் யுத்தம். (2) "ஜார் அரசனின் இந்த யுத்தம் பிரயோஜனமற்றது" என்றபொதுஜன அபிப்பிராயம். (3) தொழிலாளிகளுடன் படைவீரர்களும் சேர்ந்துபுரட்சி செய்தது. இவையாவும் சேர்ந்துகொண்டன, புரட்சியை உண்டு பண்ண.

ஐரோப்பிய அரசியல்களில் உலக மகா யுத்தம் என்ற இந்தக் குழப்பம் ஏற்படாதிருந்தால், பிப்ரவரி புரட்சி வெற்றியடைந்திருக்குமோ என்பது சந்தேகம்.

விரிக்கிற் பெருகும். அவசர அவசரமாக அபிப்பிராயங்களைச் சொல்லுபவர்களுக்காகத்தான் எழுத வேண்டிருந்தது. பதின்மூன்று வருஷங்களுக்கு முன் திரு. எம். என். ராய் என்பர் "நிலைமைமாறிவரும் இந்தியா" என்ற புஸ்தகத்தில், இதேமாதிரி சில முக்கியமான காரணங்களை மறந்து எழுதுவதைக் கவனித்தேன். மேலும் வேறு அரசியலின் சில சில அம்சங்களை அனவசியமாக அழுத்தி யிருப்பதையும் கவனித்தேன்.

காங்கிரஸ், மகாத்மாவின் சத்தியாக்கிரகக் கொள்கையைக் கண்ணை மூடிக்கொண்டு கையாளுகிறது என்றுஎண்ணுவதைப்போல் தவறுவேறில்லை. மகாத்மா அடிக்கடி சத்தியாக்கிரக வழியைப்பற்றிச்சொல்லுவதும் காங்கிரஸ் அதை ஒப்புக்கொள்வதும், சரியான அரசியல் முறைக்கு ஒத்ததல்ல என்று எண்ணுவதைப்போல் பிசகும் வேறு இல்லை. அது தீர்க்க ஆலோசித்து ஒப்புக் கொண்ட வழி.

காங்கிரஸ் காரியக்கமிட்டி பிரிட்டிஷ் அபிப்பிராயத்திற்கிணங்கி ஒரு பிரதிநிதித்வசபை வேண்டும் என்று சொல்வதும் இந்தக்கொள்கையின் பயனே. இது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு விட்டுக்கொடுத்த ஒப்பந்தம் அல்ல. இந்த வேண்டுகோள் இந்தியாவின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் கிளம்ப வேண்டும்.

II

ரஷ்யாவில் ஒரு நூற்றாண்டாக இந்தப் புரட்சிப் பிரச்னையைத் தத்துவமாக அறிந்திருந்தார்கள். உலக மகாயுத்தம் வந்தபொழுதுதான் அதை நடைமுறையில் செய்துபார்க்க அவகாசம் கிடைத்தது. அந்தச் சமயத்தில்தான் அமெரிக்க பிரஸிடன்ட் வில்ஸன் அவர்கள் உலக சாந்திக்கும், தர்ம உணர்ச்

சிக்கும் பொருந்த ஒரு ஸ்தாபனத்தைச் சிருஷ்டிக்க முன்வந்தார்.

லெனினுக்கும் தலைவர் வில்ஸனுக்கும் உள்ள வித்தியாஸம் வெகு அகண்டமானது. லெனின் அரசியல் தத்துவத்தின் மூலத்தைத் தனக்கு ஆதாரமாக எடுத்து ஆண்டார். வில்ஸன் முதலாளித்வம்போன்ற சக்திபடைத்த பல வகையான சமூக அம்சங்களுக்கும் தமது இலக்ஷியத்தில் இடமளித்தார். லெனின் ஒரு பெரிய உலக அரசியலைச் சிருஷ்டிக்க முற்பட்டார்; வில்ஸன் உலகத்தின் பல்வேறு அரசியல் ஸ்தாபனங்களின் அன்பையும் ஒற்றுமை மனப்பான்மையையும் உண்டுசெய்து, அந்த உலக சகோதரத்வத்தின் அமைப்பில் இருக்கும் ஒவ்வொரு தனித்தேசத்திற்கும் தனது போக்கைத் தழுவி வளரவும் மற்ற அங்கத்தினரிடம் உண்மை அன்பு நிலவவும் முற்பட்டு உழைத்தார். இதற்கு தற்கால நாகரிக வளர்ச்சியினுல் ஏற்பட்ட போக்குவரவு சாதனங்களின் வசதியும் ஓரளவு உதவிசெய்தன.

எண்ணங்களும் அதிவேகமாகப் பரவுகின்றன. இப்பொழுது, முதலாளித்வம் போன்ற தனிக்கூட்டங்களுக்கு முன்போல் ஏகபோகமான நெடுங்காலம் வாழ்வு இல்லை என்று தெரிகிறது.

ஆற்று வெள்ளத்தை மதகுகட்டி நிறுத்தி விடலாம். எண்ணங்கள் பரவுவதை ஒரு நாளும் தடுக்க முடியாது. கொஞ்ச காலம் வேண்டுமானல் ஏதேச்சாதிகாரத்தினலும், அரசியல் சக்தியின் பயமுறுத்தலினலும் தடுத்து வைக்க முடியும். இன்னெரு உலக மகாயுத்தம் (இப்பொழுது உலகம் இருக்கும் நிலையில் அது வருவது அதிசயமில்லை) நாம் நினைக்கும் இலக்ஷியத்தைக் கொண்டுவரா விட்டாலும் அதைக்கொண்டு வருவதற்குப் போதுமான சக்தி நம்மிடம் இருக்கிறது என்பதைக் காண்பிக்கும்.

முன்பெல்லாம் பொருளாதார வளர்ச்சியைக் காப்பாற்றப் படைகளும் அதன் யுத்தங்களும் வேண்டியிருந்தது. ஆனல் இப்பொழுதோ, பொருளாதார யுத்தமே முறையாக இருக்கிறது. யாருக்கு அதிக உற்பத்தி செய்ய சக்தியும் அதை விற்க வசதியும் இருக்கிறதோ அவர்கள் தான் சக்திவாய்ந்தவர்கள். இப்பொழுதும் படை இருக்கிறது. அவற்றின் ஸ்தானம் யுத்த விஷயங்களில் இரண்டாவது தான். அவர்களை ஆட்டி வைக்கும் சக்தி அதற்கு மேலாக ஒன்று இருக்கிறது. ஆனல் படைகளும் கலகம் செய்து, அந்த அதிகாரத்தைப் பிடுங்கிக் கொள்ளலாம். அப்படி அவர்கள் செய்தாலும் அவர்கள் சமுதாய அமைப்பை எவ்வளவு தூரம் மாற்ற முடியும் என்பதற்குச் சரித்திரத்தில் போதிய சான்றுகள் இருக்கின்றன. முதலாளித்வத்திற்கு அடங்கிய தொழிலாளர் கூட்டத்திற்கு—ஏன் அவர்களை படை என்றே சொல்லலாம்—தங்கள் எஜமானர்களை ஆட்டிவைக்கும் சக்தி இருக்கிறது. ஆனல் அவர்களும் இந்தமாதிரி தொழில் அமைப்பையே வேண்டுகிருர்கள். இப்பொழுது இருக்கும் முதலாளிகளைத் தள்ளிவிட்டுத் தாங்கள் அந்த ஸ்தானத்தை வகிக்க வேண்டும் என்ற ஆசையே தவிர வேறு இல்லை.

புரட்சிகள் இந்தமாதிரி மாறுதல்களை உண்டுபண்ணுவதில் வெற்றி பெறலாம். மனித இலக்ஷியத்திற்கு வெற்றிவர இன்னும் எத்தனையோ புரட்சிகள் வர வேண்டும். ஆதர்சமும் ஆசையும் அவர்களுக்கு ஓரளவு வெற்றி கொடுக்கலாம். ஆனல் ஆசை பூர்த்தியாகாது.

படையின் உதவி யில்லாமல் வெற்றி பெற்றபுரட்சி சரித்திரத்தில் கிடையாது. அந்தவிதமாகச் சச்சரவின்றி நடந்த புரட்சிகளுக்கும் படை எதிர்மறையாக உதவிசெய்து இருக்கிறது. அம்மாதிரி பரிணம வளர்ச்சியினுல்தான் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இதுதான் புரட்சியினுலும் ஏற்படக்கூடிய அரசியல் மாறுதலுக்கும் அரசியல் ஸ்தாபன வழிகளினுல் ஏற்படும் மாறுதல்களுக்கும் உள்ள வித்தியாசம். ஆஸ்திரேலியாவிலும் ஆப்பிரிக்காவிலும் பிரதிநிதித்துவ சபை மூலமாகத்தான் காரியம் வெற்றிபெற்றது. அதை எல்லாம் யோசிக்கு மிடத்து இந்தியாவிற்கும் இந்த வழிதான் ஏற்றமுறை, அதனுல்தான் நன்மை பயக்கும் என்று கொள்ளலாம்.

யார் என்ன சொல்லிக்கொண்டு இருந்தாலும், பிரதிநிதித்துவ சபைதான் தர்க்க முறைக்கும் அறிவுக்கும் பொருந்தியது என்பதை யாரும் மறுக்க முடியாது.

அலோர் ஸ்டார்

திருவாளர் க.வி. அழ. ராம. அழகப்ப செட்டியாரவர்கள் 5—8—34 காலை 8-30 மணிக்கு கிட்டா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கத்திற்கு விஜயம் செய்தார்கள். அவ்வமயம் கிட்டா டைரக்டர் ஆவ் லாண்ட்ஸ் அலாடினும் இன்னும் பல உள்ளூர் வெளியூர் நண்பர்களும் விஜயம் செய்திருந்தனர். சங்கத் தலைவர் திரு. க. அழ. ராம. சுப்பிரமணியம் செட்டியாரவர்களால் மாலை யணிவிக்கப்பெற்றது.

திருவாளர் அழகப்ப செட்டியாரவர்கள் மலாய் நாட்டிற்கு விஜயம் செய்தது, செட்டியார் சமூகத்திற்கே ஒரு பெருமையென்றும், ஆரம்பத்தில் மலாய் நாட்டிற்கு விஜயம் செய்யும் பொழுது நமது அலோஸ்டார் விமானத்திடலில் வரவேற்றது போலவே, அன்னவர் மறுபடியும் தாய்நாட்டிற்குப் புறப்படும் சமயம் நாம் அவர்களுக்கு வழி அனுப்பும் உபசாரம் சொல்லியனுப்புவது, நமக்கு மிகச் சந்தோஷமா யிருக்கிறதென்றும், கடவுள் கிருபையால் சுகமாய்த் தாய்நாடு போய்ச் சேரவேண்டுமென்றும், அங்கு சமயம் கிடைக்கும் பொழுது அங்குள்ள பிரபலஸ்தர்களைக் கண்டு பேசி, மலாய் நாட்டில் செட்டியார்கள் பாங்கு ஏற்படுத்த வேண்டிய விஷயமாகக் கவனம் செலுத்தி அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும், மலாயிலும் தமிழிலும், திரு. ஆரு. பழ. சி. பழ. முத்துக்கருப்பன் செட்டியாரவர்களால் கூறப்பெற்றது.

திருவாளர் அழகப்ப செட்டியாரவர்களும், பாங்கு விஷயமாகத்தன்னல் கூடியவரை இந்தியாவில் முயற்சி செய்வதாயும், தனக்கும் அதில் அவா இருப்பதாயும், மறுமுறை இம்மலாய் நாட்டிற்குச் சீக்கிரம் வரவிரும்புவதாயும், மலாய்நாட்டுப் பிரயாணத்தில் தான் மிகவும் திருப்தியடைந்ததாயும் மொழிந்தார்கள்.

9-10 மணிக்குச் சங்கத்திலிருந்து ஆகாய விமானத்திடலுக்கு, அன்னவர்களுடன் எல்லா நண்பர்களும் சென்று விமானத்திடலிலும் நமது சங்கத்தின் சார்பாக, திரு. சா. லெ. நா. கண்ணப்ப செட்டியாரவர்களால் மாலை யணிவிக்கப்பெற்று 10-45 மணிக்கு இம்பீரியல் ஏர் வெயிலில் பிரயாணமானர்கள் என்று நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்க காரியதரிசி அறிவிக்கிருர்.

திரு. கே. பாஷ்யம் பிரசங்கம்

சென்னை ஜில்லா அரசியல் மகாநாட்டின் வரவேற்புக்கழகத் தலைமைப் பிரசங்கத்தின் சுருக்கம்:

சுமார் 4-½ வருடங்களுக்குப் பிறகு உலகிலேயே பெரிய ராஜ்யமாகிய பிரிட்டிஷ் சர்க்காருடன் விமரிசையாகப் போராட்டம் நடத்திய பின்னர் மீண்டும் இப்பொழுது இம்மகாநாடு கூடியுள்ளது. இப்பெரிய போராட்டத்தில் ஆயிரக்கணக்கான வீரர்கள் முன் வந்து தியாகம் செய்தது போற்றத் தக்கதாகும்.

இப்போராட்டத்தில் நாம் அடைந்த பயன்யாதென்று சிலர் நம்மைக் கேட்கின்றனர். காங்கிரஸ் தோல்வியுற்றதாக வீண் விதண்டாவாதம் பேசித் திரிகின்றனர். ஆனால் இப்பெரிய சாத்வீகப் போராட்டத்தில் நாம் அடைந்த வெற்றியை அவர்கள் மறந்துவிட்டார்கள்போலும். பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதியாகிய லார்டு இர்வின்—காந்திஜிக்குச் சமதையாக நின்று ஒப்பந்தம் செய்யவில்லையா? நமது நாட்டில் ஏற்பட்டுள்ள கிளர்ச்சியின் அளவு சாமானியமா? என் ஆயுட் காலத்திலேயே சுயராஜ்யம் பெறக்கூடும் என்கிற உறுதி என்மனத்தில் இருந்து வருகிறது.

வகுப்புத்தீர்ப்புச் சம்பந்தமாகப் பிரிட்டிஷ் பிரதம மந்திரியின் முடிவை மாற்றும்படி காந்தியடிகள் ஏற்றுக்கொண்ட விரதத்தை நாம் மறக்க முடியாது. நமக்குச் சுயராஜ்யம் எவ்வளவு முக்கியமோ அதே மாதிரி வகுப்பு ஒற்றுமையும் முக்கியமானதுதான். தாழ்த்தப்பட்டோர் சார்பாக, காந்திஜி சமீபத்தில் ஏற்றுக் கொண்ட வேலையை நாம் எவ்வாறு மறக்கமுடியும்?

இதற்கிடையில் சட்ட மறுப்பை நிறுத்தி, சட்டசபைப் பிரவேசத்தை நடத்த வேண்டுமென்று சில பிரபல காங்கிரஸ் தலைவர்கள் அபிப்பிராயப்பட்டதைக் காந்தியடிகள் ஒப்புக்கொண்டார். காங்கிரஸ் இத்திட்டத்தை ஒப்புக் கொண்டுளது. ஆனால் இப்பொழுது காங்கிரசிற்குள்ளேயே அபேதவாதக் கட்சி ஒன்று தோன்றிப் பொருளாதார நிலைமையில் சில மாறுதல் ஏற்படுத்த முயலுகிறது. இக்கட்சியை நான் வரவேற்கிறேனாயினும் இச்சமயம் காங்கிரஸ் வேலையில் பிளவு செய்யாது காங்கிரஸ் திட்டத்தைத் தீவிரமாக நடத்துமாறு அவர்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

இத்தருணத்தில் நம் சிறந்த தலைவர்களில் முதன்மையானவர்களாகிய பண்டிய மாளவியாவும், திரு. ஆனேயும், மனவேறு பாட்டால் காங்கிரஸ் கட்டுப்பாட்டுக்கு விரோதமாக, காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டிலிருந்து விலகிப் புதிய அரசியல் கட்சியை ஏற்படுத்த முயலுவது வருந்தத் தக்கதாகும். அவர்களை கூடிய சீக்கிரம் தங்கள் வேற்றுமைகளை ஒழித்து மீண்டும் காங்கிரஸ் வேலையைச் சிறப்பாக நடத்தும்படி தாழ்மையுடன் வேண்டிக்கொள்ளுகிறேன். இப்பொழுது சர்க்கார் செய்துவந்த அதிக்கிரமச் செயல்களையும், தடியடியையும், ஜனங்கள் ஆதரிக்கின்றார்களா அல்லது சுயராஜ்யத்திற்காகக் காங்கிரஸ் செய்துவந்த வேலையைப் பொதுஜனங்கள் ஆதரிக்கின்றார்களா என்பது தான் முக்கியப் பிரச்னையாகும். இந்த வேலையில் நமக்கு இம் மாகாணத்தில் ஜஸ்டிஸ் கட்சிதான் முக்கிய எதிரியாகும். இப்பிற்போக்காளர்களால் நம் நாடு அடைந்த கஷ்டங்களும், நஷ்டங்களும் அளவிடப்படா. ஒட்டாவா ஒப்பந்தத்தை ஆதரித்த சர் சண்முகம் செட்டியாரும் காங்கிரசுக்குப் போட்டியாக சட்டசபைக்கு நிற்கப்போகிறார். இந்தச் சமயத்தில் வாலிபர்கள் காங்கிரஸின் தூய்மையான கொள்கைகளை வாக்காளர்களிடைப் பரப்பி அவர்களது அறியாமையை ஒழிப்பார்களேயானால் பொது மக்கள் பிற்போக்காளர்களை ஒருக்காலும் ஆதரிக்க மாட்டார்களென்பது திண்ணம்.

சட்ட சபைகளுக்குச் செல்லக்கூடிய பிரதிநிதிகள் ஒரு சிலரேயாவார்கள். மற்றக் காங்கிரஸ் அங்கத்தினர்கள் ஆங்காங்கு நிருமாணத்திட்டத்தைப் பரப்பி, நாட்டில் கல்வியபிவிருத்தி, கதர் அபிவிருத்தி, கைத்தொழில் அபிவிருத்தி முதலிய வேலைகளில் ஈடுபட்டுக் காங்கிரசுக்கு அதிக பலத்தைத் தேடவேண்டும். இத்தருணத்தை நாம் கைசோரவிடலாகாது.

முடிவில் இவ்வியக்கத்தில் ஸ்திரீகளும் முக்கிய பங்கு எடுத்துக் கொண்டால்தான் நாம் பூரண வெற்றியடைய முடியும் என்பதை வற்புறுத்துகிறேன்.''

அரசியலும் வியாபாரமும்

அரசியலுடன் வியாபாரத்தைக் கலப்பதே பிரிட்டனின் வேலையாக இருந்து வருகிறது. அதற்குச் சமீப காலத்துச் சம்பவங்கள் சரியான புத்தி கற்பித்து விட்டது.

சோவியத் அரசாட்சி வருமுன் பிரிட்டன் 1 மிலியன் மீன் அடைத்த பெட்டிகள் ஏற்றுமதி செய்துக் கொண்டிருந்தது.

போல்ஷிவிக் எதிர்ப்பில் அதுதான் முதலில் தடுக்கப்பட்டது. நெருக்கடியினால் ஏற்பட்ட அவசியத்திற்காக மீன் பிடிக்கும் கப்பல்களைத் தயாரித்த ரஷ்யா ஆறுமாத காலத்தில் 227,000 பவுன் பெறுமானமுள்ள மீனைப் பிரிட்டனுக்கே ஏற்றுமதி செய்திருக்கிறது.

புதிய புஸ்தக வெளியீடுகள்.

புதிய புத்தகங்கள் பிரிட்டனைவிட ஸோவியத் ரஷ்யாவில்தான் அதிகமாக வெளிவருகின்றன என்று புக்ஸெல்லர் (Book Seller) என்ற பத்திரிகை அறிவிக்கிறது. 1931 வருஷத்தில் ஜெர்மனி, பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், முதலிய தேசங்களில் வெளி வந்த புஸ்தகங்களின் மொத்த வெளியீடுகளை விட அதிகமாக ரஷ்யாவினின்றும் வெளி வந்திருக்கின்றது. முக்கால் வாசி ரஷ்யப் புத்தகங்கள் 'பாமர' மக்களுக்காகவே எழுதப்படுகின்றன. சிறிய புத்தகங்கள் தாம். கொஞ்சமான பிரசுரங்கள் தாம். அவைகள் அதிகமாக சமூக சாஸ்திரத்தையும் ஸயன்ஸையும் பற்றித் தாம் இருக்கின்றன. அவ்வளவும் ஐந்து வருஷத்திட்டத்தின் ஒரு அம்சம்.

மாற்றானுக்கு

இடங்கொடேல்!

திரு. அவினாசிலிங்கம் தலைமையுரை

சென்னை ஜில்லா அரசியல் மகாநாட்டில் தலைமை வகித்த கோயமுத்தூர் திரு. அவினாசிலிங்கம் அவர்கள் செய்த பிரசங்கத்தின் சாரம்:—

இன்று அந்நிய ஆட்சியை மாற்றிச் சுயராஜ்யமடைய வேறொரு வழியைக் கடைப்பிடிக்க முன்வந்திருக்கிறோம். சர்க்காரின் அடக்குமுறை தனது இயல்பினாலேயே தன்னை அழிக்கும் ஒரு சக்தியை உண்டாக்கி விடுகிறது. ஊக்கமில்லா மக்களுக்கு ஊக்கத்தை உண்டாக்க ஓரளவு அடக்குமுறை அவசியமே. சர்க்காரின் அடக்குமுறை நமக்குள் ஒரு புதிய சக்தியையும் உணர்ச்சியையும் உண்டாக்கி யிருக்கிறது. இதற்காக ஒருவகையில் நாம் சர்க்காருக்கு நன்றி செலுத்தவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆயிரக்கணக்கான தொண்டர்கள் அடிபட்டு, கால் ஒடிந்து, கை முறிந்து விழ்ந்ததையும், பலர் பாரததேவியின் பாதத்தில் தங்கள் உயிரையே அர்ப்பணம் செய்ததையும் அவர்கள் பார்த்தனர். திருப்பூர் வீரன் குமாரசாமி, பம்பாய் பாபுகானு இவர்களின் தியாகத்தைப் பற்றிப் பத்திரிகைகளின் வாயிலாக அறிந்தனர். அன்று மறியல் செய்யப்பட்ட விதேசித் துணிக்கடைகளும், கள்ளு, சாராயக் கடைகளும், இன்று குதூகலமாக நடைபெறுவதையும் அவர்கள் காண்கிறார்கள். இவைகளையெல்லாம் அவர்கள் தோல்வியின் அறிகுறிகளாகப் பாவிக்கின்றனர்.

ஆனால், சரித்திர ஆராய்ச்சியுள்ளவர்களும், பரந்த நோக்கமுடையவர்களும் அவ்வாறு எண்ணமாட்டார்கள். எந்தத் தேசமும் ஒன்றிரண்டு வருடங்களில் சுதந்திரம் பெற்றதில்லை. பூர்ண சுதந்திரம் அடைவதற்குமுன் சுதந்திர உணர்ச்சியைத் தலைமுறை தலைமுறையாக ஜனங்களிடையே ஊட்டவேண்டியிருந்தது. நாம் இந்த இயக்கத்தால் ஜனங்களிடையே அந்த உணர்ச்சியைப் பரப்பியிருப்போமாகில் இந்த இயக்கம் வீணாகப் போய்விட்டது என்று சொல்லமுடியாது. தோல்வி யெனக் கருதப்படும் இவை வாஸ்தவத்தில் தோல்வியேயல்ல; இவைகளே வெற்றிக்கு வழி.

நாமும் மனிதர் என்று மற்றச் சுதந்திர தேசத்தாரோடு சரிசமானமாகத் தலைநிமிர்ந்து நிற்க வேண்டுமாயின் வறுமை, பிணி, படிப்பின்மை, இவைகளைப் போக்க வழி தேடவேண்டும்.

இவற்றைச் செய்து முடிக்கவே காங்கிரஸ் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது.

இவற்றை யெல்லாம் சாதித்து முடிக்கக் காங்கிரஸ் தெளிவான ஒரு திட்டத்தை நமக்குக் கொடுத்திருக்கிறது. கதர் உற்பத்தி, தீண்டாமை விலக்கு, சமூக ஒற்றுமை, மதுவிலக்கு, தேசியக் கல்வியைப் பரப்புதல், குடிசைத் தொழில் அபிவிருத்தி, பொருளாதார, சமூக, சுகாதார முதலிய துறைகளில் கிராமப் புனருத்தாரணம், மக்களுக்குப் பொது அறிவைப் புகட்டுதல், தொழிலாளர் சங்கங்களை ஸ்தாபித்தல் முதலிய வகைளால் நம் தேசத்தை முன்னேற்ற மடையச் செய்யலாம்.

தற்பொழுது தேசத்தின் முன் நிற்கும் முக்கியமான பிரச்னை காங்கிரஸ் சட்ட சபைகளைக் கைப்பற்ற முன் வந்திருப்பதே. மகாத்மாஜீயும் அத்திட்டத்திற்குத் தமது பூரண ஆதரவை அளித்திருக்கிறார். சில வருங்களுக்கு முன்புவரை இந்தத் திட்டத்தை முற்றிலும் எதிர்த்த மகாத்மாஜீயும் மற்ற தலைவர்களும் இப்பொழுது இதற்கு ஆதரவு அளித்திருப்பதன் கருத்து அநேகருக்கு விளங்காதிருக்கிறது. சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு அவர்களது அபிப்பிராயங்களும் மாறுபட்டிருக்கின்றன. அக்காலத்தில் ஒரு சிலரே தேச சேவையில் ஈடுபட்டிருந்தனர். அவர்களையும் சட்ட சபைக்கு அனுப்பி விட்டால் மற்ற முக்கிய வேலைகளைக் கவனிக்கப் போதிய தொண்டர்கள் இல்லாது போய் விட்டிருக்கும். ஆனால் இப்பொழுதோ 1930, 32ம், வருடங்களில் ஆரம்பித்த இயக்கங்களின் காரணமாய் ஆயிரக்கணக்கான மக்கள் தங்களுடையது எல்லாவற்றையும் தியாகம் செய்து விட்டு, தேசத் தொண்டே பெரிதெனக் கொண்டு வேலை செய்ய முன் வந்துள்ளார்கள். இதற்கிடையில் சட்ட சபையில் தகுதியான அங்கத்தினர்கள் இல்லாத காரணத்தால், சர்க்கார் தங்களுக்கு வேண்டிய அடக்கு முறைச் சட்டங்களை நிறை வேற்ற இச் சபைகளைக் கருவிகளாக உபயோகித்து வந்திருக்கின்றனர். ஆர்டினன்ஸ், கன்சாலிடேஷன் ஆக்ட், வங்காளக் கிரிமினல் சீர்திருத்தச் சட்டம் முதலியவைகளே இதற்குப் போதிய சான்றாகும். மேலும் அச்சட்டங்கள் இந்தச் சபைகளில் நிறைவேற்றப்பட்ட காரணத்தால், தேச மக்களுடைய ஆதரவும் நம்பிக்கையும் தங்கள்பால்தானிருக்கிறதென சர்க்கார் பறைசாற்றிக் கொள்ளுகிறார்கள். இதைப் பொய் என்று நிரூபிப்பது நமது கடமை.

காங்கிரஸ் சட்ட சபையில் செய்யவிருக்கும் வேலைகளைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவிலுள்ள எல்லாக் கட்சியாரும் வெள்ளைக் காகிதத் திட்டத்தைப் பற்றி ஒரே அபிப்பிராயம் கொண்டுள்ளார்கள். அதாவது நமக்குக் கிடைக்கும் உரிமைகளைவிட ஆளுவோருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புக்களே மிக அதிகம். தற்போதுள்ள அரசியல் அமைப்பைவிட அது அநேக விதங்களில் பிற்போக்கானது. அப்படி யிருந்துங் கூடச் சிலர் இத்திட்டத்தை ஏற்று அதை நடத்திக் காட்ட வேண்டுமெனச் சொல்லுகிறார்கள். இத்திட்டத்தைத் தகர்த்தெறிதலையே தனது முக்கிய வேலையாகக் காங்கிரஸ் கொள்ளும். சுதந்திரம் ஒரு தேசத்தாரால் மற்றொரு தேசத்தாருக்கு வழங்கப்பட முடியாது. நாம் அனுபவிக்க வேண்டிய சுதந்திரத்தின் அளவை அந்நிய நாட்டார் நிர்ணயிப்பதென்பது நமக்குப் பெரிய அவமானம். உண்மையான சுதந்திரம் நமக்குள்ளிருந்தே உதயமாக வேண்டும். அது நம்மாலேயே நிர்ணயிக்கப்பட வேண்டும். இதுதான் சுய நிர்ணய சபையின் தத்துவம்.

நாம் தேர்தலுக்கு நிற்கப் போகிறோம். நம்முடைய போர் முறை காங்கிரஸின் புனிதமான உயர்ந்த கொள்கைகளுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். மற்றக் கட்சியார் கையாளும் சந்தேகத்திற் கிடமான முறைகள் நமக்கு வேண்டாம். நமது முறை நேர்முறையாக இருக்கட்டும். பொது ஜனங்களுக்குக் காங்கிரஸ் திட்டத்தை

எடுத்துச் சொல்லுவோம். காங்கிரஸ் எதற்காகப் பாடுபடுகிறது என்பது அவர்களுக்குத் தெரியும். நாம் சாதாரணமாக நினைப்பதைவிட வோட்டர்கள் கூரிய அறிவு வாய்ந்தவர்கள். காங்கிரஸ் கட்சிக்கு வோட்டுக் கொடுத்தால் அது தேசத்தின் விடுதலைக்காகவும், நமது பாமர மக்களின் முன்னேற்றத்திற்காகவும் வோட்டுக் கொடுத்ததாகும்; காங்கிரசுக்கு விரோதமாக வோட்டுக் கொடுத்தால் அது நமது அடிமைத்தனத்தை நீடிக்கச் செய்ய வோட்டுக் கொடுத்ததாகும் என்று அவர்கள் நன்கறிவார்கள். சென்ற சத்தியாக்கிரக இயக்கத்தின் காட்சிகள் அவர்கள் மனதில் பதிந்திருக்கின்றன. குமாரசாமி, பாபுகானு இவர்களை எவரும் மறந்துவிடவில்லை. ஆகையால் அன்பர்களே! காங்கிரஸ்பாலுள்ள அன்பு மக்களின் மனதில் வேரூன்றியிருக்கிறது. நம்மூர், நம் ஜாதி, நம் உறவினர் என்ற அபிமானங்கள் சிலருக்கிருக்கலாம் ஆனால், தேசத்தின் மானத்தைக் காப்பாற்ற வேண்டிய நெருக்கடியான காலங்கள் ஏற்படும் பொழுது அவர்களது இருதயங்களில் ததும்பிக் கொண்டிருக்கும் தேசபக்தியும், சுதந்தர உணர்ச்சியும், இவ்வற்ப பந்தங்களை உதறித் தள்ளிவிட்டு, இந்தப் பெரிய தேசிய சபைக்குத் தங்களுடைய பூரண ஆதரவையும் கொடுப்பதற்குத் தூண்டுகோலாக இருக்கும் என்பது எனது திடமான நம்பிக்கை.

வந்தேமாதரம்

சென்னை ஜில்லா அரசியல் மகாநாடு

நிறைவேறிய தீர்மானங்கள்

1. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியும், காரியக் கமிட்டியும் பாட்னா, வார்தா, பம்பாய், காசி இவ்விடங்களில் நிறைவேற்றின தீர்மானங்களை இம்மகாநாடு முழுமனதுடன் வரவேற்கிறது. சென்னைக் காங்கிரஸ்வாதிகளை இத்தீர்மானங்களின் நோக்கங்கள் சித்தி பெறும் வண்ணம் நிறைவேற்றி வைக்குமாறு வேண்டிக் கொள்ளுகிறது.

2. காங்கிரசின் பொதுஜன சேவைக்கு அனைவரும் பூரண ஆதரவு கொடுக்குமாறு இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது. காங்கிரசின்பால் சர்க்கார் அனுஷ்டித்து வந்த முறைகளை வாக்காளர்கள் ஆதரிக்கவில்லை யென்பதை வாக்காளர்கள் ஓட்டுக் கொடுப்பதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளுகிறது.

3. தேர்தலில் பயமுறுத்தியோ லஞ்சம் கொடுத்தோ ஓட்டு வாங்குவதைத் தடுப்பதற்கும், வாக்காளர்கள் சுதந்தரத்துடன் தங்கள் ஓட்டுகளைக்கொடுப்பதற்கும் தேசபக்தர்கள் உழைப்பார்களென இம்மகாநாடு எதிர்பார்க்கிறது.

4. வாழ்வில் எல்லாத் துறையிலும் அதுவே நம்முடையநாடு விடுதலையடைய சாதனமென்றும் இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

5. நூல் நூற்பவர்களுக்கும் கைத்தறித் தொழிலாளர்களுக்கும் பெரும் ஆதரவு அளிக்கும் கதரையே மக்கள் அணிய வேண்டுமென இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

6. ஹரிஜன விடுதலைக்காக மகாத்மா காந்தியடிகள் செய்த சுற்று பிரயாணம் திருப்திகரமாக முடிவடைந்ததைப்பற்றி இம்மகாநாடு அளவிலா மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

7. ஹரிஜனங்கள் தினசரி வாழ்விலும், சமூக மத சம்பந்தமாகவும் அனுபவிக்கும் கஷ்டங்களை நிவர்த்திக்க இன்னும் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளுமாறு இந்த நகரவாசிகளை இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

8. தேச பாஷையாகிய ஹிந்தியைத் தென்னிந்தியப் பெண்களும், ஆண்களும் கற்றுக்கொள்ள வேண்டுமென இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

9. ஒட்டாவா ஒப்பந்தத்தில் நாட்டிற்குப் பெரிய தீங்கு ஏற்பட்டிருக்கிறதென இம்மகாநாடு திடமாக அபிப்பிராயப்படுகிறது. அந்த ஒப்பந்தத்தையும், எவ்வித ஏகாதிபத்தியச் சலுகையையும் முற்றிலும் எதிர்க்குமாறு வியாபாரிகளையும், தேசீயப் பத்திரிகைகளையும், சட்டசபை அங்கத்தினர்களையும் கேட்டுக் கொள்ளுகின்றது. தவிரவும் வரும் அகில இந்தியச் சட்டசபைத் தேர்தலில் வியாபாரத்தொகுதி ஓட்டர்கள் இதையே முக்கியப் பிரச்சினையாகக் கொண்டு முடிவு செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிறது.

10. பொது ஜனங்களின் சௌகரியத்திற்காகவும், போக்கு வரத்திற்காகவும் உபயோகிக்கப்படும் வண்டிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் அதிக வரிப் பளுவைக் குறைக்கும்படி இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

11. கிழக்கிந்திய ரயில்வே, வடமேற்கு ரயில்வே, வங்காள நாகபுரி ரயில்வே முதலிய மற்ற ரயில்வேக்களிலுள்ள சத்த விகிதப்படி தென்னிந்திய ரயில்வே மதராஸ் தென்மஹாராஷ்டிர ரயில்வேக் கம்பெனிகள் தங்கள் சத்த விகிதத்தைக் குறைத்துக் கொள்வதுடன் மூன்றாவது வகுப்புச் சத்தத்தை அதிகமாகக் கம்மி செய்யும்படி இம்மகாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

12. இம்மகாநாட்டில் நிறைவேறிய இரண்டாவது தீர்மானத்தை ஒட்டி, வாக்காளர்களின் ஆதரவைக் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்குச் சேர்த்து, சென்னை நகருக்கும், மாகாணத்தின் மற்ற தொகுதிகளுக்கும் நியமிக்கப்பட்டிருக்கும் திரு. சத்தியமூர்த்தி, திரு. சி. என். முத்துரங்க முதலியார், டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா, திரு. டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார், திரு. சாமி வெங்கடாசலம் செட்டியார் இவர்களுக்குப் பூரண வெற்றியளிப்பதில் உண்டான வேலையின் முக்கியத்தை உணர்த்துவதுடன், எல்லாக் காங்கிரஸ்த் தொண்டர்களும் இடைவிடாது முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

மின்வெட்டு

—

அதிகாலப் பைபில் 1 லட்சம் பொன் விலே.

—செய்தித் தலேப்பு.

அதிகமான காலம் புதைக்கப்பட்ட ஒயினிற்கும் விலேயதிகம்தான்.

* * *

ரோமோனியோவில்........இளமங்கை ஆறு குழந்தைகளே ஒரே சமயத்தில் பெற்ருளாம். அவற்றில் இரண்டுபோக மற்ற நான்கு சுகமாக இருக்கிறவைதாம். கானடாவில் ஒரு மாது ஐந்து குழந்தைகளேச் சமீபத்தில் பெற்ருள். ஐந்தும் சுகமாயிருக்கின்றன.

—பத்திரிகைச் செய்தி.

கர்ப்பத்தடைப் பிரசாரத்தில் அர்த்தமிருக்கிறது.

* * *

ஸ்வீடன் தேசத்தில் ஒரு வாத்திற்கு மூன்று தலேகளும், மூன்று கண்களும் இருக்கின்றனவாம்.

—பத்திரிகைச் செய்தி.

எங்கள் சிவபிரானுக்கு மூன்றே கண்கள் தான்.

* * *

ஓஹியோவில் இரண்டு சகோதரர்கள் முடக்குவாத நோயால் மரணப்படுக்கையில் இருக்கிருர்கள். வைத்திய நிபுணர்கள் அவர்களேப் பெண்ணுக்கி விடலாம் என்றும் அப்படிச் செய்தால் உயிர் பிழைத்து விடுவார்கள் என்றும் சொல்லுகிருர்கள்.

—பத்திரிகைச் செய்தி.

நரியைப் பரியாக்க முடியுமானல், இதில் என்ன கஷ்டம்.

* * *

ஏ! சமூகமே! இன்னுமா தூங்குவாய்?

—கட்டுரைத் தலேப்பு.

பின் என்ன செய்ய!

* * *

யான் ஏன் பெண்ணுகப் பிறந்தேன்.

—கட்டுரைத் தலேப்பு.

கல்யாணம் பண்ணிக்கொள்ள!

* * *

பெண்டாட்டி எமன்.

—கட்டுரைத் தலேப்பு.

யமனுக்குப் பெண்பாலா?

* * *

வாழ்க்கையில் கசப் படைந்து, பரீட்சையில் தோற்ற மாணவன் தற்கொலே.

—செய்தித் தலேப்பு.

சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்!

* * *

ஐயர் மகன் படையாச்சி!

—செய்தித் தலேப்பு.

நிஜமாகவா?

* * *

பார்சலேக் கொண்டு வந்தவர் யார்?

—செய்தித் தலேப்பு.

தபால்காரன்!

* * *

இன்ஸ்பெக்டருக்கு வசவு, டிராம் கண்டக்டருக்கு அபராதம்.

—செய்தித் தலேப்பு.

தென்ன மரத்திற்குத் தேள் கொட்டினல் பனே மரத்தில் நெறிகட்டுமாம்.

* * *

கோதுமை சாகுபடி.

2933–34ம் வருஷத்தில் இந்தியா முழுவதிலும் 366620000 ஏக்கர் நிலத்தில் கோதுமை சாகுபடியாயிற்று. விளேவு 9358000 டன்.

—பத்திரிகைச் செய்தி.

பட்டினி கிடக்க இவ்வளவு போதும்!

* * *

லார்ட் வில்லிங்டனுக்குச் சிலே.

—செய்தித் தலேப்பு.

பூஜை உண்டா?

* * *

சங்கீதக் கிணறு.

—செய்தித் தலேப்பு

ஒரு குடம் சங்கீதம் எடுக்க முடியுமா?

* * *

கல்லும் மண்ணும் தின்னும் மனிதன்.

—செய்தித் தலேப்பு.

"கல்லேத்தான் மண்ணேத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தன" என்று அங்கலாய்த்தவரின் ஆசை பூர்த்தியாயிற்று போல் தெரிகிறது.

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்.

நொண்டி

("கூத்தன்")

இந்தச் சம்பவம் எனக்குக் கொஞ்ச நாட்களுக்கு முன் நேர்ந்தது.

ரயிலில், ஒருவரும் இல்லாத தனி வண்டியாகப் பார்த்து, சௌகரியமாகப் படுக்கையை விரித்துவிட்டு, தொந்திரவில்லாமல் பிரயாணம் செய்யலாம் என்று நினைத்துக்கொண்டே உட்காருமுன், மறுபடியும் வண்டியின் கதவு திறக்கப்பட்டது.

"ஜாக்கிரதையாக ஏறுங்கள்; தரையிலிருந்து படி வெகு உயரமாக இருக்கிறது" என்றது ஒரு குரல்.

"அதெற்கென்ன, நான் கெட்டியாகத்தான் பிடித்துக் கொண்டிருக்கிறேன்" என்றது மற்றொரு குரல்.

கதர் குல்லாயணிந்த தலை, பிறகு இரும்புக் கம்பியைக் கெட்டியாகப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கும் இரு கைகள், மெதுவாகத் தடித்த சரீரத்தை அப்படியே உயர இழுக்கும் பொழுது, மரக்கட்டைகள் ரயில் வண்டியின் படிகளில் இடிபடும் சப்தம் கேட்டது.

மனிதனின் உடம்பு மேலே வந்ததும், தொளதொளவென்று பஞ்சகச்சம் வைத்துக் கட்டிய வேஷ்டிக் கிடையில், இரண்டு மரக் கால்கள் தெரிந்தன.

"சரிதானே ஸார்" என்று வெளியேயிருந்த குரல் கேட்டது.

"ஆமாம் அப்பா" என்றார் வந்தவர்.

"இதோ இருக்கிறது. உங்கள் கைத் தடியும் மூட்டைகளும்."

வேலைக்காரன் உள்ளே வந்து கையிலிருந்த மூட்டைகளை மேற்பலகையில் ஒவ்வொன்றாக வைத்தான்.

"ஐந்து மூட்டைகள், பட்சணங்கள், விளையாட்டுப் பொம்மைகள், கொட்டு, விளையாட்டுத் துப்பாக்கி, புதிதாக வாங்கிய துணிகள்."

"சரி! சரி!"

"சௌகரியமாகப் போய்விட்டு வரணும்" என்று கும்பிட்டான்.

"உன் உடம்பையும் பார்த்துக் கொள்" என்று ஒரு ரூபாயை அவன் கையில் கொடுத்துவிட்டுச் சிரித்தார்.

அவனும் கதவைச் சாத்திக்கொண்டு போய்விட்டான்.

வந்தவருக்கு வயது முப்பது அல்லது முப்பந்தைந்திற்கு மேல் இராது; தலை பூராவும் நரைத்துவிட்டது. கதர் உடைதான், நல்ல கறுத்து அடர்ந்த மீசை, திடீரென்று வந்த ஊனத்தினால், உழைப்பு நின்றுவிட, அதனால் ஏற்பட்ட உடல் பருமன்.

வந்தவர் முகத்தைக் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டு, "பீடி குடித்தால் உங்களுக்குத் தொந்திரவாக இருக்காதே?" என்றார்.

"தாராளமாகக் குடியுங்கள்"

அந்தப் பார்வை, அந்தக்குரல், எங்கோ கேட்டமாதிரி இருக்கிறது. எங்கே? எப்பொழுது? அதுதான் ஞாபகம் வரவில்லை.

அவரும் என்னையே கவனித்துக் கொண்டு இருந்தார். அவருக்கும் பிடிபடவில்லைபோல் இருக்கிறது.

இப்படி மரியாதைக் குறைவாக வெறுகுபோல் விழிப்பதில் கூச்சமாயிருந்ததால் முகத்தைக் கொஞ்சம் வேறு பக்கம் திருப்பினேன். ஆனால் இந்த மனம் இருக்கிறதே! மறுபடியும் கண்கள் அந்தத் திசையே நோக்கின.

"தங்களை எங்கோ பார்த்தமாதிரி இருக்கிறதே. எனக்குப் பிடிபடவில்லை" என்றேன்.

"அப்படித்தான் எனக்கும் இருக்கிறது" என்றார்.

"என் பெயர் ஹரிஹரமய்யர், ரெவினியு இன்ஸ்பெக்டர்" என்றேன்.

அவரும் கொஞ்சம் யோசித்தார். "ஆமாம் ஸார் நாம் சென்னையில் நான்கு வருஷங்களுக்கு முன் சந்தித்ததாக ஞாபகம்" என்றார்.

"ஆமாம், ஆமாம், தாங்கள் தான் தொண்டர் ராமகிருஷ்ணனே?"

"ஆமாம்! இந்தக் கால்கள் தடியடியில் போகும்வரை தொண்டனாக இருந்தேன்."



திருவல்லிக்கேணி 'வேல்ஸ் இளவரசர் குழந்தைகள்' ஆஸ்பத்திரிக்கு மாட்சிமை தங்கிய சென்னைக் கவர்னர் ஸர். ஜார்ஜ் ஸ்டேன்லி அஸ்திவாரக் கல் நாட்டினர். படத்தில் கவர்னரும், லேடி ஸ்டேன்லியும், ஸர். உஸ்மானும் காணப்படுகிறார்கள்.

—P.P.B.

நினைவு வந்து விட்டது. நான்கு வருடங்களுக்குமுன், என்ன அழகு, என்ன வாலிபம். மெலிந்தாயினும் நல்ல கட்டுள்ள உடல். அவரைப்பற்றி நினைவிலிருக்க வேண்டிய காரணங்கள் உண்டு. ஆமாம், அவரைப்பற்றிய ஒரு காதல் விஷயம். நன்றாக நினைவிற்கு வருகிறது. அந்தப் பெண் மனோன்மணி, மறியலுக்காக வந்த ஸ்திரீ தொண்டர்களில் ஒருத்தி. திருமணத்தை எதிர்நோக்கிக்கொண்டு இருந்தார்கள். என்ன காதல், என்ன குதூஹலம். அப்பொழுதுதான் அவர்களைச் சந்தித்தேன்.

எனது கண்கள் மேலே பலகையில் இருந்த விளையாட்டுச் சாமான்களில் சென்றன. ரயில் வண்டி தண்டவாளங்களில் சற்று குதித்துச் செல்லும் பொழுது, அந்த வேலைக்காரனது வார்த்தைகள் நினைவிற்கு வந்தன.

" ஐந்து முட்டைகள், பக்ஷணங்கள், விளையாட்டுப் பொம்மைகள், கோட்டு, விளையாட்டுத் துப்பாக்கி, புதிதாக வாங்கிய துணி."

உடனே பளிச்சென்று எனது மனம், முடிவு பெறாத காதல்கதையின் கதைகளைத்தானே கட்டிக்கொண்டுபோக ஆரம்பித்தது. உலகத்தில் எந்தப் பாகத்திலும் எழுதப்படும் காதல் கதைகளைப் போல்தான். தேச விடுதலைக்காகக் காலிழந்த காதலன், தனக்காகக் காத்திருந்த கன்னியை மணந்து கொள்வது.

நினைக்க நினைக்க அதன் அழகு, அதன் பொலிவு, அதன் தியாகம் எல்லாம் புஸ்தகத்தில் இருக்கிற மாதிரி வெகு எளிதாக நிறைவேறி விட்டன. இந்த மாதிரிச் சம்பவங்களைப் படிப்பதில் எவ்வளவு ஆனந்தம்! அப்படியே தன்னை மறந்து விடுகிறோம், அந்த உயர்ந்த இலக்ஷியத்தில்—உலகத்தில் அப்படியிக்கிறதா? ஏமாற்றந்தான்.

இதைவிட வேறு மாதிரி எனது மனது கதை திரிக்க ஆரம்பித்தது. ஒரு வேளை அவன் கால்களை இழக்குமுன் திருமணமாகி யிருக்கலாம். காலிழந்த கணவனின் பத்தினிப் பெண். அவனது சுகத்திற்காகவே தன்னை தியாகம் செய்துக் கொள்ளும் ஒரு பத்தினிப் பெண்ணின் உருவம் எனது மனக் கண்ணின் முன் தோன்றலாயிற்று.

அவனுக்கு வாழ்க்கை, சுகமா, அல்லது இன்னலா? அதை அறியும்படி ஒரு சிறிய அவா வரவரப் பெரிய, ஆசையாகி விட்டது.

நான் பேசிக் கொண்டுதான் இருந்தேன். மனது அதிவேகமாக வேறு பக்கம் ஓடிக்கொண்டிருந்தது. "அவனுக்கு மூன்று குழந்தைகள் இருக்கலாம். இரண்டு ஆண்கள், ஒரு பெண், பொம்மைகள் பெண்ணுக்கு, மற்றவை ஆண்களுக்கு, புதிய துணி தனது மனைவிக்கு"

திடீரென்று, "உங்களுக்குக் குழந்தைகள் இருக்கின்றனவா?" என்றேன்.

"இல்லை" என்றார்.

மரியாதைக் குறைவாக நடந்து கொண்ட மாதிரி எனது மனதில் ஒரு குழப்பம் ஏற்பட்டது.

"மன்னிக்க வேண்டும், சாமான்களைக் கண்டவுடன் கேட்டேன். காதில் விழுவதைக் கேட்காமலிருக்கலாம், கண்டதை வைத்துக் கொண்டு அனுமானிக்கலாம்" என்றேன்.

புன்சிரிப்புடன், "இன்னும் எனக்குக் கலியாணங் கூட ஆக வில்லை," என்றார்.

திடீரென்று ஞாபகப்படுத்திக் கொண்டவன் போல், "மன்னிக்க வேண்டும், மனோன்மணியம்மாள்............?"

"தங்களுக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது" என்றார்.

"மனோன்மணியம்மாள் யாரையோ கலியாணம் செய்துக் கொண்டதாகவும் ஒரு வதந்தி..........."

"மிஸ்டர் பார்வதி நாதனை..........."

"தங்கள் காயங்கள்தான் அதற்குக் காரணம் என்றும்..........." முகத்தை நன்றாகக் கவனித்தேன். முகம் வெட்கத்தால் சிவந்தது.

தோற்றுப் போனகட்சியை, தோற்று விட்டது என்று தெரிந்த பிறகும் வாதிப்பவர் போல், ஒரு பரபரப்புடன் பேசிக் கொண்டே போனார்.

"மிஸ்டர் பார்வதிநாதனுடைய பெயருடன் என்னையும் முடிச்சு போடுவது வெறும் அபத்தம். நான் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறியதும், அவள் என்னைக் கலியாணம் செய்து கொள்ள நான் அனுமதிக்கவே யில்லை. அனுமதிப்பேனா? அதுதான் செய்யலாமா? கருணையைக் காண்பிக்கவா ஒருவனைக் கலியாணம் செய்துகொள்வது? ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணியும், ஒவ்வொரு நிமிஷமும், ஏன்? ஒவ்வொரு வினாடியும் கூட வாழவே ஒருவனைக் கலியாணம் செய்துகொள்வது. அவனுக்கு என்னைப்போல் கால் இல்லாமலிருந்தால் மரணம் வரைத் துன்பந்தான். தியாகத்தைப் போற்றுகிறேன். ஆனால் எனக்காக ஒரு பெண்ணின் வாழ்க்கையையே தியாகமாக்க நான் சம்மதிக்க மாட்டேன். நான் நடக்கும் பொழுது எல்லாம் இந்த மரக் கால் 'லொட்டு லொட்டு' என்று இடியாக முழங்குகிறது. அவளை முத்தமிட நெருங்கு முன் இந்த சப்தந்தானே காதைத் துளைக்கும். அதை அவள் சகித்துக்கொண்டு இருக்கும்படி செய்வேனா! அவள் வேண்டுவது புருஷன்; நான் வேண்டுவது அடிமை, பணியாள், அல்லது தாய். இது ஒத்து வருமா ?"

பிறகு மௌனமாக இருந்தார். அவர் சொல்வது சரி என்று பட்டது. அவளைக் குற்றம் சொல்ல முடியுமா? ஆனால் எனக்கு என்னவோ சுவாரஸ்யமான கதையின் இறுதியைப் பிய்த்து விட்ட மாதிரி பட்டது. எனது கதை உணர்ச்சி சாந்தியடையவில்லை. என்னவோ ஏமாற்றப்பட்ட மாதிரிதான் இருந்தது.

" மனோன்மணி யம்மாளுக்குக் குழந்தைகள் இருக்கின்றனவா ?" என்று திடீரென்று கேட்டேன்.

" ஒரு பெண்ணும் இரண்டு ஆணும் இவைகள் எல்லாம் அவர்களுக்குத்தான். அவள் புருஷன் என்மேல் அதிகப் பிரியமாக இருக்கிறார்."

அதற்குள் அந்தச் சிறு டன்னல் (Tunnel) வழியாக ரயில் சென்று பிளாட்பாரத்தில் நின்றது.

அவருக்கு உதவி செய்யும்படி நான் எழுந்தேன். அதற்குள் இரண்டு கைகள், திறந்த கதவின் வழியாக நீட்டப்பட்டன.

அந்த மனிதனுக்குப் பின், அவருடைய மனைவி குழந்தைகளுடன், நின்றாள்—அதரத்தில் புன்சிரிப்பு.

குழந்தைகள், வெளியில் வைத்த சாமான்களைத் தூக்கிக் கொண்டன. இந்த நொண்டி பிளாட்பாரத்தில் இறங்கியதும் குழந்தைகள் அவரைச் சுற்றிக் கொண்டன.

எல்லாரும் வெளியே புறப்பட்டார்கள். அந்தப் பெண் குழந்தை, அவர் அக்குளில் கொடுத்து ஊன்றி நடந்த தடிகளைத் தனது சிறிய விரல்களால் பிடித்துக் கொண்டே நடந்தது.

உலக சமாதானம் சாத்தியமா?

நம்பிக்கைக்கு இடமில்லை

திரு. கிருஷ்ணசாமி ஐயங்கார் சென்னை பிரஸிடென்ஸி கலாசாலையில் பேசியதின் சாரம்.

யுத்த சன்னதராக இருந்தால்தான் போரை நிறுத்தமுடியும் என்று ஒவ்வொரு தேசமும் நினைக்கிறது. ஒவ்வொரு தேசமும் தனது பக்கத்திலிருக்கும் தேசத்தை நம்பவில்லை. இப்பொழுது இருக்கும் தேசங்களுக்கிடையில் ஒற்றுமை வருவதற்கு வழியே இல்லை.

ஆதிகாலந்தொட்டு இன்று வரை யுத்தம் அரசியலின் ஒரு முக்கிய அம்சமாக இருந்து வருகிறது. மனிதன் இயற்கையாக சமாதானத்தில்தான் பிரியமாக இருக்கிறான். பலகாரணங்கள் அரசியல் சமத்துவத்தைக் குலைத்து விடுகிறது. நெப்போலிய யுத்தங்களிலிருந்து ஜார் அரசன்காலம் வரை ஏறக்குறைய 50 வருஷங்களாக யுத்தமும் சண்டையும் இருந்து கொண்டிருக்கின்றன. சமாதானத்தின் சின்னங்கள் தோன்ற ஆரம்பித்தவுடன் இன்னும் ஒரு பெரிய பிரச்னை தொழில் அமைப்பைப்பற்றி வந்திருக்கிறது. அதனால் பல சண்டைகள். வியாபார முன்னேற்றம், முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்குமிடையேயுள்ள அபிப்பிராய பேதங்கள், தொழிலாளரின் ஒற்றுமை, பொறுப்பற்ற ஏதேச்சாதிகார அரசியலின் கொடுங்கோன்மை, இவையெல்லாம் சேர்ந்து அரசியலும் தொழிலாளிகளும் தட்டுமறிக்கச் செய்கின்றன. இதற்கு ஓரளவு அரசியல் அமைப்பே காரணம் என்று சொல்லலாம்.

குடியேற்றம்

தேவைக்கு மிஞ்சிய பொருள்களைத் தயாரிப்பதனால், அரசாங்கங்களுக்கிடையே பொருமை வளருகிறது. புதிய மார்க்கெட்டுகளை—தங்கள் பொருள்களை வியாபாரம் செய்ய—பிடிக்க அவசியம் ஏற்படுகிறது. இதனால் வெளி தேசங்களில் சென்று குடியேறுவது அவசியமாகின்றது. குடியேற்றத்தினால் பெரிய சாம்ராஜ்யங்கள் வளர்ந்தன. இதற்கு அதிக வசதியும் இல்லை; இதனால் சுதந்திரமும் போய்விட்டது. ஆனாலும் சாம்ராஜ்யங்கள் எப்படியாவது நிலைத்திருக்க முயலுகின்றன.

படையுள்ளவன் எந்தச் சிறிய காரணத்தை வைத்துக் கொண்டும் யுத்தம் தொடங்கத் தயாராக இருப்பான். உலக மகாயுத்தத்தின் காரணமும் இதுதான். யுத்தத்தை ஒழித்துவிடுவதற்காக இந்த மகாயுத்தத்தைத் தொடங்கினார்கள். அதனால் எவ்வளவு பொருளும் உயிரும் வீணாகச் சிதைந்தன என்று எல்லாருக்கும் தெரியும். பிறகுதான் சாந்தியை ஏற்படுத்தப் படைகள் வேண்டியதில்லை என்ற அறிவு வந்தது.

பிறகு சர்வதேச சங்கம் உண்டாயிற்று. சமாதானத்தை நிலைநிறுத்த அதனால் முடியவில்லை. சில தேசங்கள் அதிகமான பணத்தில் கொழுத்திருக்கின்றன; சில கடனில் மூழ்கிக்கிடக்கின்றன. செல்வம் படைத்த தேசங்கள் மற்றவைகளின் உற்பத்திப் பொருள்களை அப்படியே கபளீகாம் செய்துவிட முயலுகின்றன. கடன்பட்ட தேசங்கள் கடனை மறந்துவிட யத்தனிக்கின்றன. ஒவ்வொரு தேசமும் அண்டையிலிருக்கும் தேசத்தைச் சந்தேகப்படுகின்றன. தனக்கு வேண்டியதைத்தானே உற்பத்தி செய்பமுயலும் பொழுது பக்கத்திலிருக்கும் நாடுகளை ஏமாற்றிக்கொள்ளையடிக்க வேண்டியதாகிறது. இப்படிப்பட்ட சமயத்தில் உலக சமாதானம் சாத்தியமாகுமா?



ஹானரபிள் பொப்பிலி ராஜா சென்ற சனிக்கிழமை திருப்பதி தேவஸ்தானத்தில் ஒரு சத்திரத்திற்கு அஸ்திவாரக் கல் நாட்டினார். படத்தில் ஹானரபில் சர். எச். ஜி. ஸ்டேரக்ஸ், லேடி ஸ்டோக்ஸ், ஹானரபில் பொப்பிலி ராஜா திவான்பகதூர் விஜயராகவாச்சாரி, ராவ்பகதூர் சீத்தாராம ரெட்டியார் முதலியோர் காணப்படுகின்றனர். —P.P.B.

ரசாயன ஆராய்ச்சிக்கு நன்கொடை

பர்மிங்காமில் வசிக்கும் ஆல்பர்ட் ஹில்ஸ் என்பவர் ரசாயன சாஸ்திர வளர்ச்சிக்காக 45,000 பவுன் நன்கொடையளித்ததால், பர்மிங்காம் சர்வகலாசாலை அதிகாரிகள் ரசாயன இலாகாவை இன்னும் அதிகப்படுத்தி ஆராய்ச்சிக்குச் சாதகமான வசதிகளை அதிகப்படுத்த உத்தேசித்திருக்கிறார்கள்.



வட்டி விகிதம்.

இம்பீரியல் பாங்கு:—மூன்றரை பெர் [செண்டு.

இங்கிலாந்து பாங்கு:—இரண்டு பெர் [செண்டு.

இரங்கூன் நடப்பு வட்டி.

பவ-ஹு ஆடி	0—4—0

இரங்கூன் தவணை வட்டி.

ஆடி 7-உ	0—3—6

சிங்கப்பூர் நடப்பு வட்டி.

பவ-ஹு ஆனி	0—5—3

சிங்கப்பூர் 3 மாத தவணை வட்டி.

ஆடி 1-உ	0—4—9

கோழும்பு நடப்பு வட்டி.

ஜூன்	0—6—0

செய்கோன் நடப்பு வட்டி.

பவ-ஹு சித்திரை	0—5—3
தவணை வட்டி	0—5—3

சென்னை நடப்பு வட்டி

பவ சித்திரை	0—8—0
வைகாசி	0—7—6
ஆனி	0—7—0
ஆடி	0—6—6

உண்டியல் விலை.

டிமாண்ட் விற்பனை	$156\frac{3}{4}$
„ 30 நாள் தவணை வாங்குவது	$154\frac{1}{4}$

ரப்பர்.

லண்டன், ஆகஸ்டு 13உ

புகைப்போட்ட ஷீட் ஸ்டாண்டர்டு (ரிப்) ராத்தல் ஒன்று வாங்குபவர் விலை 7 7/16 பென்ஸ்.

புகைப்போட்ட ஷீட் விற்பவர் விலை 7 9/16 பென்ஸ்.

லண்டன் லிவர்பூல் ரப்பர் இருப்பு

லண்டன் இருப்பு 51555 டன். ஆகஸ்டு 11-ந் தேதியோடு முடிந்த வாரத்தில் வெளியான ரப்பர் 700 டன்.

லிவர்பூல் ரப்பர் இருப்பு 55681 டன். ஒரு வாரத்திற்கு முந்தியிருந்த ரப்பர் 55467 டன். சென்ற வாரம் வெளியான ரப்பர் (செலவான ரப்பர்) 389 டன்.

தங்கம், வெள்ளி.

சென்னை, ஆகஸ்டு 14உ

சவான் (சில்லரை)	21—12—6
„ மொத்தமாக	21—12—0
ஆலைத்தங்கம் தோலா 1-க்கு	34—6—0
மூனா தங்கம் „	34—1—0

வெள்ளி

1 ரூபா எடைக்கு	0—10—0
100 ரூபா எடைக்கு	60—4—0

கப்பல்.

லண்டன் கிளாஸ்கோ

கிளான் ராஸ்: ஆகஸ்டு 23-ந் தேதி வந்து 27-ந் தேதி புறப்படும்.

கிளான்முரே: செப்டம்பர் 13-ந் தேதி வந்து 6-ந் தேதி புறப்படும்.

ரங்கூன்

எதியோபியா: ஆகஸ்டு 29-ந் தேதி வந்து 30-ந் தேதி புறப்படும்.

எரின்புரா: செப்டம்பர் 3-ந் தேதி வந்து 7-ந் தேதி புறப்படும்.

மலேயா

ரோணு: ஆகஸ்டு 25-ந் தேதி வந்து 28-ந் தேதி புறப்படும்.

ரஜூலா: செப்டம்பர் 8-ந் தேதி வந்து 11-ந் தேதி புறப்படும்.

ரோணு: செப்டம்பர் 22-ந் தேதி வந்து 25-ந் தேதி புறப்படும்.

பாண்டிச்சேரி, சிங்கப்பூர், செய்கோன்

ஜெனரல் மேட்ஜிங்கர்: செப்டம்பர் 4-ந் தேதியும்,

காமிசேயர் ராமேல்: அக்டோபர் 2-ந் தேதியும்

பேர்ஞர்டின் டி சேண்ட் பேரீ: அக்டோபர் 30-ந் தேதியும் சென்னை வந்து சேரும்.

Printed and published by Rama Kasinathan for the India Publications Ltd., at the Oolian Power Press, 56, Thambu Chetty Street, Madras.